இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 179 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 10 புதன்கிழமை 24.05.2017

## கேரளக் கஞ்சாவுடன் இராணுவச் சிப்பாய் வவுனியாவில் கைது

வவுனியா, மே 24
கேரளக் கஞ்சாவுடன் இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்திலுள்ள >> 27

## அலைபேசியில் உரையாடியபடி பயணித்தவர் ரயிலுடன் மோதுண்டு சாவு

கிளிநொச்சி, மே24
கிளிநொச்சி பளை, கச்சார்வெளி தொடருந்துக் கடவையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.
அலைபேசியில் உரையாடிக் >> 26



சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் உச்சம்

# தமிழ், முஸ்லிம் கடைகள் இரத்தினபுரியில் தீக்கிரை

நேற்று அதிகாலையில் சம்பவம்

கொழும்பு, மே 24
சிறுபான்மையினர் மீதான அச்சுறுத்தல்கள், அவர்களுக்குச் சொந்தமான வணக்கத் தலங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றன.
இவ்வாறானதொரு நிலையில் இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தைப் பிரதேசத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இரண்டு வர்த்தக >> 27

## சிறுபான்மையினர் மீதான இனவாதச் செயற்பாடுகளுக்கு சபையில் நேற்றுக் கண்டனம்

கொழும்பு, மே 23
சிறுபான்மையின மக்களுக்கு எதிராக அண்மைக்காலமாக முன்னெடுக்கப்படும் இனவாதச் செயற்பாடுகளுக்கு முதன்மை எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியன நேற்று நாடாளுமன்றத்தில் கடும் கண்டனம் வெளியிட்டன. அத்துடன் இனவாதத்தைப் பரப்பும் குழுக்களுக்கு >> 25

## 7 பிள்ளைகளின் தாயார் விபத்தில் பரிதாபச் சாவு

மகனின் புதிய மோ. சைக்கிளே எமனாகியது

யாழ்ப்பாணம், மே 24
யாழ்ப்பாணத்தில் நடந்த இறப்பு வீட்டுக்குச் செல்வதற்கு பேருந்துக்காகக் >> 26




## முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கண்டித்து

நாடு முழுவதும் நாளை முழு அடைப்புப் போர்

கொழும்பு, மே 24
முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் இனவாதத் தாக்குதல்களைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
நாடு முழுவதிலும் உள்ள சகல முஸ்லிம் மக்களும் இதில் இணைந்து >> 25

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை

# மூன்று நீதிபதிகள் தீர்ப்பாயம் முன்பாக யாழ்ப்பாணத்தில் வழக்கு விசாரணை

தமிழ் நீதிபதிகளை நியமித்தார் தலைமை நீதியரசர்

யாழ்ப்பாணம், மே 24
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மூன்று நீதிபதிகள் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெறவுள்ளது. இதற்கான பரிந்துரையைத் தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் வழங்கினார்.
வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகியோர் தீர்ப்பாயத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். >> 29



## ஞானசார தேரர் கைதாவதை தடுத்தார் பொலிஸ்மா அதிபர்

கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 24
குருநாகல் முஸ்லிம் பள்ளிவாசல் மீது ஞானசார தேரரே தாக்குதல் நடத்தினார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்துப் பொலிஸார் அவரைக் கைது செய்யமுயன்றபோது பொலிஸ்மா அதிபர் அதனைத் தடுத்துவிட்டார்.
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் >> 29

## ஞானசார தேரரைக் கைது செய்தால் நடப்பது வேறு

பொலிஸ் தலைமையகம் முன்பாக பொதுபலசேனா நேற்று எச்சரிக்கை

கொழும்பு, மே 24
இனவாதம் பேசுவதாக ஞானசார தேரரை மாத்திரம் கைதுசெய்யாமல், இனவாதம் பேசும் தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளையும் >> 29

## யூத இன அழிப்பு நினைவில் ஹிட்லர் புகுந்தது போலவே முள்ளிவாய்க்காலில் சம்பந்தன்

சாடுகின்றார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம் மே 24
யூதர்கள் அழிப்பு நினைவு நிகழ்வில் ஹிட்லர் புகுந்தது போலவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் சம்பந்தன், சுமந்திரன் கலந்துகொண்டனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் >> 29

## குரோத உணர்வை தூண்டுபவர்களை கண்டிக்கிறது ஐ.நா.

உடன் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, மே 24
சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள் கடந்த சில தினங்களாக தொடர்கின்ற நிலையில், குரோத உணர்வைத் தூண்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று, ஐ.நா. >> 27

## பிக்குவுக்கு ஒரு சட்டம் அருட்தந்தைக்கு வேறா?

சபையில் கூட்டமைப்பு விசனம்

கொழும்பு, மே 24
ஞானசார தேரர் இனவாதம் பேசி வருகின்றார். அவர் அருகில் நெருங்குவதற்குக் கூடப் பொலிஸார் அஞ்சுகின்றனர். உயிரிழந்த மக்களை நினைவுகூரும் >> 29

நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு:

## சு.க.வும் ஜே.வி.பியும் எதிரெதிர் நிலைப்பாடு

கொழும்பு, மே 24
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் (ஜேவிபி) இரு துருவங்களாக எதிர் எதிர் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. வழிநடத்தல் குழுவின் நேற்றைய கூட்டத்தில் இரு தரப்பும் தமது நிலைப்பாட்டுகளைத் தெரிவித்துள்ளன.
வழிநடத்தல் குழுவின் 58 ஆவது கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் சகலரும் >> 29

புதிய அரசமைப்பில்

## நாட்டின் தன்மை குறித்து இன்று இறுதித் தீர்மானம்

கொழும்பு, மே 24
நாட்டின் சுபாவம் தன்மை ஒருமித்த நாடு என்று இடைக்கால வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மூன்று வகையான வரைவிலக்கணம் >> 29

## முழு அதிகாரப் பகிர்வுக்கு சகல கட்சிகளும் இணக்கம்

கொழும்பு, மே 24
முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட, வழிநடத்தல் குழுவில் உள்ள சகல கட்சிகளும் இணங்கியுள்ளன. அதிகாரப் பகிர்வு >> 27



# மதவாதத்தை தூண்டுவோரை ஒன்றிணைந்து அடக்குவோம்

## ரணில் நேற்றுச் சூளுரை



கொழும்பு, மே 24

பிரிவினைவாதத்தைத் தூண்ட முற்பட்டுத் தோல்வியடைந்த சில கும்பல்கள் தற்போது மதவாதத்தைத் தூண்டப் பார்க்கின்றனர். அதனூடாக இனவாதத்தையும் தூண்டப் பார்க்கின்றனர். அதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. அனைவரும் ஒன்றிணைந்து அவர்களது முயற்சிகளைத் தோற்கடிக்கவேண்டும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர்களை மதிப்புறச் செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாருக்குச் சென்றிருந்தேன். அங்கு எமது நாட்டில் மீண்டும் சமாதானம் நிலை நாட்டப்பட்டுள்ளமைக்கான காரணிகளைக் கண்டறியக்கூடியதாக இருந்தது. வடக்கில் இன்று பயங்கரவாதம் இல்லை. இளையோரின் எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்ற அங்கு அபிவிருத்தி இடம்பெற வேண்டும். மறுபுறத்தில் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தவேண்டும்.

அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. எமது நாட்டில் நீண்டகாலப் பிரச்சினையாகவுள்ள ஒருமைப்பாட்டை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. புதிய அரசமைப்பின் ஊடாக எவ்வாறு ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது? அந்தக் காரணியைக் கண்டறிந்து நாடு என்ற அடிப்படையில் நாம் முன்னோக்கிப் பயணிக்கவேண்டியுள்ளது.

மீண்டுமொரு போர் ஏற்பட அனுமதிக்க முடியாது. நல்லிணக்கம் இல்லாது அபிவிருத்தி ஒருபோதும் சாத்தியப்படாது.

1983ஆம் ஆண்டு எம்மிலும் பார்க்கப்பொருளாதாரத்தில்பின்னடைவில் இருந்த நாடுகள் இன்று அபிவிருத்தியடைந்து முன்னேறியுள்ளன. இதற்குக் காரணம் என்ன? எமது நாடு முகம்கொடுத்த பாரதூரமான போரே இதற்குக் காரணம். போர் ஏற்பட்டிருக்காவிடின் மேற்குறிப்பிட்ட எல்லா நாடுகளையும் விட இன்று நாம் பாரிய முன்னேற்றத்தைக் கண்டிருப்போம்.

வடக்கில் இருந்தும் இளையோர் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர். இந்தச் சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் எதிர்வரும் 10, 15 ஆண்டுகளில் நாம் மத்திய வருமானத்தைப் பெறும் நாடாக மாற முடியும். சமாதானம் மற்றும் ஒருமைப்பாட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்தத் தடை ஏற்படுமாயின் அதனை உடனடியாகத் துடைத்தெறிய வேண்டும்.

இன்று எமது நாடு பன்னாட்டுச் சமூகத்தை வெற்றி கொண்டுள்ளது. அனைத்து நாடுகளின் ஆதரவும் எமக்குக் கிடைத்துள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையும் கிடைத்துள்ளது. இதன்மூலம் பொருளாதாரம் வலுவடையும்.

நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க நினைக்கும் சக்திகளுக்கு இடமளிக்கக்கூடாது. இலங்கையைப் பிரிக்க இடமளிக்க முடியாது. மதம் என்பது ஒற்றுமையையே பிரதிபலிக்கின்றது. இனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்ட முற்படுவதை உடனடியாகத் தடுக்கவேண்டும் என்றார். (த-5)

# விலக்கப்பட்டார் மங்கள

## மைத்திரியின் ஆஸி. பயணத்திலிருந்து

கொழும்பு, மே 24

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஆஸ்திரேலியாவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தில் இருந்து அமைச்சர் மங்கள சமரவீர விலக்கப்பட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மூன்று நாள்கள் அரசுமுறைப் பயணமாக ஆஸ்திரேலியாவுக்கு நேற்றுப் புறப்பட்டார்.

இந்தப் பயணத்தில் அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த மங்கள சமரவீர மற்றும் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா ஆகியோரும் இணைந்து கொள்வர் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நடந்த அமைச்சரவை மாற்றத்தின்போது, மங்கள சமரவீரவிடம் இருந்த அயலுறவுத்துறை அமைச்சர் பதவி, ரவி கருணாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து ஆஸ்திரேலியப் பயணத்தில் இருந்து மங்கள சமரவீர விலகிக் கொண்டுள்ளார்.

அவருக்குப் பதிலாகப் பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். (த-5)

# மதத் தலங்களை தாக்குவோர் மீது கடும் நடவடிக்கை

## பாதுகாப்புத் தரப்புக்கு ரணில் உத்தரவு

கொழும்பு, மே 24

வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்துவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் தரப்புக்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் பாதுகாப்பு துறைசார் உயர் அதிகாரிகளை நேற்று முன்தினம் திங்கள்கிழமை அலரி மாளிகைக்கு அழைத்துத் தலைமை அமைச்சர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

முஸ்லிம் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களை மேற்கொள்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

எந்தவொரு காரணத்துக்காகவும் ஏனைய மதத் தலங்கள் மீது தாக்குதல் நடத்த அனுமதிக்க முடியாது என்றும் தலைமை அமைச்சர் குறிப்பிட்டார். (த-5)

### பெறுமதிமிக்க சப்பாத்துச் சோடியான

# நிதி அமைச்சை ஏற்கும்போது அச்சப்பட்டேன்

## சபையில் கூறினார் மங்கள

கொழும்பு, மே 24

இலங்கை அரசியலில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்தவர்கள் வகித்த இந்தப் பெறுமதிமிக்க சப்பாத்துச் சோடியை ஏற்கும்போது அச்சப்பட்டேன் என்று புதிய நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி அமைச்சு என்ற இந்தப் பெறுமதிமிக்க சப்பாத்துச் சோடியை என்.எம்.பெரேரா, ஜே.ஆர்.ஜயவர்தன போன்ற ஜாம்பவான்கள் வகித்துள்ளனர். இப்படிப்பட்ட சப்பாத்துச் சோடி எனக்குப் பொருத்தமற்றது என்றே நினைத்தேன். 1994 ஆம் ஆண்டு தொடக்கம் அமைச்சராக இருக்கின்றேன். இந்த அமைச்சையும் என்னால் செய்ய முடியும் என்று நம்புகின்றேன். என் மீது நம்பிக்கை வைத்து குறித்த பொறுப்பை ஒப்படைத்த அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

**சப்பாத்து தேய்ந்துவிட்டது**

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கருத்து வெளியிட்ட மகிந்த அணி உறுப்பினரான ரோஹித அபேகுணவர்தன, நிதி அமைச்சின் சப்பாத்து புதிதாகத்தான் இருக்கின்றது. ஆனால், அதன் கீழ் துண்டுதான் (சப்பாத்தின் அடிப்பகுதி)தேய்ந்துவிட்டது. ரவி கருணாநாயக்க அதைப்போட்டுத் தேய்த்துவிட்டார். முன்நோக்கிச் செல்வது கடினம்தான் என்றார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தனதுரையின்போது, தமிழ் மக்கள் தங்களுக்கும் (மங்கள சமவீரவுக்கும்) சப்பாத்து அணிவித்துள்ளனர். காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும், காணிகளை மீட்டெடுக்கவேண்டும் என்பது உட்பட பல பொறுப்புகளை செய்துமுடிக்க முன்நோக்கிச் செல்லவே இந்தச் சப்பாத்து அணிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

**புதிய அமைச்சரின் உரை**

பிணக்குவியல்களாலும், அடக்குமுறைகளாலும், ஊழல்,மோசடிகளாலும் நாறிய நாட்டை நல்லாட்சி அரசு சுத்தப்படுத்தியுள்ளது. கடன்பொறிக்குள் இருந்து மீள்வதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த காலத்தில் வெளிவிவகாரக் கொள்கை சிதைக்கப்பட்டிருந்தது. பன்னாட்டு விசாரணைவரும் அபாயமிருந்தது. இன்று அந்த நிலமை சரி செய்யப்பட்டுள்ளது.

இனவாதத்தைத் தூண்டுவதற்குக் குழுவொன்று முயற்சிக்கின்றது. அதற்கு இடமளிக்க முடியாது. இந்த நாட்டில் இனவாதத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் இனி இடமில்லை என்றார் மங்கள. (த-5)

# புதிய நிதியமைச்சருக்கு கூட்டமைப்பு வாழ்த்து

கொழும்பு, மே 24

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மகிந்த அணி ஆகியன நேற்றுச் சபையில் வாழ்த்துத் தெரிவித்தன.

மகிந்த அணியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, மாத்தறை மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் புதிய நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

'நான் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் கூடும் முதல் நாடாளுமன்ற அமர்வில் எனது மாவட்டப் பிரச்சினை குறித்து அதே மாவட்டத்தைச் சேர்ந்த சக உறுப்பினர் ஒருவரே கேள்வி எழுப்பியுள்ளமை சிறப்பு அம்சமாகும். இந்தக் கேள்விக்குத் தற்போது பதில் அளிக்க முடியாதுள்ளது. இரண்டு வாரங்கள் அவகாசம் தேவை' என்று மங்கள சமரவீர பதிலளித்தார்.

இதனால் டலஸ் உள்ளிட்ட மகிந்த அணி உறுப்பினர்கள் சிரித்துவிட்டனர்.

'சரி அமைச்சரே, மாத்தறை மாவட்ட மக்களின் சார்பில் புதிய நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள உங்களுக்கு எமது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாட்டில் நிலையான அபிவிருத்திப் பயணத்தைத் தொடரவே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அரச தலைவர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் நாட்டின் அபிவிருத்தியில் தடையாக இருந்தாரா?' என்ற சந்தேகம் எழுகின்றது எனவும் டலஸ் கேள்வி எழுப்பினார். 'இரண்டு பக்கத்தையும் சமமப்படுத்தியே டலஸ் பேசுகின்றார். வாழ்த்துடன் சேர்ந்து நக்கலும் வருகின்றது' என்றார் அமைச்சர் மங்கள. இதனால் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும், புதிய நிதி அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் வாழ்த்துகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

அமைச்சரவை மாற்றத்துடன் நாடாளுமன்ற ஆசனங்களிலும் சிறு மாற்றம் ஏற்பட்டிருந்தது. புதிய அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தின் 4ஆம் வரியிலிருந்து 2ஆம் வரிக்கு முன்னேற்றம் பெற்று 24ஆம் இலக்க ஆசனத்தைப் பெற்றிருந்தார். (த-5)



# சிறுபான்மையை மிரட்டும் சுவரொட்டிகள் பதுளையில்

பதுளை, மே24

சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் வகையிலான சுவரொட்டிகள் நேற்றுக் காலை பதுளை மாநகர் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

சிங்களவர்களின் பொறுமையைச் சோதிக்காதே (சிங்களயாகே இவசீம பரீக்சா நொகரனு) என்ற வாக்கியங்கள் எழுதப்பட்ட இரு சுவரொட்டி களே இவ்வாறு ஒட்டப்பட்டிருந்தன. பதுளை முத்தியங்கனை ரஜமஹா விகாரையின் பின்னால் செல்லும் பிரதான பாதை மதிலிலேயே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடு அங்குள்ள சிறுபான்மை மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ளதாகக் கூறப்பட்டது. (த-ய-43)

# சிறுவன் மீது பாலியல் துன்புறுத்தல்; குற்றவாளிக்கு 10 வருடக் கடூழியம்

## வவுனியா மேல் நீதிமன்று தீர்ப்பு

வவுனியா, மே 23

சிறுவன் மீது பாலியல் ரீதியான துன்புறுத்தலை மேற்கொண்ட இளைஞனுக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 5 இலட்சம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்குவதுடன் தண்டமாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும் என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் உத்தரவிட்டார்.

2006ஆம் ஆண்டு செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுவன் காட்டில் வைத்து பாலியல் ரீதியாக துண்புறுத்தப்பட்டார். சிறுவனைத் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அதே பகுதியைச் சேர்ந்த சாமிநாதன் சிவசோதி என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான சுருக்கமுறையற்ற விசாரணைகள் வவுனியா நீதிவான் மன்றில் இடம்பெற்றன. ஆரம்ப விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

சிறுவனைக் கடத்தினார் என்று முதலாவது குற்றச்சாட்டாகவும் சிறுவன் மீது பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மேற்கொண்டார் என்று இரண்டாவது குற்றச்சாட்டாகவும் இளைஞனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இடம்பெற்றன. வழக்கு தீர்ப்புக்காக நேற்று நியமிக்கப்பட்டிருந்தது.

"எதிரிக்கு எதிரான முதலாவது குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடருனரால் நிரூபிக்கப்படவில்லை. சிறுவனைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் எதிரி விடுவிக்கப்படு கிறார். எதிரி மீதான இரண்டாவது குற்றச்சாட்டான சிறுவன் மீது பாலியல் ரீதியான துன்புறுத்தலை மேற்கொண்டார் என்பது சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட் டுள்ளது என்ற முடிவுக்கு மன்று வருகிறது" என்று தீர்ப்பளித்தார் மேல் நீதிமன்ற நீதிபதி.

"சிறுவன் மீது பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மேற்கொண்டார் என்று எதிரியைக் குற்றவாளியாக இனங்கண்டு அவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 5 இலட்சம் ரூபா இழப்பீட்டைச் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத்தவறின் மேலும் ஒரு வருடகாலம் கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

அத்துடன் எதிரி 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டும். தண்டப்பணம் செலுத்தத்தவறினால் ஒரு மாத காலம் சாதாரண சிறைத்தண்டனை குற்றவாளி அனுபவிக்க நேரிடும்" என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தண்டனைத் தீர்ப்பளித் தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்கினேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். (வ)

## ஹெரோயின் வைத்திருந்தவருக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறை

வவுனியா, மே 23

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தார் என்ற குற்றத்துக்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவருக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

வியாபார நோக்கத்துடன் உடைமையில் ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கொழும்பைச் சேர்ந்த அங்கம் பொடி சமன் சில்வா (வயது 48) என்ற நபர் 2011ஆம் ஆண்டு வவுனியா தேக்கவத்தைப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு எதிரான ஆரம்ப விசாரணைகள் வவுனியா நீதிவான் மன்றில் இடம்பெற்றன. 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி சட்டமா அதிபரால் சந்தேகநபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இடம்பெற்று வந்தன. சந்தேகநபர் தன் மீதான குற்றச்சாட்டை மன்றில் ஏற்றுக்கொண்டார்.

"ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்கு அவருக்கு 7வருடங்கள் கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டப் பணமாக ஒரு இலட்சம் ரூபாவை குற்றவாளி செலுத்த வேண்டும். தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறினால் ஒரு வருடம் கடூழியச் சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும்" என்று வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வழக்குத் தொடுநர் தரப்பில் வழக்கை அரச சட்டவாதி மாதினி விக்கினேஸ்வரன் நெறிப்படுத்தினார்.

(வ)

# வயோதிபப் பெண் கொலை குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டியில் வயோதிபப் பெண் கூரிய ஆயுதத்தால் கழுத்தில் தாக்கப்பட்டு கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவர் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் மன்று உத்தரவிட்டது.

சிறுப்பிட்டி மத்தி சங்கக்கடை வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தேவிசரஸ்வதி (வயது 68) என்ற வயோதிப் பெண் அவரது வீட்டில் வைத்து கூரிய ஆயுதத்தால் கழுத்தில் தாக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை கொலை செய்யபப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு புதுக்குடியிருப் பைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். "இவர் ஏற்கனவே கொலை செய்யப்பட்டவரின் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருந்தார். கொலை இடம்பெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் புதுக்குடியிருப்பில் உள்ள வீட்டில் குடிய மாந்தார். அந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் சந்தேகநபர், கொலை இடம்பெற்ற வீட்டுக்கு வந்துபோயிருந்தார். மோப்ப நாய் விசாரணை யின்போது குறித்த நபரது வீட்டுக்குள் மோப்ப நாய் சென்றது. அதேநேரம் கொலை செய்யப்பட்டவரின் வீட்டுச் சாவி அவரது வீட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-10, 26)

சிறுமி மீது துர்நடத்தை:

# குற்றங்களை ஏற்றுக்கொண்டவருக்கு ஒத்திவைத்த 2 வருடக் கடூழியச் சிறை

## 12 வருடங்களின் பின் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 23

பதின்ம வயதுச் சிறுமியைக் கவர்ந்து சென்றமை மற்றும் அவரைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்ட குடும்பத்தலைவருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட தலா 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியிலிருந்து 12 ஆண்டுகளுக்குப் பின் இந்த வழக்கு நேற்று முடிவுக்கு வந்தது.

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத காலப் பகுதியில் 16 வயதுக்குக் குறைவான சிறுமியை அவரின் சட்ட ரீதியான பாதுகாவலர்களிடமிருந்து கவர்ந்து சென்றமை மற்றும் அவரைத் துர்நடத்தைக்கு உட்படுத்தியமை ஆகிய 2 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து குடும்பத்தலைவர் ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமி (தற்போது இளம் பெண்) சார்பில் அவரது தாயார் மன்றில் முன்னிலையாகி விண்ணப்பம் செய்தார்.

"எனது மகள் தற்போது திருமணம் முடித்து 2 பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வருகிறார். தற்போது அவர் இந்த வழக்கில் முன்னிலையாகி சாட்சியமளிக்க விரும்பவில்லை. அவர் தற்போது நிம்மதியான வாழ்க்கை வாழ்கின்றார். அந்த வாழ்க்கை சீரழியக் கூடாது. எமக்கு எந்த இழப்பீடும் வேண்டாம்" என்று அவர் மன்றிடம் கோரினார்.

தொடர்ந்து எதிரி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி கருணை விண்ணப்பம் செய்தார்.

" சம்பவம் நடந்த காலப் பகுதியில் எதிரிக்கு 24 வயது. அந்தப் பெண் பிள்ளை மீது அவர் காதல் கொண்டிருந்தார். அதன் அடிப்படையில் அந்த பெண்ணின் சுய விருப்பத்தின் பேரில்தான் அவரை வீட்டை விட்டு அழைத்துச் சென்றார். அப்போது அந்தப்பெண் 16 வயதைத் தாண்டிவிட்டார் என்றே எதிரி எண்ணியிருந்தார். அதற்காக அவர் தற்போது மன்னிப்பு கோருகின்றார்.

பாதிக்கப்பட்ட பெண் 18 வயதைத் தாண்டியதும் அவரைச் சட்ட ரீதியாகத் திருமணம் செய்யவே எதிரி எண்ணி இருந்தார். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையால் இருவரும் வேறு நபர்களைத் திருமணம் செய்து தற்போது வாழ்ந்து வருகின்றனர். எதிரி தற்போது 2 பிள்ளைகளுக்கு தந்தையாவார்.

எனவே இவரின் குடும்ப நிலமையைக் கருத்திற் கொண்டு எதிரிக்குக் குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும்" என்று அவரது சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணியின் விண்ணப்பத்தைப் பரிசீலித்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன். "இந்த வழக்கு 12 வருடங்களின் பின்னர் இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. எதிரி குற்றத்தை ஏற்றுக் கொண்டு உள்ளார். பாதிக்கப்பட்ட பெண் தற்போது நிம்மதியான வாழ்க்கையை வாழ்கின்றார். அவர் இது தொடர்பில் சாட்சியம் அளிக்க விரும்பவில்லை என்று பெண்ணின் தாயார் மன்றில் தெரிவித்துள்ளார்" என்று அறிவித்தார்.

"முதலாவது ஆள் கவர்தல் குற்றத்துக்கு எதிரிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றவாளி 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் ஒரு வருட சிறை தண்டனையை அவர் அனுபவிக்க வேண்டும். இரண்டாவது சிறுமி மீதான துர்நடத்தைக் குற்றத்துக்கு எதிரிக்கு 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றவாளி 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் ஒரு வருட சிறைத்தண்டனையை குற்றவாளி அனுபவிக்க நேரிடும். மேலும் குற்றவாளி பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறின் அவர் 5 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்" என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் சார்பில் இழப்பீட்டுத் தொகை பெற்றுக்கொள்ளாத பட்சத்தில், அதனை அரச நிதியில் சேர்க்குமாறு மன்று கட்டளையிட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணின் தாயார் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள மன்றில் மறுப்பு தெரிவித்தமையால் அந்தப் பணம் அரச நிதியில் சேர்க்கப்பட்டது. (வ-37)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



ஆறாம் திருவிழா திருமஞ்சத்திருவிழா
இன்று (24.05.2017) புதன்கிழமை முற்பகல் 11.15 மணி
பத்திமுத்தி பாவனோற்சவம் மூசிகவாகனத்தில் சுவாமி வீதியுலா
மாலை 7.00 மணி
பஞ்சமுகவிநாயகர் கஜலட்சுமி சுப்பிரமணியர் சமேதராக
திருமஞ்சத்தில் வீதியுலா

இராஜகோபுர அடிக்கல் நாட்டல்



புங்குடுதீவு கிழக்கு, தல்லையபற்று சங்கரமூர்த்தி முருக மூர்த்திவேல் பெருமானுக்கு 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றது. இந் நிகழ்வில் மண்ணின் மைந்தன் யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பரமலிங்கம் சிறிகிருஸ்ணா அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட சாகலவுக்கு என்ன பிரச்சினை?

*கேள்வி எழுப்புகிறார் மைத்திரி*

கொழும்பு, மே 24

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறும் பிரதேசங்களில் பொறுப்பில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகளைச் சம்பவம் தொடர்பில் பொறுப்புக் கூற வைக்கும் பொறி முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சாகல ரத்நாயக்காவுக்குப் பணித்துள்ளார்.

மாற்றியமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையின், அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்கினார்.

அமைச்சர் மனோ கணேசன், இரத்தினபுரி கஹவத்தைப் பிரதேசத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் இன்று (நேற்று) அதிகாலை தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கூறினார். அத்துடன் தனது அமைச்சினுள், ஞானசார தேரர் பிரவேசித்தமை தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

சிறுபான்மையினர் மீதான தொடர் தாக்குதல்கள் தொடர்பில் இதன்போது ஏனைய அமைச்சர்களும் கருத்துரைத்துள்ளனர்.

இதனையடுத்து வன்முறைகளைத் தூண்டுபவர்களுக்கு எதிராகத் தயவு தாட்சண்யம் இல்லாமல் கடுமையான முறையில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுமாறும் அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு, அரச தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் நடைபெறும் பிரதேசங்களில் பொறுப்பில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகள் சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவைக்கும் பொறிமுறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு, சட்டம் ஒழுங்கு துறை அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன் தற்போது அதிகரித்துள்ள வன்முறைகளை முஸ்லிம் மக்களின் பிரச்சினையாகப் பார்க்காமல், சட்டம், ஒழுங்கு பொதுப் பிரச்சினையாகப் பார்த்து நடவடிக்கை எடுக்குமாறும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார். (கு-5)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

*தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்து*

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்று வரும் வன்முறைகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமையத்தின் இணைப் பேச்சாளர்களான குமாரவடிவேல் குருபரன், எழில் ராஜன் இருவரும் இணைந்து முகநூலில் பதிவிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டின் பல்வேறு பாகங்களில் இடம்பெற்று வரும் வன்முறைகள் தொடர்பாக நாம் ஆழ்ந்த கரிசனை கொள்கின்றோம்.

இந்த வன்முறைகள் உடனடியாக முடிவுக்கு கொண்டுவர சட்ட ஒழுங்கைப் பேணுவதற்கான நிறுவனங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் வன்முறையை சகித்துக் கொள்வதன் மூலம் அந்த வன்முறைக்கு உடந்தை போகும் அணுகுமுறையை அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்றுள்ளது. (ற-5)



திருநெல்வேலி சிறிகாளிஅம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாக்கள் இடம் பெற்று வருகின்றன. 3 ஆம் நாளான நேற்றுச் செவ்வாய்க்கிழமை காளி அம்மன் புலி வாகனத்தில் தமிழீழத்தைச் சித்தரிக்கும் வகையில் அலங்கரிக்கப்பட்டு அடியவர்களுக்குக் காட்சியளித்தார். (வ-37)

# இந்திய மீனவர் அறுவர் காரைநகர் கடலில் கைது

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6பேர் நேற்றிரவு காரைநகர் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

“இந்தியாவில் இருந்து நேற்று மாலை படகு ஒன்றில் தொழிலுக்குப் புறப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேரும் காரைநகர் கோவளம் பகுதிக்கு அண்மித்த கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டனர். அவர்கள் 6 பேரும் தமிழகம் தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் பயணித்த படகும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது” என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## அமைச்சரவை மாற்றம்; 5 தினங்களுள் வர்த்தமானி

புதிய அமைச்சரவை மாற்றம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் ஐந்து தினங்களுக்குள் வெளியிடுவதற்கு அரசு தீர்மானித் துள்ளது. அமைச்சுக்களின் கீழ் உள்ள பொறுப்புக்கள் பல தற்போது மாற்றப்பட்டுள்ளன. அவையே வர்த்தமானியில் அறிவிக்கப்படும். (கு-5)

# ஹிக்கடுவையில் துப்பாக்கிச் சூடு; 2 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 24

ஹிக்கடுவையில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள அச்சகம் ஒன்றினுள் நேற்று மாலை 4 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்தோர் அச்சகத்துக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் அங்கிருந்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஹிக்கடுவ குமாரகந்த பிரதேசத்தைச் சேர்ந்த துசார தனுந்தர (வயது24), சுஜீத் ஹிமால் (வயது34) ஆகியோரே கொல்லப்பட்டனர். விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (கு-4)

# இனவாதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

*அமைச்சர் சாகல உறுதி*

சிலரது அரசியல் தேவைகளை அடைந்து கொள்வதற்காகவே நாட்டில் மீண்டும் இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க, அவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நாட்டில் ஏற்பட்டுள்ள இனவாத செயற்பாடுகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். “நாங்கள் இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுடன் பேசியுள்ளோம். சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை - பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. அதனை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம். இனவாதப் பிரச்சினைகளுக்கு பின்னால் வேறு விதமான பிரச்சினை களும் உள்ளன. முஸ்லிம் நபர் ஒருவருக்கு சொந்தமான கோழிக் கடையொன்றில் அண்மையில் தீ வைக்கப்பட்டிருந்தது. விசாரணை நடத்தப்பட்ட போது, அங்கு திருட்டு நடைபெற்றுள்ளது. அதேபோன்று கஹவத்தையில் வர்த்தக நிலையமொன்று தீக்கிரையாகியது. அதற்கு அப்பால் தமிழ் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கடையொன்றில் விளக்கொன்றின்மூலமேதீபரவியுள்ளது” என்றும் அவர் தெரிவித்தார். (வ-5)

# மாவனல்லையில் மண் சரிவு இரண்டு பேர் பரிதாபச் சாவு

இரத்தினபுரி, மே24

கண்டி மாவனல்லை நகரில் மண்மேடொன்று சரிந்து விழுந்ததில் கட்டடப் பணியாளர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர் மண்ணுக்குள் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் தெவனகல பிரதேசத்தை சேர்ந்த டபிள்யூ. திலக் ரூபசிங்க (46), வாஹர கொட உச்சாபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த என். ஜீ. ஜயசிறி (44) என்ற இருவருமே உயிரிழந்துள்ளனர்.

மாவனல்லை நகரில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகாமையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுற்றிலும் மலைப்பாங்கான அந்த இடத்தில் தொழிலாளர்கள் சுவர் ஒன்றை எழுப்பும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கீழே தொழிலாளர்கள் நின்றிருந்த இடத்திற்கு அருகில் சுமார் 15 அடி உயரத்தில் இருந்த பெரிய மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. உடனடியாகச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் பொதுமக்கள் கனரக இயந்திரங்களின் உதவியுடன் மண்ணுக்குள்புதையுண்டவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இயந்திரங்களின் உதவியுடன் மண்ணை அகற்றிப் புதையுண்டிருந்த இருவரும் அடுத்தடுத்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் மண்ணுக்குள் புதையுண்டிருக்கும் நபரை மீட்கும் பணியில் பொலிஸாரும் பொதுமக்களும் தொடர்ந்து ஈடுபட்டனர். (கு-ய)

# பதவியுயர்வு பெறும் அதிபர்களின் தகுதி குறித்துப் பரிசீலனை

*அடுத்த மாதம் கல்வியமைச்சில்*

அதிபர்கள் சேவையில் முதலாம் மற்றும் இரண்டாம் தரத்துக்குப் பதவியுயர்வு பெற வேண்டிய அதிபர்களின் தகுதிகள் பற்றிய அடிப்படைப் பரிசீலனை அடுத்த மாதத்தில் கல்வியமைச்சில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

2009ஆம் மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் மூன்றாம் தர அதிபர் தரத்துக்கு நியமிக்கப்பட்டவர்களை இரண்டாம் தரத்துக்கு உயர்த்துவதற்கான அடிப்படைத் தகுதிகளின் பரிசீலனை அடுத்த மாதம் 2ஆம், 5ஆம், 6ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறும். இதற்காக ஆயிரத்து 56 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இரண்டாம் தரத்திலுள்ளவர்களை முதலாம் தரத்துக்கு உயர்த்துவதற்கான அடிப்படைத் தகுதிகளுக்கான பரிசீலனை அடுத்த மாதம் 6ஆம், 13ஆம், 15ஆம், 16ஆம், 20ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் நடைபெறும்.

கல்வித்துறையிலுள்ள ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்ப முன்னைய அரசில் பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை என்று ஏராளமான முறைப்பாடுகள் கல்வியமைச்சுக்குக் கிடைத்திருப்பதாகவும், அந்த நிலமையை மேலும் நீடிக்க விடாமல் அவரவர் தகுதிக்கேற்ப உரிய காலத்தில் பதவியுயர்வுகள் வழங்கப்படுமெனவும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்திருக்கிறார். (கு-5)

# மகனா, பணமா வேண்டுமென என்னிடம் பேரம் பேசினார்கள்

*போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாயொருவர் வேதனை*

‘மகன் வேண்டுமா? பணம் வேண்டுமா? எனப் புலனாய்வாளர்கள் கேட்டிருந்தார்கள். என்னுடைய மகனை அவர்கள் ஒழித்து வைத்திருப்பதால் தானே அவ்வாறு கேட்க முடியும். என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாயொரு வர் தெரிவித்தார்.

‘மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலம் முடிவடைந்து மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவராகப் பொறுப்பெடுத்த காலப்பகுதியில், கொழும்பில் இருந்து வெள்ளை வாகனத்தில் 5 புலனாய்வாளர்கள் எங்கள் வீட்டுக்கு வருகை தந்தனர். மகன் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் பதிவுகளையும் மேற்கொண்டனர். எனக்குவீடு கொள்ளக்கூடிய பணம் தந்தாலும் வேண்டாம், மகன் தான் வேண்டும் என அவர்களுக்குப் பதில் கூறினேன்.” என்று அந்தத் தாய் கவலையுடன் தெரிவித்தார். (ஜ-7)

# வடக்கு-கிழக்கில் வேலைதேடும் பட்டதாரிகளுக்கு அவசரத் தீர்வு

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் பிரேரணை

கொழும்பு, மே 24
வேலை தேடும் பட்டதாரிகளில் எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். போரினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாகத் தமிழ் இளைஞர்களே உள்ளதால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், இயல்பு நிலைமையை மீள ஏற்படுத்துவதற்குமான படியாகவும் வடக்கு - கிழக்கில் வேலை தேடும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது மிக அவசரமாகச் செய்யப்பட வேண்டிய விடயமாகும். இவ்வாறு அரசைக் கோரும் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் சமர்ப்பித்துள்ளார்.
இந்தச் சபை ஒத்திவைப்புப் பிரேரணை நாடாளுமன்றில் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
பட்டதாரிகள் பிரச்சினை, வடக்குகிழக்கு மாகாணங்களில் இப்பொழுது புத்துயிர் பெற்றுள்ளமைக்கு, குறைவடைந்து செல்லும் வேலை வாய்ப்புக்கள், அரச சேவைக்கு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட ஆள்சேர்ப்புக்கள் நடைபெறாமை, தனியார்துறையில் போதுமான அளவு வேலைவாய்ப்புக்கள் கிடைக்காமை போன்ற காரணிகளின் நீண்ட காலமாக இருந்துவரும் தாக்கமே அடிப்படையாகவுள்ளது.
மூன்று தசாப்த காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த ஆயுதப் போராட்டத்தின் விளைவாக நிலவிய வன்முறை மற்றும் ஸ்திரமற்ற நிலைமைகளின் காரணமாகவே இத்தகைய ஒரு நிலைமை இப்பொழுது தோற்றம் பெற்றுள்ளது. ஆயுத முரண்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் கல்வி கற்ற இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மை என்பது இன்னமும் தீர்வு காணப்படாத நிலையிலேயே தொடர்கின்றது.
இந்த விடயம் சார்பாகப் பொருத்தமான வழிகளில் தீர்வுகள் காணப்பட வேண்டுமென்பதற்காக வடக்கு- கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சர்களும் அந்த மாகாணங்களின் ஏனைய அமைச்சர்களும் உத்தியோகத்தர்களும் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் கொழும்பு அரச அமைச்சர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்கள்.
கொழும்பு அரசின் சேவையிலும், வடக்கு கிழக்கு மாகாண அரச சேவையிலும் காணப்படுகின்ற பல வெற்றிடங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வேலை தேடும் பட்டதாரிகளைக் கொண்டு நிரப்பினால் அது அவர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வாக அமையும்.
இந்த விடயத்தைக் கவனத்திற் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர்களுடனும் கலந்துரையாடி பொருத்தமான வகையில் இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வைக் காண்பதற்கு கூடிய கவனஞ் செலுத்த வேண்டும் என்று அந்தச் சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)



# பேருந்து ட்ராக்டர் விபத்து

யாழ்ப்பாணம், மே 24
பருத்தித்துறைச் சாலைக்கு சொந்தமான பேருந்தும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை குப்பை ஏற்றும் உழவு இயந்திரமும் மோதி விபத்துக்குள்ளாகின.
நெல்லியடி கொடிகாமம் வீதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்ட 764 பேருந்தும் அதிகாலை குப்பைகளை ஏற்றும் உழவு இயந்திரமும் நெல்லியில் சந்தியில் இருந்து கொடிகாமம் வீதியில் உள்ள திருப்பத்தில் திருப்ப முயன்ற போது, அவை இரண்டும் விபத்துக்குள்ளாகின. (வ-422)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 24
யாழ்ப்பாண மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நகர ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நடைபெறப்போகும் இறுதி நேர்முகத்தேர்வு தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (வ)

# மின்சாரம் தாக்கியதால் இருவருக்கு எரிகாயம்

தென்மராட்சி, மே 24
மின்சாரம் தாக்கி தொலைத்தொடர்பு நிறுவன பணியாளர்கள் இருவர் எரிகாயங்களுக்குள்ளானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்று இடம்பெற்றது.
சாலை அகலிப்புக்காக தொலைத்தொடர்பு கம்பங்களை மாற்றி நடும் பணியில் ஈடுபட்ட பணியாளர்களே மின்சாரத்தால் தாக்கப்பட்டவர்களாவர்.
அச்சுவேலியைச் சேர்ந்த கந்தசாமி மயூரன் (வயது-29) புத்தூர் வடக்கைச் சேர்ந்த விஜயன் மகிபரன் (வயது -20) ஆகியோர் மின்சாரம் தாக்கி எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)

# கழிவுகளைக் கொட்டுவோரைப் பிடிக்க காக்கைதீவில் நேற்று முதல் கமராக்கள்

யாழ்ப்பாணம், மே 24
யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் இரவு வேளைகளில் திண்மக் கழிவுகளை வீசுவோரைக் கண்டறியும் வகையில் நேற்று அந்தப் பகுதியில் சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தப்பட்டன என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
"யாழ்ப்பாணம், காக்கைதீவுப் பகுதியில் நீண்டகாலமாக இரவுவேளைகளில் திண்மக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. அந்தப் பகுதியில் இறைச்சிக் கழிவுகள் உள்ளிட்ட திண்மக் கழிவுகளை வாகனங்களில் ஏற்றி வந்து பலரும் கொட்டி வருகின்றனர்.
அவர்களின் இந்தச் செயற்பாட்டை மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் நோற்று நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தினர். எனினும் கழிவுகள் கொட்டப்படுவதை முழுமையாக தடுக்க முடியவில்லை. இறுதியாக அண்மையில்கூட ஓர் வாகனத்தில் மாட்டு இறைச்சிக் கழிவுகளை ஏற்றி வந்து கொட்டும்போது ஒருவர் பொலிஸாரின் உதவியோடு பிடிக்கப்பட்டார்.
எனவே இவ்வாறான சம்பவங்களை முழுமையாக தடுப்பதற்கான திட்டத்தின் கீழ் தற்போது சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. காக்கைதீவுப் பகுதியிலும் நேற்று முதல் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் இனிவரும் நாட்களில் அந்தப் பகுதியில் இரவுவேளைகளில் கழிவுகளைக் கொட்டுவோரை கமரா மூலம் இனம் காண முடியும். அவர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வ-101)

# யாழ்ப்பாண மாநகரில் பாடசாலை நேரத்தில் கழிவகற்றல் செயற்பாடு

## பெற்றோர் விசனம்


யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகாமை

யாழ்ப்பாணம், மே 23
யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றல் செயற்பாடு பாடசாலை ஆரம்பமாகும் நேரங்களில் இடம்பெறுவதால் நகரச் சாலைகளில் பயணிக்கும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.
"யாழ்ப்பாணம் மாநகர சபையின் திண்மக் கழிவுகளை அகற்றும் உழவு இயந்திரங்கள் காலை 7 மணி தொடக்கம் 7.30 மணிக்கு இடையே நகரப் பாடசாலைகளுக்கு அண்மையாகவுள்ள சாலைகளில் பயணிக்கின்றன. இதனால் பாடசாலைக்குப் பயணிக்கும் மாணவர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.
இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றோம்" என்று பெற்றோர் தெரிவித்தனர். (வ-37)

# வடக்கு முதலமைச்சரின் நிர்வாகத்தில் மாகாண சுகாதார அமைச்சர் தலையீடு

## யாழ். மேல் நீதிமன்றில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 23
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், முதலமைச்சரின் அமைச்சில் தலையீடு செய்கிறார் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றஞ் சாட்டினார்.
இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட சுகாதாரபரிசோதகரால் வடக்கு மாகாண சபைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
இதன்போதே சட்டத்தரணி மேற்கண்டவாறு மன்றில் விண்ணப்பம் செய்தார்.
"பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றுபவருக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் கீழ் கடமையாற்றுபவர் உள்ளூராட்சி ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளவர். அது முதலமைச்சரின் அமைச்சின் கீழ் உள்ளது.
அவ்வாறான நிலையில் சுகாதார அமைச்சர் அவருக்கு இடமாற்றம் வழங்கி உள்ளார். இது முதலமைச்சரின் அமைச்சில் சுகாதார அமைச்சரின் தலையீடாகவே உள்ளது" என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் மன்றில் மேலும் தெரிவித்தார்.
வழக்கைப் பரிசீலித்த நீதிபதி, பிரதிவாதி களுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டார். வழக்கு விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதி வரை மன்று ஒத்திவைத்தது. (வ-37)

# பல்கலை மாணவர் மீது தாக்கு; மாட்டியது மோட்டார் சைக்கிள்

## கோப்பாய் பொலிஸ் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம் மே 24
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியோரின் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைப்பற்றியுள்ளதாகக் கோப்பாய் பொலிசார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது விடுதியிலிருந்து கோண்டாவிலில் தங்கியுள்ள சக நண்பர்களைப் பார்வையிடுவதற்காகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில், பொற்பதி வீதி ஊடாக நடந்து சென்றுள்ளனர்.
அப்போது 6 மோட்டார் சைக்கிள்களில் வந்த 12 பேர் கொண்ட கும்பல் வீதியில் நடந்து சென்ற மாணவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியதுடன் அவ்விடத்தில் வைத்துச் சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.
மாணவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட மோட்டார் சைக்கிள் குழு அவ்விடத்திலிருந்து தப்பித்துச் சென்றது. எனினும் மாணவர்கள் தாக்குதலில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கொடுத்து முறைப்பாடு செய்தனர். பொலிஸார் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை வைத்து உரிமையாளரின் விவரங்களைப் பெற்றுக்கொண்டனர். கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ஒரு பெண்மணி ஒருவரின் பெயரில் அந்த மோட்டார் சைக்கிள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரின் மகனே அதனைப் பயன்படுத்தி வந்துள்ளார்.
எனினும் சம்பவ தினத்தன்று நண்பன் ஒருவர் மோட்டார் சைக்கிளை தன்னிடம் இருந்து பெற்றுச் சென்றதாக அந்த இளைஞர் பொலிஸாரிடம் கூறியுள்ளார். இதனையடுத்து குறித்த மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றிய பொலிஸார், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-8)

# பார்வையற்றோர் சாதனை படைக்கும் நிலமையை உருவாக்கியது யாழ். விழிப்புலனற்றோர் சங்கமே


## 41 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சங்கத்தின் தலைவர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 24
வடக்கு மாகாணத்தில் பார்வையற்ற எவரும் யாசகம் கேட்பதில்லை. இந்த நிலைமையை உருவாக்கியது யாழ். விழிப்புலனற்றோர் சங்கமே.

இவ்வாறு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எஸ்.அற்புதராஜா தெரிவித்தார்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இந்த சமூகத்தில் எந்தப் பாகுபாடும் இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். உங்கள் அனுதாபம் வேண்டாம். உங்கள் அன்பே போதும். நாம் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறோம். கல்வி, இசை, விளையாட்டு, சுயதொழில், தொழில் நுட்பம் என அனைத்து துறைகளிலும் நாம் சாதனை படைத்துள்ளோம்.





இந்த 41 வருடங்களில் 47 பார்வையற்ற பட்டதாரிகளை உருவாக்கி இருக்கிறோம். அரச பணியில் 25 உத்தியோகத்தர்களை கொடுத்துள்ளோம். தற்போது 17 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள். 13 மாணவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும், 4 மாணவர்கள் கிழக்கு பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்கின்றனர்.

மாணவர்களின் கல்விக்காக மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபாவும், பிரைட் கல்வி முறை மற்றும் குரல் பதிவு கருவிகளை நாம் அவர்களுக்கு வழங்கி கல்வியை சுலபமாக கற்க வழிவகை செய்து வருகிறோம்.

கதிரை பின்னல், விளக்குமாறு தயாரித்தல், கோழி வளர்ப்பு,போன்ற தொழில்களை மேற்கொள்ள பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எந்த இடத்திலும் எவரினதும் உதவி இன்றி நடமாட அவர்களுக்கான வெள்ளைப் பிரம்பு பயிற்சி வழங்கபடுகிறது.

இலங்கையில் பார்வையற்ற பெண்கள் கிரிக்கெட் அணிகள் இரண்டு உள்ளன. அவற்றில் ஒன்று எமது அணியாகும். கல்வி நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபட எமக்கு பல சிறப்புக் கருவிகள் தேவை. அதன் மூலமே அவர்களை நாம் முன்னேற்ற முடியும் அதற்கான நிதி எமக்கு பற்றாக்குறையாக உள்ளது.

நாம் கணினியை பயன்படுத்துகிறோம். யாரும் இதை நம்ப மாட்டார்கள். குரல் பதிவுகள் மற்றும் வாய்மொழி மூலமான எமது ஓசைகளை செயற்படுத்த அதனை ஒலி வடிவில் கணினித் திரையில் பெற்றுக்கொள்ள மென் பொருள்கள் எம்மிடம் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி நாம் கணினியைப் பயன்படுத்துகிறோம். அதற்கான பயிற்சிகளையும் நாம் வழங்கி வருகிறோம்.

பார்வையற்ற முதியவர்கள் கவனிக்கப்படுவதில்லை. அதைக் கருத்திற் கொண்டு முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் 2 பரப்பு அரச காணியை நீண்டகால குத்தகைக்கு எடுத்துள்ளோம். அதில் பார்வை அற்ற முதியவர்களுக்கான இல்லம் ஒன்றை அமைக்வுள்ளோம்.

நாம் எமது கல்விஅமைச்சரிடம் கோருவது என்னவெனில் இதுவரை காலமும் பல்கலைக்கழகத்திலே கலைப் பிரிவில் மட்டுமே எமது பார்வையற்ற மாணவர்கள் பயிலக்கூடியதாக உள்ளனர். எமது மாணவர்கள் வணிகம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை பயில்வதற்கு உரிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். அதிபர் ஆசிரியர் சங்கத்துடன் கலந்துரையாடி அவர்களின் மாத சம்பளத்தில் 25 ரூபாவை நலன்புரி நிதியாக பெற்றுத் தர ஆவன செய்ய வேண்டும். என்றார்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
மக்கள் தன்னம்பிக்கையுடன் இருந்தால் வடக்கு மாகாண சபை அனைத்தையும்செய்ய முடியும். பல்கலைக் கழகத்தில் வணிகம் மற்றும் விஞ்ஞானம் படிக்க ஆர்வம் இருந்தால் அதற்கான நடவடிக்கையை நாம் எடுப்போம். எம்மோடு தொடர்பு கொண்டால் அதற்கான வழிவகைகளை செய்யலாம். நலன்புரி நிதி மற்றும் விளையாட்டு சார்பான விடயங்களுக்கு உதவ நாம் முன்வருவோம். அதற்கான கடிதத்தை எனக்குத் தாருங்கள். உங்களுக்குப் பிறந்தநாள் பரிசாக ஒரு இலட்சம் ரூபாவை நான் ஒதுக்குகிறேன்.அதிலே உங்களுக்கு தேவையான விடயங்களை செய்யுங்கள். என்றார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
நாம் ஏதும் அபிவிருத்தி பற்றிக் கேட்டால் வடக்கு மாகாண சபை தெரிவிப்பது அரசு ஒதுக்கிய நிதி போதாது தரவில்லை என்பதே. சில அமைச்சுக்களிடம் கொடுக்கப்பட்ட நிதி பயன்படுத்தாமல் அரசிடம் திரும்பியுள்ளது. அந்த நிதி ஏன் திரும்பிச் செல்ல வேண்டும். வழங்கபட்டது சிறிய நிதி எனினும் அதனை மக்களின் அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும். அதற்கு எல்லோரும் வழிவகை செய்ய வேண்டும். வெள்ளைப்பிரம்பு தினத்தில் கடற்றொழிலாளர்களின் ஒருநாள் வருமானத்தை இங்கே கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இது பற்றி உரியவர்களிடம் கலந்துரையாடி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவேன் - என்றார்.

கலைநிகழ்வுகள் நடைபெற்றதுடன், குருதிக்கொடை முகாமும் நடைபெற்றது. (ந-ரி)

# இனவாத செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்

## வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மே 24
ஞானசாரதேரர் போன்றவர்களின் இனவாதம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இனவாதத்துக்கும் ஒரு எல்லைக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

ஆயிரம் பாடசாலையில் சமய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்ற எண்ணக்கருவினை சமய பாட கல்விமுறமையினுள் நிர்வாக மயப்படுத்தல்முறைமைக்கான நிகழ்ச்சித் திட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நாங்கள் எங்களுக்கு என்ற தனி ஒரு தேசியத்துக்கு சொந்தக்காரர்கள். எமக்கு என தனி கலாசாரம், இனம், மொழி போன்றன இருக்கின்றன. மதங்களை சார்ந்துதான் எமது நாட்டில் பல குழப்பநிலைகள் உருவாகின்றன. அதேபோல மொழிகளை சார்ந்து தான் எமது நாட்டு அரசியலில் குழப்பம் தோன்றுகின்றது. அந்த குழப்பநிலைகளை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நல்லதொரு முயற்சி இதுவாகும் என நினைக்கின்றேன்.

நிலையான நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால் வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி அவரவருக்கு இருக்கின்ற தனித்துவமான மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் போன்றவற்றை பின்பற்ற விடவேண்டும். பிற மத, இன, மொழிகள் என்பவற்றை மதிக்க வேண்டும்.

தற்போது ஒருபகுதி இளைஞர் சமுதாயம் மட்டும் தடம் மாறி சென்றுகொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.அவ்வாறான சமுதாயத்தின் வழி தவறலுக்கு எமது மூத்தோர்கள் அறிவை புகட்டத் தவறியமையும் ஒரு காரணியாகும்.

நாங்கள் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் தெற்கை நோக்கி செல்லும்போது ம்ாங்குளத்தை அண்மித்த பகுதிகளில் வெள்ளை உடையணிந்த சிறு பிள்ளைகள் ரதம் படிக்கச் செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. அந்த சிறுவர்கள் தர்மம், சமாதானம், அன்பு போன்ற விடயங்களை கற்கச் செல்கின்றனர். எமது பிரதேசங்களில் இருக்கின்ற அறநெறிப் பாடசாலைகள் இந்தளவுக்கு இயங்குவதாக இல்லை. அறநெறிப் பாடசாலைகளை திறம்பட இயங்க வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

நாங்கள் சமாதானத்துடன் நிம்மதியுடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும்போது இந்த நாட்டில் நிலையான நல்லிணக்கம் காணப்படும். எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழப்போகும் இளைய சமுதாயத்திடம் ஏற்படப்போகும் நல்லிணக்கத்தில்தான் இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. என்றார்.

யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நிகழ்வில் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
இந்த நாடு பல இன, மத, கலாசாரங்களை கொண்டதாகும். நாட்டில் இருக்கின்ற அனைத்து மதங்களும் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். ஆனால் சில இன, மதவாதிகள் தங்களின் மத தர்மங்களை மீறி இனவாதிகள் போல செயற்படுகின்றனர். அவர்கள் தங்களின் மதங்களின் மத தர்மத்தை மீறிய ஒரு சிலரே இனவாதிகள் போல செயற்படுகின்றனர். அவரவர் மதங்களை நன்கு படித்தறிந்தால் அவர்கள் ஒழுக்கத்துடன் இனவாதமற்ற மனிதர்களாக வாழ்வார்கள். தற்போதைய நல்லிணக்க முயற்சிகள் இதனை நீக்கும் என எதிர்பார்க்கின்றேன். என்றார்.

நிகழ்வில் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, வடக்கு மாகான ஆளுநரின் செயலர் இளங்கோவன், சமயத் தலைவர்கள், பாடசாலை, ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ந-8)

### மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 60 | 100 |
| கத்தரி | 150 | 120 | 120 | 140 |
| கரட் | 240 | 240 | 180 | 160-320 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 140 | 80 | 80 | 120 |
| பாகல் | 180 | 180 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 220 | 280 | 250 | 240 |
| பூசணி | 50 | 60 | 50 | 80 |
| தக்காளி | 120 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 |
| கீரை | 25 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 200 | 240 | 260 | 200 |
| புடோல் | 120 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | 150 | 200 | 180 |
| வெண்டி | 120 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 200 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 150 | 140 | 160 | 140 |
| இராசவள்ளி | 200 | 220 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 | 140 |

### நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 800 | 900 |
| நண்டு | 300 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 600 | 800 |
| சுறா | 500 | – | 800 | – |
| சீலா | 400 | 600 | 500 | – |
| விளை | 600 | 300 | 500 | 600 |
| முரல் | 350 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 300 | 400 | 500 | 500 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 300 |
| சூடை | 200 | 120 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 300 | 500 |
| கொய் | 150 | 30 | 80 | 100 |
| பாலை | 200 | 200 | 600 | 500 |
| வாழை | 200 | – | 500 | – |

## ஊழியர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்யும் புத்தக நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பெண் வேலையாள்கள் தேவை.

1) விற்பனை ஊழியர்கள் (பெண்கள்)
2) விற்பனைச் சிட்டை எழுதுபவர்கள்
3) பொதி செய்பவர்கள்


சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தகுதி உடையோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**021 222 2909, 077 612 1808**

## மரண அறிவித்தல்

# கதிரவேலு இரத்தினசிங்கம்

**(இளைப்பாறிய கிராம சேவகர்)**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01.12.1933 | 23.05.2017 |

கரணவாய் மத்தி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இரத்தினசிங்கம் (23.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் கதிரவேலு - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற மாப்பாணபிள்ளை - வேதநாயகி தம்பதியரின் அன்புமருமகனும் பத்மாதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் (ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர்) அன்புச்சகோதரரும் சுரேஷன் (பொறியலாளர் - ஆஸ்திரேலியா), சுநீதி, சுஜாதை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானபாஸ்கரன் (இ.போ.ச), குகானந்தம் (லண்டன்), பிரணவசொரூபி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகேஸ்வரதேவன், புஸ்பரதி, சிறீதரன் காலஞ்சென்ற சிற்பராசக்தி, நித்தியானந்தசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறீஸ்கந்தராஜா, சிறீஸ்கந்தசிங்கம், மீனலோஜினி, விமலரதி, புனிதவதி ஆகியோரின் சகலனும் அரவிந்த், அஞ்சலி, நிஜீதன், நிகீதினி, தரணி, பிரிதிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2017) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரணவாய் மத்தி,**
**கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரணஅறிவித்தல்



# திருமதி மகேஸ்வரி நடராசா

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராசா நேற்று 23.05.2017 முற்பகல் காலமானார்.

அன்னார் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் வட்டுக்கோட்டை கிழக்கைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைரவநாதர் - பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வை.நடராசா (ஓய்வு பெற்ற லிகிதர்) அவர்களின் பாசமிகு மனைவியும் அ.பரமகுருநாதனின் பாசமிகு சகோதரியும் சாரதா, கௌரி (ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பூ.சிவசிதம்பரம், வை. பாலகிருஷ்ணன் (ஓய்வு பெற்ற கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சி.ஞானரூபன், பா.மயூர்தர்சன் (முகாமைத்துவ பீடமாணவன் - கொழும்பு) பா.துவர்ணிகா (வைத்தியபீட மாணவி, சியான்ஜின் பல்கலைக்கழகம் - சீனா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ப.மயூசேரனின் (பொதுவைத்திய நிபுணர் - கொழும்பு) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2017) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லமான இல. 39/15 சிவப்பிரகாசம் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யா/கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**39/15, சிவப்பிரகாசம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 222 9985/ 077 696 8119**

## மரண அறிவித்தல்

# தர்மலிங்கம் இராசையா

**(முன்னாள் வர்த்தகர் - 4ஆம் வட்டாரம், புங்குடுதீவு)**



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிகவதிபிடமாகவும்தற்போது இல. 711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இராசையா (22.05.2017) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் பொன்னம்மா தம்பதியரின்மூத்தமருமகனும்ஞானாம்பாளின் அன்புக் கணவரும் கிருபாகரன் (ஜேர்மன்) ஞானகரன் (யாழ்ப்பாணம்), சிவகரன் (சுவிஸ்), பாலகரன் (ஜேர்மன்), திருவாங்கன்னி (லண்டன்), கிருபாலினி (ஆஸ்திரேலியா), கிருஷ்ணாகரன் (லண்டன்), மாலினி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்பரசி, அருணா, கோகிலவதனி, உஷாந்தினி, சிவராசா, சபேசன், சாந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம் (யாழ்ப்பாணறேடர்ஸ்) இரத்தினபூபதி, சண்முகராசா, நாகரெத்தினம் மற்றும் சறோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணவதி, நாகேஷ் மற்றும் சரஸ்வதி, விஜயலக்ஷமி, காலஞ்சென்ற சிவநாமம் மற்றும் சறோஜினிதேவி, மருதலிங்கம், சகுந்தலாதேவி, கனகசுந்தரம், கேதீஸ்வரன், யோகேஸ்வரன், அகிலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் சிவசோதி, பாலசிங்கம், இந்திரனேஸ்வரி, யோகேஸ்வரி, வசந்தகுமாரி, கனகசபாபதி, குணரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகலனும் ரஜீவன், டனுசீகன், டனுசீகா, கிருபீகா, அபிநயன், அபினா, டீலக்சானா, டீலக்சன், லவீன், தருணி, பிரஜின், சாய்கரன், அபிஜா, விதுஷன், விதுஜா, சதுர்சன், சதூரிகா, சகானி, கிஷான், றோஜி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 711, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 886 5871**

## மரண அறிவித்தல்

# செல்லையா சுந்தரலிங்கம்

**(உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் ஆலய முன்னாள் நீர்வாக சபை உறுப்பினர்)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.05.1926 | 20.05.2017 |

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சுந்தரலிங்கம் 20.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின்அன்புமகனும்காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செனகரத்தினம் ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நவரத்தினம், பஞ்சலிங்கம், சோதிமணி மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திராதேவி, உமாகாந்தன் (கனடா), ஈஸ்வரகாந்தன் (ஜேர்மனி), சிவன்ரூபன் (கனடா), மதிவதனா, பாஸ்கரன் (இத்தாலி), காலஞ்சென்ற கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரா, அருள்நிறைச்செல்வி, மல்லிகாதேவி, ஜெயந்தி, பாலச்சந்திரன், தனுஜா ஆகியோரின் அன்பு மாமனும் துஷாந்தி - றஜீபன், சந்தியேந்திரா - விஜிதா, யுகேந்திரா, உமாகஜன், உமாறமணன், அனுஷா, அமிர்தா, ஈசன், ஈர்த்தனா, சுபாங்கி, ஹரிஸ், கேமலதன், சாயுச்சியன் - நிஷாந்தி, கனிஷ்கா - ஜங்கரன், சுதர்சன், சுபாஜினி - மயூரன், சிந்துஜன், தாவிதன், கஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் கிசோன், அபிஷா, ஜதுஷா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்நாளை(25.05.2017)வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விளானை வீதி,**
**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வடக்கு மாகாணத்திற்கான "மாகாணகீதம்'' ஒன்றினை உருவாக்குதல்

வடக்கு மாகாணத்திற்கான மாகாணகீதம் ஒன்றினை உருவாக்குவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பொதுமக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்களிடமும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மாகாண கீதத்திற்கான ஆக்கங்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வியல் மரபுகள் மற்றும் கலை கலாசாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றைத் தழுவியதாகவும் பாரம்பரிய இசையினைக் கொண்டதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

மாகாணகீதத்திற்கான பல்லவி அனுபல்லவி ஆகிய ஒவ்வொன்றும் இரண்டு அடிகளைக் கொண்டதாகக் காணப்படல் வேண்டும்.

மாகாணகீதத்திற்கான சரணமானது நான்கு அடிகளைக்கொண்ட மூன்று சரணங்களைக் கொண்டதாக காணப்படல் வேண்டும்.

மாகாண கீதமானது வடக்கு மாகாணத்திற்குரியது ஐந்து மாவட்டங்களின் பெயர்களினையும் உள்ளடக்குவதுடன் வடக்கு மாகாணத்தின் தனித்துவமான பண்புகளைப் பிரதிபலிப்பதுடன் உயிரோட்டமானதாகவும் காணப்படல் வேண்டும்.

மாகாண கீதத்தினை எழுத்துருவில் தயாரித்து சமர்ப்பிக்க விரும்புவோர் வன்பிரதி (Hard copy) மற்றும் மென்பிரதி (Soft copy) ஆகியவற்றைச் சமர்பித்தல் வேண்டும் அவ்வாறு சமர்ப்பிப்போர் கீதத்திற்கான இராகத்தையும் இறுவட்டில் (Compact Disc) பதிவு செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆக்கங்கள் சுயமாகத் தயாரித்தாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனையவர்களுக்கு சொந்தமானதாகவோ பத்திரிகைகள் புத்தகங்கள் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டதாகவோ இருத்தல் தவிர்க்கபடல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பத்தினைச் சமர்பித்தல் வேண்டும்.

ஏற்கனவே எம்மால் கோரப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கேற்ப மாகாண கீதத்தினை சமர்பித்துள்ள விண்ணப்பதாரர்களும் இவ்விதி முறைகளுக்கு ஏற்பமீண்டும் அதனை மாற்றியமைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆக்கங்களைச் சமர்ப்பிப்பவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய பெயர் முகவரி தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கூடியவாறு தலைவர் சபை நடவடிக்கைகுழு பேரவைச் செயலகம் வடக்கு மாகாணசபை ஏ9 வீதி கைதடி என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது பேரவைச்செயலகத்தில் நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஆக்கங்களை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் மாகாணகீதம் எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**சீ. வீ. கந்தையா சிவஞானம்**
**அவைத் தலைவர் மற்றும் தலைவர் சபை நடவடிக்கைக்குழு. வடக்கு மாகாணசபை 23.05.2017**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் அதிபரும், கிராம அபிவிருத்திச்சங்க முன்னாள் செயலாளரும் வேலணை முதலாம் ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### நாகலிங்கம் கனகசபாபதி

(ஓய்வு நிலை அதிபர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

அவர்கள் (21.05.2017) அன்று நெதர்லாந்தில் காலமாகி விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**முன்னாள் அதிபரும், ஆசிரியர்களும்**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இலகுநாதர்



கைதடிகிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இலகுநாதர் (23.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் இலகுநாதரின் அன்புமனைவியும் விசிதரன் (தபாலகம், கைதடி) காலஞ்சென்ற விஜயரூபன் ஆகியோரின் பாசமிகுதாயும் சுபாசினியின் அன்புமாமியும் அக்ஷிதா (மாணவி, சா/இந்துக்கல்லூரி), அஸ்வினி (மாணவி, சா/இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற தவமணி மற்றும் பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருநாமச் சந்திரன், மாணிக்கம் மற்றும் காலஞ்சென்றவர் களான முருகேசு, நாகமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2017) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**இ. விசிதரன் (மகன்)**
**077 045 5909**

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 567 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 23.05.2017

வெற்றி இலக்கங்கள்
13 44 51 57 M

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 27,761,027/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 140
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 23.05.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 87,654,316/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
W 10 26 47 57

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

| இம்முறை தனயோகம் உங்களுடையதா? | திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|---|
| | 23.05.2017 | 2136 | நீலம் |

துலாம்
02 15 22 49

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 000, 000/=

2017.05.26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## ஆதனங்களின் மீள் மதிப்பீட்டு அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இன்று 24.05.2017 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டவிலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினரால் ஆதனவரி மீள்மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவேஆதனங்களை மதிப்பீடு செய்யும் பொருட்டு ஒவ்வொரு வட்டாரத்தின் வீதி ரீதியாக வருகைதரும் போது விலைமதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கோரும் விவரங்களை வழங்கி ஆதன வரி மீள்மதிப்பீட்டினை விரைவாக மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் மீள் மதிப்பீட்டு பணி முடிவடையும் வரையான காலப்பகுதிக்குள் தினமும் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரைக்குட்பட்ட நேரத்தில் தங்கள் ஆதனங்களுக்கு (வதிவிடங்கள், வெற்றுக்காணிகள், தோட்ட நிலங்கள், வர்த்தக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள்...) வருகை தந்து இப்பணியை மேற்கொள்வார்கள் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 | 25 |
| 05 | 04 |
| 1926 | 2017 |



கடந்த 25.04.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் தங்கமுத்து கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.05.2017) வியாழக்கிழமைஅதிகாலை4.00மணிக்குஅன்னாரின்இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து அவரின் இல்லத்தில் மதியம் ஒரு மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**அத்தாய், அல்வாய்.**
**021 226 4551, 077 248 7879**

**குடும்பத்தினர்.**

## கண்ணீர்க்காணிக்கை

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின்
சாதனை மைந்தனும் புகழ்பூத்த முன்னாள் ஆங்கில
ஆசானுமாகிய
திருவாளர் **க. பரஞ்சோதி**
அவர்களது தர்ம பத்தினி

### திருமதி மலைமகள் பரஞ்சோதி

*(நடேஸ்வராவின் புத்திரி முன்னாள் விஞ்ஞான ஆசிரியை)*

அவர்களின் ஆத்மசாந்திக்காக அன்னை
புவனேஸ்வரியைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**மதிப்பிற்குரிய ஆசானின்**
**நன்றிக்குரிய மாணவர்கள்**

## மென்பானத்துக்குள் சிலந்தி



யாழ்ப்பாணம், மே 24

குடிப்பதற்காக வாங்கிய மென்பானத்துக்குள் சிலந்தி ஒன்று இருப்பதை கண்ட நுகர்வோர் ஒருவர், யாழ்மாவட்டப் பாவனையாளர் அதிகார சபையில் முறைப்பாடு செய்துள்ளார். அவர் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள கடையொன்றில் உள்ளூர் மென்பானம் ஒன்றைக் குடிப்பதற்காக வாங்கியுள்ளார். போத்தலின் மூடியைத் திறக்க முற்பட்டபோது உள்ளே சிலந்தி இருப்பதை அவதானித்துள்ளார். மூடியைத் திறக்காமல் அதனை யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபைக்கு எடுத்துச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

மென்பானப் போத்தலின் வெளியே ஒட்டப்பட்டிருந்த விவரத்தில் அது சிறுப்பிட்டியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர். (த-ரி)

## காங்கேசன்துறையில் கிணற்றுக்குள்ளிருந்து கைக்குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 24

காங்கேசன்துறையில் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதியில் கிணறு ஒன்றில் இருந்து 10 கைக்குண்டுகள்மீட்கப்பட்டுள்ளனஎன்றுபொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு காணி உரிமையாளர் கிணற்றைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது அதற்குள் கைக்குண்டுகள் இருப்பதை அவதானித்துப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் ஹலோ ட்ரஸ்ட் பிரிவினர் கைக்குண்டுகளை மீட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அண்மைக்காலமாக புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளில் பெருமளவிலான ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன. (ற-10-26)

## ஏ.எல் மாணவர்களுக்கு தமிழ் பாடச் செயலமர்வு

யாழ்ப்பாணம் பொது நூலக வாசகர் வட்டம் நடத்தும் எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ்ப் பாட(நவீன இலக்கியம்) செயலமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வசிக்கும் சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு - 077 2626 944, 077 7437 162

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் (கல்லூரி வீதியில் ) மூன்று அறைகள், சமையலறை, **Double hall, Two Attache bathroom** உடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 076 751 1749, 075 0174 874

## பணிப்பெண் தேவை

மலேசியாவில் உள்ள தமிழ் குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய ஒரு பெண் பிள்ளை தேவை. வயது : 20 - 35
உடனடியாக வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.
தொடர்பு - 077 950 5492,
076 702 2737,
075 699 1366

# யானை தாக்கி பெண் சாவு

## வவுனியா, மதவாச்சிக்குடாவில் பரிதாபம்

வவுனியா, மே 24

வவுனியா, மதவாச்சிக்குடா, வல்பொலவில் வீதியால் நடத்து சென்ற இளம் குடும்பப் பெண் யானை தாக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது. 32 வயதான நிஷாஞ்சலகுமாரி என்பவரே உயரிழந்துள்ளார்.

"திருமணத்தின் பின்னர் பொலனறுவையில் வசித்த நிஷாஞ்சலகுமாரி தன் தாயாரைப் பார்க்க வந்திருந்தார். அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காகச் சென்றவரை யானை தாக்கியுள்ளது. கூக்குரல் கேட்டு சம்பவ இடத்துக்குச் சென்றோம். உடனடியாக மதவாச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் நிஷாஞ்சலகுமாரி உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்" என்று கிராமத்தவர்கள் கூறினர்.

உயிரிழந்த நிஷாஞ்சலகுமாரிக்கு 11வயதில் பெண் பிள்ளை ஒருவர் உள்ளார்.

நிஷாஞ்சலகுமாரியைத் தாக்கிய யானை குடியிருப்புக்களுக்குள் புகுந்து பயன்தரு மரங்கள் பலவற்றை நாசமாக்கியுள்ளது என்றும் கிராமத்தவர்கள் தெரிவித்தனர்.

(ற-10)




# அரச பேருந்து மீது கல் வீசித் தாக்குதல்

வவுனியா, மே.24

வவுனியாவில் இருந்து கொழும்பு.நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்து மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

"பேருந்து ஈரப்பெரியகுளம், குருந்துபிட்டிய இராணுவ முகாமுக்கு அருகே பயணித்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கல் வீசித் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலால் பேருந்தின் முன்பகுதியில் சிறிய சேதம் ஏற்பட்டது. பயணிகளுக்கு காயங்கள் ஏற்படவில்லை. மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-10)

# பதிவு இல்லாது பல கிராமங்கள்

## வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சுட்டிக்காட்டு

வவுனியா, மே 24

வவுனியா மாவட்டத்தில் உள்ள பல கிராமங்கள் பிரதேச செயலகத்திலோ, மாவட்ட செயலகத்திலோ பதிவு செய்யப்படவில்லை. அவற்றைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சுட்டிக்காட்டினார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இது தொடர்பாகச் சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவித்ததாவது

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி, செட்டிக்குளம் ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுகின்றன. உயிர் சேதம், பயிர் அழிவு, சொத்தழிவு என மக்கள் தினமும் அழிவுகளை எதிர்கொள்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். வனஜீவராசிகள் திணைக்களத்தின் அலுவலகங்களை செட்டிக்குளம் மற்றும் நெடுங்கேணியில் அமைக்க வேண்டும்.

காட்டு யானைகள் குடியிருப்புகளுக்குள் புகும் தடத்தைக் கண்டறிந்து அங்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட வேண்டும். காட்டுயானைகளின் அச்சுறுத்தல் காணப்படும் இடங்களில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

வவுனியா கற்குளம், ஆச்சிபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிலருக்கு வீட்டுத் திட்டங்கள் கிடைத்துள்ளன. அந்தக் கிராமங்களில் வாழும் பலருக்கு அவை கிடைக்கவில்லை. தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் அவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் தமது வீடமைப்புத் திட்டங்களின்போது பயனாளிகளை உடனடியாக கட்டுமானங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். இந்து மக்கள் சுபகாரியங்களை நாள் பார்த்தே ஆரம்பிப்பது பாரம்பரியம். காண்டாவனம் காலப்பகுதியில் அவர்கள் எந்தச் சுப காரியங்களையும் மேற்கொள்வதில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பயனாளிகளுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்.

வவுனியா வடக்கு, வெடிவைத்தகல் கிராம சேவையாளர் பிரிவில் இரு சிங்களக் கிராமங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அந்த இரு கிராமங்களையும் வெடிவைத்தகல் கிராம சேவையாளர் பிரிவில் இருந்து விடுவித்து வேறு கிராம சேவையாளர் பிரிவில் இணைக்க வேண்டும் என்றார்.

பதிவு செய்யப்படாதுள்ள கிராமங்களை பதிவு செய்வது தொடர்பாக இணைத்தலைவர்கள் மாவட்ட செயலருக்கும், பிரதேச செயலருக்கும் பணிப்புரை விடுத்தனர். வீட்டுத் திட்டம் தொடர்பில் வீடமைப்பு அதிகார சபையினர் 3 வார கால அவகாசம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நடவடிக்கையின்போது இரு சிங்களக் கிராமங்களையும் சிங்கள பிரதேச செயலகத்தல் இணைத்துக் கொள்ள வவுனியா மாவட்ட சிங்கள மக்கள் பிரதிநிதிகள் சம்மதம் தெரிவித்திருந்தனர். இரு சிங்களக் கிராமங்களையும் வவுனியா சிங்கள பிரதேச செயலகத்தில் இணைத்துக் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(ற-10)



# பேராற்றை அகழ்ந்து நீர் எடுக்க முயற்சி

## வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் செயற்பாட்டுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, மே 24

புதுக்குடியிருப்பு, வசந்தபுரம் கிராமத்தின் ஊடாகச் செல்லும் பேராற்றில் வனப் பாதுகாப்புப் திணைக்களத்தினர் பெரும் குழி தோண்டி நீர் எடுக்க முயற்சித்தனர். அதற்குப் பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டதை அடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

மணல் அள்ளும் ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் வளவனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் புதுக்குடியிருப்பு வட்டாரப் பிரிவினர் பேராற்றில் நீர் எடுக்க முயற்சித்தனர். அதை அறிந்த பிரதேச மக்கள் அங்கு குவிந்தனர். வளவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரின் முயற்சிக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவலளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றனர். வனவளப் பாதுகாப்புத் திணைக்கள த்தினரின் இந்த நடவடிக்கை தவறானது என்று பொலிஸாரும் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யுங்கள் என்று பொதுமக்களுக்கு அவர்கள் அறிவுறுத்தினர். அந்தப் பகுதியில் எவரும் மணல் அகழக் கூடாது என்றும் தடை விதித்தனர்.

"ஆற்றை ஆழப்படுத்தி இயந்திரம் மூலம் மணல் அகழ முற்பட்டமை எந்த வகையிலும் நியாயமானதல்ல. எமது வீடமைப்பு போன்றவற்றுக்கு சிறிதளவு மணல் எடுக்கும்போது சட்ட விரோத மணல் அகழ்வு என்று கூறி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்கின்றனர். ஆற்றின் மையப் பகுதியில் இயந்திரத்தின் உதவியுடன் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் வகையில் அனுமதியின்றி மணல் அகழ்ந்து நீரைப் பெற முடிந்தமை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று பிரதேச மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ற-101)

# நீதிமன்றக் கட்டளையை கிழித்தவர்கள் மறியலில்

திருமலை, மே 24

கிழக்கு மாகாண சபைக்கு முன்பாக நீதிமன்றக் கட்டளையை கிழித்தெறிந்த நான்கு பேரை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் சுபாசினி சித்திரவேல் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கிழக்கு மாகாண சபை அமர்வு நடைபெற்றபோது, மாகாணசபைக்கு முன்பாக பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதனால் அந்தப் பகுதியில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இதுதொடர்பாக திருகோணமலை தலைமையக பொலிஸாரால் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்குமாறு பிரதம நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸாவால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பொலிஸார் கட்டளையை பட்டதாரிகளிடம் கையளித்தனர்.

கட்டளையைப் பெற்றுக்கொண்ட பட்டதாரிகள் அதனை கிழித்து காலில் போட்டு மிதித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அதுதொடர்பில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்ற போதே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலைதேடும் பட்டதாரிகள் நான்கு பேரையும் மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

(ற-ய-45)

# மாணிக்கமடு விவகாரத்தை ஆராய சிறப்பு குழு

அம்பாறை, மே 24

அம்பாறை, மாணிக்கமடு விவகாரத்தில் சிறுபான்மை சமூகத்துக்கு அநீதிகள் ஏற்படாத வகையில் தீர்மானங்கள் எட்டப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மாணிக்கமடு பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக முதலமைச்சர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினர் முதலமைச்சர் தலைமையில் கூடியபோதே அவர் இதனை வலியுறுத்தினார்.

இந்த விடயம் ஆராயும் சிறப்பு கூட்டம் நேற்றுமுன்தினம் கிழக்க முதல்வர் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாண சபை கட்டடத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கல்வியமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி, காணியமைச்சர் ஆரியவத்தி கலப்பத்தி, எதிர்க்கட்சித் தலைவர் உதுமாலெப்பை, மாகாணசபை உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.

அதில் இறக்காமம் மாணிக்கமடு விவகாரம் தொடர்பான தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பிரச்சினைகளுக்குரிய விடயங்கள் பற்றியும் பேசப்பட்டது.

இந்த விவகாரத்தில் அரசியல்வாதிகளின் அங்கத்துவம் இன்றி குழுவொன்றை அமைப்பதெனவும் இணக்கம் காணப்பட்டது. கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையில், முதலமைச்சின் செயலாளர், அம்பாறை அரச அதிபர், காணி ஆணையாளர், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், இறக்காமம் பிரதேச சபையின் செயலாளர், காணி அதிகாரிகள் மற்றும் கல்வியமைச்சரால் நியமிக்கப்படும் அதிகாரி ஆகியோர் குழுவில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

குழுவின் இறுதி அறிக்கையை விரைவில் வழங்க வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். (ற-ய)

# பாலியாற்றைப் பாதுகாக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாலியாற்றைப் பாதுகாப்பதற்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காணிகள் சட்டவிரோதமா கக் கையகப்படுத்தப்படுகின்றன. சமூக விரோதிகளிடம் இருந்து பாலியாற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளுககுட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

"பாலியாறு எல்லாள மன்னார் காலத்தில் இருந்து சிறப்புப் பெற்ற ஒரு ஆறாகும். பாலியாற்றைப் பாதுகாக்கும் வகையில் அதன் இரு மருங்கிலும் பல மைல்கள் நீளத்துக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள் பல உண்டு. அவற்றில் முதிரை, பாலை, கருங்காலி, மருதம், போன்ற பயன்தரு மரங்கள் உட்பட காட்டு மரங்கள் வளர்ந்து இயற்கையான சுற்றுச் சூழலைப் பாதுகாத்து வருவதுடன், ஆற்று நீரால் மண்ணரிப்பு ஏற்படாது பாதுகாக்கின்றன.

அவற்றைச் சீர்குலைக்கும் வகையில் அரச உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் அத்துமீறி உள் நுழைந்து நிலங்களை கையகப்படுத்தி, காட்டு மரங்களை வெட்டி வீழ்த்துகின்றனர். பாலியாற்றின் கரையோரங்களை சேதப்படுத்துவதுடன் ஆற்று நீரைப் பயன்படுத்தி விவசாயத் தோட்டங்களையும், விவசாயப் பண்ணைகளையும் மேற் கொண்டு வருகின்றனர்.

வசதி படைத்த சிலர் தமது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள காணி அலுவலகங்கள் ஊடாக காணி அனுமதிப் பத்திரத்தையும் பெறுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தினை பாதுகாக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந -101)

## நிகழ்ச்சித் தொகுப்பாளர் கடத்தப்பட்டுக் கொள்ளை

*உடையை களைந்து ஒளிப்படம் எடுத்தனர் என்றும் முறைப்பாடு*

கொழும்பு, மே 24

மகரகமப் பிரதேசத்தில், தொலைக்காட்சிப் பெண் நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஒருவர் வாகனத்தில் கடத்தப்பட்டு அவரிடம் இருந்த நகைகள் கொள்ளையிடப்பட்டதுடன், உடைகளைக் களைந்து கொள்ளையர்கள் ஒளிப்படம் எடுத்தனர் என்று மகரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி இரவு வேலைகளை முடித்துக்கொண்டு, தனது வீட்டுக்கு நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் வாகனத்தில் சென்றுள்ளார். ரத்மல்தெனிய சந்திக்கு 500 மீற்றர் தொலைவில் வைத்துத் திடீரென வாகனத்தில் வந்தவர்கள் பெண் தொகுப்பாளரையும், ஆண் தயாரிப்பாளரையும் துப்பாக்கி முனையில் கடத்தியுள்ளனர்.

கடத்தப்பட்ட பின்னர், நிகழ்ச்சித் தயாரிப்பாளரே வாகனத்தை செலுத்தினார். அவரின் தலையில் துப்பாக்கியை வைத்தே கடத்தல் இடம்பெற்றுள்ளது. கடத்தப்பட்டு சுமார் அரை மணி நேரத்தில் ஓர் இடத்தை அடைந்தது. அங்கு வீடொன்றுக்குள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டனர். வாகனத்தில் நான்கு கடத்தல்காரர்கள் இருந்தனர்.

வீட்டின் அறையொன்றில் அவ்விருவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அங்கு பெண் தொகுப்பாளரின் உடைகள் களையப்பட்டு அலைபேசியில் ஒளிப்படம் எடுக்கப்பட்டார். தயாரிப்பாளர் முன்னிலையிலேயே இது இடம்பெற்றுள்ளது.

இதன் பின்னர் பெண் தொகுப்பாளரின் அலைபேசி, காதணிகள், தங்கச் சங்கிலி ஆகியவையுடன் பணப் பையும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

அவர்கள் இருவரையும் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சனி அதிகாலை கொட்டாவ மாலபல்ல தொடருந்து நிலையம் அருகே இறக்கி விட்டுச் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்டவர்கள் பயணம் செய்த தயாரிப்பாளரின் வாகனமும் எங்கு உள்ளது என்று இதுவரை தெரியவில்லை. பெண் நிகழ்சித் தொகுப்பாளர் மகரகம பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். (ந -5)

## 'ரிவிர' கட்டடத்துக்கு 'சீல்'

கொழும்பு, மே 24

முன்னாள் அரச தலைவரின் குடும்பத்தினரின் பங்கு முதலீட்டில் இயங்கி வந்த ரிவிர சிங்களப் பத்திரிகை அலுவலகக் கட்டடம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை பொலிஸாரால் அரக்கு முத்திரையிட்டு மூடப்பட்டது.

அண்மைக்காலமாக அரசுக்கு விரோதமான கருத்துக்களை வெளியிடும் போக்கு ரிவிர பத்திரிகை நிர்வாகத்திடம் காணப்பட்டது. அவர்களின் செய்திகள் குறித்து சில சமயங்களில் அமைச்சர்கள் காரசாரமாக பதில் கருத்து தெரிவிக்கும் நிலையும் ஏற்பட்டிருந்தது.

மருதானையில் அமைந்துள்ள ரிவிர பத்திரிகை அலுவலகம் இயங்கி வந்த கட்டடம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கின் இடைக்காலத் தீர்ப்பின் பிரகாரம் ரிவிர அலுவலக கட்டடம் பொலிஸாரால் மூடப்பட்டுள்ளது. (ந -5)

# அரசின் அசமந்தப் போக்குக்கு ஜி.எஸ்.பி. சலுகையே காரணம்

*ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு*

செங்கலடி, மே 24

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்கியதால் சிறுபான்மை மக்களின் பிரச்சி னைகளுக்கான தீர்வு விடயத்தில் அரசு அசமந்தப் போக்கில் நடந்து கொள்கின்றது.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவத்தார்.

அவர் தெரிவித்ததாவது

ஐரோப்பிய நாடுகளால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி. வரிச் சலுகை கடந்த கால ஆட்சியாளர்கள் நடந்துகொண்ட அடாவடித் தனமான செயற்பாடுகள் காரணமாக நிறுத்தப்பட்டது. ஆடைகள், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருள்கள் சார்ந்த ஏற்றுமதிப் பொருள்களுக்கு வரிச்சலுகை மூலமாக பன்னாட்டுச் சந்தையில் கேள்வியை அதிகரிக்கக்கூடிய நிலைமை இருந்தது. இதனால் எங்களுடைய நாடு அதிக வருமானத்தைப் பெறமுடியும்.

கடந்த கால ஆட்சியாளர்களின் வரம்புமீறிய செயற்பாடுகளால் அந்தச் சலுகை நிறுத்த ப்பட்டிருந்தது. தற்போதைய அரசு தங்களுடைய தந்திரோபாய முயற்சிகள் மூலமாக வரிச்சலுகையை மீண்டும் பெற்றுள்ளார்கள்.

வரிச்சலுகை வழங்கப்படவேண்டும் என்றால் நாட்டிலுள்ள இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தபோதும் உடனடியாக வரிச் சலுகை வழங்கப்பட்டது. நாட்டுக்கு நன்மையாக இருந்தாலும் சிறுபான்மைமக்களின்பிரச்சினை தொடர்பானவிடயத்திலிருந்துஅரசு சற்று விலகிச் செல்வதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது.

பன்னாடுகளின் பார்வையில் குறிப்பிட்ட காலக் கெடுவினுள் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தற்போதை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. தொடர்ந்தும் ஏமாற்ற முனைந்தால் பல சலுகைகளை இழக்க நேரிடும் என்ற காரணத்துக்காக எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவார்கள் என நம்புவோம் - என்றார். (ந - ய,45)



## திருட்டு: சந்தேகத்தில் சிறுவன் கைது

வவுனியா, மே 24

கடையை உடைத்துக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக 17 வயதுச் சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியா மகாறம் பைக்குளத்தில் நடந்துள்ளது.

வவுனியா மகாறம் பைக்குளத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தின் பின்பக்கக் கதவை உடைத்து சுமார் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான கமரா, 18 ஆயிரம் ரூபா பெறுமதியான சம்சாங் கைபேசி, டயலொக் மீள் நிரப்பு அட்டை என்பன களவாடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் வவுனியா சாந்தசோலையைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவனை சந்தேகத்தின்பேரில் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் மன்றில் சந்தேகநபரை முற்பபடுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந - 10)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய கற்பூரத் திருவிழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு காலை சிறப்பு அபிஷேக பூசைகள் இடம்பெற்றதுடன், வேற் பெருமானுக்கு அந்தண சிவாச்சாரியார்கள் ஆயிரத்தெட்டு சங்குகளால் அபிசேகமும் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மாலை 4.45 மணிக்கு சிறப்புப் பூசைகள் இடம்பெற்று ஆறுமுகப் பெருமானின் திருக்கல்யாண வைபவமும் இடம்பெற்றது. (ந -10)

## மகிந்த அணியுடன் இணையவுள்ளனர் சு.க. உறுப்பினர்கள்!

*ரஞ்சித் சொய்ஸா கூறுகிறார்*

கொழும்பு, மே 24

ஓகஸ்ட் 21ஆம் திகதிக்குப் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் என 12 பேர் மகிந்த அணியுடன் இணைந்துகொள்வர் என்று கூறுகின்றார் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா.

அவர் தெரிவித்ததாவது:

இந்த மாற்றம் தொடர்பில் தற்சமயம் பொது எதிரணியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பேச்சில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரும் பொது எதிரணியுடன் இணைவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

கூட்டு அரசு இப்போது தள்ளாட்டத்தில் இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலாவதியாகின்றது. அதன்பின் அந்த ஒப்பந்தத்தை புதுப்பிப்பதா அல்லது கை கழுவி விடுவதா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த விடயத்தில் சுதந்திரக் கட்சி பிரபலங்களைப் போலவே ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் திரிசங்கு நிலையில் காலம் கடத்துகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீது மக்கள் வைத்திருக்கும் அபிமானம் என்பது இன்னமும் குறையவில்லை. சுதந்திரக் கட்சி இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் கைப்பாவையாகி, ரணில் விக்கிரம சிங்கவின் தாளத்துக்கு நாட்டியமாடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற மகிந்த அணியால் மட்டுமே முடியுமென மக்கள் ஆணித்தரமாக நம்புகிறார்கள் - என்றார். (ந-5)

# அரசியல் நோக்கத்துக்காகவே அமைச்சரவையில் மாற்றம்

## ஜே.வி.பி. சாடல்

கொழும்பு,மே 24
அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க விமர்சித்தார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு பத்தரமுல்லையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு, அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஊழல்,மோசடியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து, அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படும் என உறுதியளித்து விட்டே, இந்த அரசு ஆட்சிப்பீட மேறியது. தற்போது இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், உறுதிமொழிகள்இன்னமும்நிறைவேற்றப்படவில்லை. நாட்டில் பல பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. அவற்றுக்கான தீர்வுகளைத் தேடாது, அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் தவறிழைத்திருந்தால், அவரை அந்தப் பதவியில் இருந்து விலக்கி, உரிய தண்டனை வழங்க வேண்டும். அதைவிடுத்து, அந்த அமைச்சில் இருந்து நீக்கிவிட்டு மற்றுமொரு அமைச்சை வழங்குவது தீர்வல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் தொடர்ந்தும் அரசியலில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது.

ஜோன் செனவிரத்ன, எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோர் கடந்த காலங்களில் அழுது புலம்பிக் கொண்டிருந்தனர். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மேலதிக பொறுப்புகள் அவர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

அவன்காட் விவகாரத்தால் அமைச்சுப் பதவியை விட்டு விலகிய, திலக் மாரப்பன, பதவி துறந்த பின்னர் நாடாளுமன்றம் பக்கம் வருவது குறைவு. அதிருப்தி நிலையில் இருக்கும் அவரைத் திருப்திப் படுத்தவே அபிவிருத்தி அமைச்சு. அபிவிருத்திக்கென ஏற்கனவே அமைச்சு இருக்கின்றது. பிராந்திய அபிவிருத்திக்கும் அமைச்சு இருக்கின்றது. . புதிய அபிவிருத்தியின் நோக்கம் என்னவென்பது மக்களுக்குப் புரியும்" - என்றார். (ஐ)

## போர்த் தளபாடங்களில் இராணுவம் தொடர்ந்து ஆர்வம்

### பெலாரஸ் நாட்டு ஊடகம் தகவல்



கொழும்பு,மே 24
பெலாரஸ் நாட்டில் இருந்து போர்த்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் இலங்கை இராணுவம் ஆர்வம் கொண்டுள்ளது என்று பெல்டா என்ற பெலாரஸ் நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, MILEX 2017 என்ற அனைத்துலக இராணுவத் தளபாடக் கண்காட்சி பெலாரசில் கடந்த 20 ஆம் திகதி இடம் பெற்றது. இந்தக் கண்காட்சியில் இலங்கை இராணுவத்தின் சார்பில் மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க தலைமையிலான இராணுவ அதிகாரிகள் குழு பங்கேற்றது. கண்காட்சியில் கலந்து கொண்ட மேஜர் ஜெனரல்ருவான் குலதுங்க, "கண்காட்சியில் ஆயுதம் தாங்கிய கவச வாகனங்கள் எமது கவனத்தை ஈர்த்தது. நாங்கள் பிரதானமாக, எமது கவச வாகனங்களைத் திருத்தியமைத்து, ஆயுதத் தளபாடங்களை நவீன மயப்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளோம். அத்துடன் புதிய வகையான கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களையும் வாங்குவது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம். பெலாரஸ் நாட்டில் வாங்கப்பட்ட தளபாடங்களை இலங்கை இராணுவம் ஏற்கனவே பயன்படுத்தி வருகிறது" என்று குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ஐ)

## சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்ய ஏற்பாடு

கொழும்பு,மே 24
இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும், அரச தலைவர் ஆணைக்குழுவின் முன் அளிக்கப்படும் சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை முக்கிய விசாரணைகளின் போது ஆணைக்குழு மண்டபத்தில் ஊடகங்களின் பிரசன்னத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் மேலதிக பணிப்பாளர் வசந்த அல்விஸ் , பேர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனத்தின் வர்த்தகப் பரிமாற்றங்கள் தொடர்பில் சாட்சியமளித்த போது ஊடகவியலாளர்கள் மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வசந்த அல்விஸ் சாட்சியமளிக்க எழுந்த போது, பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மிலிந்த குணதிலக்க மண்டபத்திலிருந்து பொதுமக்களையும், ஊடகவியலாளர்களும் அப்புறப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்றுக் கொண்ட ஆணைக்குழுவின் தலைவர், அனைவரையும் அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டார். அதன் பின்னரே சாட்சியம் ஆரம்பமானது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தொடருந்துச் சாரதிகள் சங்கத்தின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு,மே 24
நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த தொடருந்துச் சாரதிகள் சங்கத்தின் வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்தார்.

கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படுமென இலங்கைத் தொடருந்துத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் அளித்த எழுத்து மூல வாக்குறுதியின் அடிப்படையில், வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

தொடருந்து உப சாரதிகளுக்கு, முதன்மை சாரதிகளின் பொறுப்புகள் சில வற்றைப் போக்குவரத்து அமைச்சு ஒப்படைத்தமைக்கு ஆட்சேபனை தெரிவித்தும், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் இன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடருந்தின் சாரதிகள் முன்னெடுக்கவிருந்தனர்.

எவ்வாறாயினும் பொது முகாமையாளரின் உறுதிமொழி குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றப்படா விட்டால், மேலதிக அறிவித்தல்கள் எதுவுமின்றி மீண்டும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டி வரும் எனவும் இந்திக்க தொடங்கொட எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## அரச மருத்துவர் சங்கத்தினர் நாளை தொழிலமைச்சருடன் சந்திப்பு

கொழும்பு,மே 24
அரச மருத்துவர் சங்கத்தினர், தொழிலமைச்சர் டபிள்யு.டீ.ஜே. செனிவிரத்னவை நாளை வியாழக்கிழமை சந்திக்கவுள்ளனர். சங்கத்தின் தொடர் போராட்டங்கள் குறித்துக் கலந்துரையாட விரும்புவதாக தொழிலமைச்சர் அறிவித்ததையடுத்தே, இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

"எங்களது சாத்வீகப் போராட்டங்களுக்குச் சுகாதார அமைச்சர் விதிக்கும் தடைகள் மற்றும் விடுக்கும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றால் நாங்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளோம். தொழிலமைச்சர் என்ற ரீதியில் அவரது தலையீடு அவசியமென, நாங்கள் வற்புறுத்தினோம். அதனையடுத்தே தொழிலமைச்சர் இந்தச் சந்திப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்" என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# அமெ. இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் இலங்கை வருகை

## அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் பார்வையிட்டனர்

கொழும்பு,மே 24
இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்கா இராஜாங்கத் திணைக்கள உயர் அதிகாரிகள் குழு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நேற்று முன்தினம் பார்வையிட்டது.

தெற்கு மத்திய ஆசியப் பிராந்தி யத்துக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் வில்லியம் பில் ரொட் தலைமையிலான குழுவினர், நல்லெண்ணப் பயணமாக இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர். அவர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்ட மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அதனையடுத்து அந்தக் குழுவினர் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் செயற்பாடுகள், மற்றும் உள்ளூர் முகாமைத்துவத்தின் செயற்திறன் என்பன தொடர்பான விவரங்களையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். தொடர்ந்து அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் பார்வையிட்டனர்.



அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பெரும் பகுதிப் பங்குகளை சீன நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு கொழும்பு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் துறைமுகத்தைப் பார்வையிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சீனாவுடன் அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டைச் செய்து கொள்வதில் தொடர்ந்து இழுபறிகள் நீடித்து வருகின்றன. அதேவேளை, அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முதலாவது உயர் அதிகாரி வில்லியம் ரொட் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மங்களவின் பதவி மாற்றம் நல்லிணக்கம் மீதான அடி

இலங்கையில் புதிய அரசமைப்பை உருவாக்குவது மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பானதனது நிலைப்பாட்டில் இருந்து தற்போதைய கூட்டு அரசு விலகிச் செல்ல ஆரம்பித்திருக்கிறது என்று உலக நெருக்கடிகள் குழு அண்மையில் அறிக்கை விட்டிருந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து மங்கள சமரவீர மாற்றப்பட்டிருக்கிறார். அமைதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் இருந்து அரசு விலகிக் செலல்வதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த மாற்றம் இருக்கக்கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு கூட்டாட்சித் தத்துவத்தின் கீழ் தமிழ் மக்கள் விரும்புவதைக் கொடுத்துத் தீர்வு ஒன்றைக் கண்டுவிட வேண்டும் என்று நினைக்கக்கூடிய, அரசுக்குள் இருக்கும் வெகு சிலரில் மங்கள சமரவீர முக்கியமானவர். தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் ஊடாகத்தான் இலங்கையை அபிவிருத்தியடையச்செய்ய முடியும் என்று உறுதியாக நம்புகிறார் அவர்.

அதன் அடிப்படையில்தான் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாகக் கருத்துத் தெரிவித்தார். மனித உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் உலகின் கருத்தோடு போக்கோடு ஒத்தோடும் பண்பையும் வெளிப்படுத்தினார்.

2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதற்கு இணை அனுசரணை வழங்குவது என்று இலங்கை தீர்மானித்ததில் கணிசமான பங்கை ஆற்றியிருந்தவரும் மங்கள சமரவீரவே!

இனப்பிரச்சினை விடயத்தில் உலகின், குறிப்பாக மேற்கு நாடுகளின் கரிசனைக்குப் பதிலளிப்பதன் மூலம் உலக அரங்கில் இலங்கையின் மதிப்பைத் தூக்கி நிறுத்த முடியும் என்றும் அவர் கருதினார். அதற்கேற்பவே போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கும், காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015 தீர்மானத்தின் மூலம் இணங்கினார்.

அவரால் இணங்கப்பட்ட இந்த இரு விடயங்களிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பெரியளவில் உடன்பாடு இருக்கவில்லை. அதிலும் குறிப்பாக போர்க் குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க முடியாது என்பதில் மைத்திரி பிடிவாதமாக இருந்தார். தனக்குத் தெரியாமல் அல்லது தன்னை மீறி இது விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இது விடயத்தில் மைத்திரிக்கும் மங்களவுக்கும் இடையில் சில மோசமான காலங்கள் கடந்து சென்றிருக்கின்றன. எப்படியிருந்தபோதும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைககள் சபையில் தான் வழங்கிய வாக்குறுதியிலிருந்து பின்வாங்கவில்லை. இந்த ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஜெனிவா அமர்விலும் கூட அதே வாக்குறுதிகளை நிறவேற்றுவதாக உறுதி வழங்கினார். 2015ஆம் ஆண்டுத் தீர்மானத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும் மங்கள இலங்கை அரசு சார்பில் இணை அனுசரணை வழங்கியிருந்தார்.

இத்தகைய பின்னணியிலேயே அவர் அயலுறவுத் துறை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவரது பதவி நீக்கம், இலங்கை அரசு ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து பின்வாங்குவதற்கும், காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை இயக்காமல் அப்படியே கிடப்பில் போட்டுவிடுவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த விடயங்களில் மங்கள அளவுக்கு ஆர்வம் உள்ளவர்கள் அரசுக்குள் வேறு எவரும் கிடையாது. மங்களவை நிதி அமைச்சராக்கியதன் மூலம் இனி இந்த விடயங்களில் இருந்த அவரது கவனம் ஓரங்கட்டப்படும். இது நல்லிணக்க மற்றும் அமைதி முயற்சிகளின் மீது பலமாக வீழுந்துள்ள அடி. எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

# மோசடிக் களமாக மாறியுள்ளதா வடக்கு மாகாண சபை?

சேரலாதன்

வடக்கு மாகாண அமைச்சர்கள் சிலர் மீதான மோசடி விசாரணை அறிக்கை முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வது முதலமைச்சரின் பொறுப்பாகும். நீண்ட போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களில் பலர் இன்னமும் தமது இயல்பு நிலைக்குத் திரும்பாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற அவர்கள், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காகப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில்தான், தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் வடக்கு மாகாண சபையைத் தெரிவு செய்தனர். அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருவதில் மாகாணசபை எந்த அளவுக்குப் பாடுபட்டது என்பதை மக்கள் தற்போது நன்றாக உணர்ந்துள்ளனர்.



முதலமைச்சர் உட்பட நான்கே நான்கு பேர் மட்டுமே வடக்கு மாகாண சபையில் அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்கின்றனர். மகாணசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலைத் தெரிவு செய்த வேளையிலும், பின்னர் அமைச்சுப் பதவிகளை வழங்கிய வேளையிலும்கூட கூட்டமைப்புக்குள் பெரும் இழுபறி காணப்பட்டது. மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகச் சிந்திப்பதை விடுத்துப் பதவிகளுக்காகத் தமிழ் அரசி யல்வாதிகள் தமக்குள் மோதிக் கொண்டமை வெட்கக்கேடானது. ஆனால் அது நடைபெற்று முடிந்தது. தற்போது மோசடி செய்ததாகக் கூறி அமைச்சர்களிடம் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது.

### அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு முதலமைச்சரே பொறுப்பேற்க வேண்டும்

ஏற்கனவே தமிழர்கள் ஆளத் தெரியாதவர்கள்; ஒற்றுமையில்லாதவர்கள் என்ற பழிச் சொற்கள் எம்மவர்கள் மீது சுமத்த ப்படுவதுண்டு. தற்போது ஊழல் வாதிகள் என்றதொரு புதிய பழியும் சேர்ந்து நிற்கின்றது. அமைச்சர்கள் மீதான மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு முதலமைச்சர் நிச்சயமாகப் பொறுப்புக் கூற வேண்டும். ஏனென்றால் மாகாணசபையின் தலைமைப் பொறுப்பு அவர்வசமே உள்ளதால் அவர் இதிலிருந்து விலகி விட முடியாது. நெருப்பில்லாமல் புகையாது என்று கூறுவார்கள். விசாரணைகளில் ஏதோ உள்ளமை தெளிவாகின்றது.

தமிழர்களின் போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் அதன் .போராட்டக் களமாக மாகாண சபை காணப்படுகின்றது. அதிகாரங்கள் குறைவாகக் காணப்பட்டாலும், தமிழர்கள் தமது அபிலாசைகளைத் தெரிவிப்பதற்கு மாகாண சபையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அங்கு மோசடிகள் நிகழ்ந்ததாகக் கூறப்படு கின்றமை தமிழர்களுக்குப் பெரும் இழுக்கைத் தேடித் தந்து விடும்.

### ஊழல் மோசடிகள் தமிழ்நாட்டு அரசியலைப் போன்று ஆகி விட்டுள்ளன

ஏற்கனவே தமிழ் நாட்டில் ஊழல் மோசடி அரசியல் வாதிகளால் பெரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. அங்கு முதலமைச்சராகவிருந்த மறைந்த ஜெயலலிதா ஊழல் வழக்கொன்றில் குற்றவாளியாகக் கருதப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டமை தமிழ் இனத்துக்கே இழுக்கைத் தேடித் தந்து விட்டது. அவர் உயிரோடு இருந்திருந்தால் சிறையிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பார். தற்போது அவரது நெருங்கிய தோழியாகி சசிகலா அதே வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுச் சிறைச்சாலைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கின்றார். அவரால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தமிழ் நாட்டின் அரசியலையே தற்போது ஆட்டம் காண வைத்துள்ளன.

தற்போது வடக்கு மாகாண அமைச்சர்கள் மோசடியில் ஈடுபட்டதாக வெளிவருகின்ற செய்திகள் தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் தலைக்குனிவை ஏற்படுத்தக் கூடியவை.

ஆனாலும் மோசடி செய்தவர்கள் எவராக இருந்தாலும் அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும். தற்போது மாகாணசபையைப் பொறுத்தவரையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளட் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய நான்கு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பதவி வகிக்கின்றனர். இவர்கள் கூட்டமைப்பில் இணைந்திருந்தாலும் வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனர். முதலமைச்சர் மோசடி தொடர்பான விசாரணை அறிக்கையை மாகாண சபையில் சமர்ப்பிக்கும்போது உறுப்பிர்களிடையே மோதல்கள் கூட வெடிக்கலாம். ஆனால் ஜனநாயக மரபுகளுக்கு அமைவாக இவை அமைவது தான் இன்றைய தேவையாகும். கூட்டமைப்பு என்ற மிகப்பெரிய அரசியல் சக்தியாகப் பரிணமித்திருக்கும் கூட்டமைப்பினர், தமது ஐக்கியத்தை எந்த வகையிலும் இழந்து விடக்கூடாது. மோசடி செய்தவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசியல் ரீதியில் எவருமே முன்வரக் கூடாது. மோசடியாளர்கள் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும். இதில் பாகுபாட்டுக்கு இடமேயில்லை.

### சுயநல அரசியல்வாதிகளது மோசடிகள் அனுமதிக்கப்படலாகாது

ஆகவே கூட்டமைப்பின் தலைமை இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுத் தகுந்த முடிவொன்றை எடுக்க வேண்டும். முதலமைச்சர் கூட்ட மைப்பின் தலைமைக்குக் கட்டுப்பட்டவர் என்பதால் அவர் தலைமையுடன் கலந்து ஆலோசித்துத் தகுந்த தீர்வொன்றைக் காண முற்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டுத் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், சுயநல அரசியல்வாதிகள் மோசடிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை எவராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. கூட்டமைப்புக்கு நேர்ந்த களங்கமாகவே இதைக் கருத வேண்டும். மாற்று அணியினர் கூட்டமைப்பின் நடவடிக்கைகளைக் கண்கொத்திப் பாம்பு போன்று அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். மாகாண அமைச்சர்களின் மோசடி விசாரணை அறிக்கையை அவர்கள் நிச்சயமாகக் கையில் தூக்கி வைத்துக் கொண்டு பேயாட்டம் ஆடவே செய்வார்கள். ஆகவே கூட்டமைப்பு இதில் பக்கச்சார்பற்ற விதத்தில் நடவடிக்கை எடுத்துக் குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

# அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் தமிழ் அரசியல் கைதிகள்

விவேகானந்தனூர் சதீஸ்

'கைதிகளும் மனிதர்களே' என கற்சுவர்களில் எழுதி வைத்துக் கொண்டு காட்டுமிராண்டிகள்போல் நடந்து கொள்ளும் சிறைச்சாலைத்துறை ஊழியர்களை என்னவென்று சொல்வது? காக்கி உடை அணிந்தால் என்ன, கையில் பற்றன்பொல்லு வைத்திருந்தால் என்ன, தாமும் அரச பணியாளர்களே என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. சிறைக்காவலர்களுக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுக்க விதிக் கோவையும் உள்ளது. அரசசேவை என்று கூறிக் கொண்டாலும் அவர்கள் மக்களுக்கு இலவசமாகச் சேவை செய்யவில்லை. மாறாக ஊதியத்தை எதிர்பார்த்துப் பணிசெய்பவர்கள். அரச ஊழியர்கள் ஒவ்வொருவரும் பெறுகின்ற சம்பளங்கள், மேலதிக கொடுப்பனவுகள் என அனைத்தும் மக்களின் வரிப்பணத்தில் இருந்தே திரட்டப்படுகிறது என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கமைய தத்தமது மனச்சாட்சிக்கு ஏற்ப தமது கடமைகளை உரிய முறையில் ஆற்ற வேண்டும். ஆனால் எமது நாட்டின் கடைநிலை ஊழியர் முதல் உயர் மட்ட அதிகாரிகள்வரை அனேகமானவர்கள் தாம் ஏதோ மக்களுக்கு இலவச சேவை ஆற்றுவதாகவே தம்மைக் காண்பிக்க முற்படுகிறார்கள். கையூட்டல் வழங்காது தம்மிடம் உதவி வேண்டுவோரை அவர்கள் மந்தைகளாக மதிக்கிறார்கள்.

**சிறைக் கைதிகளும் சரி, சிறைக் காவலரும் சரி, எல்லோரும் மனிதர்களே**


அரச உத்தியோகத்தர்களான சிறைக் காவலர்களில் பலர் தமது பணிக்காலத்தில் மனிதாபிமானம் என்பதை மறந்து செயற்படுகின்றனர். சிறைக்கைதியாக இருந்தாலும், சிறைகாவ லராக இருந்தாலும் எல்லோரும் மனிதர்களே. இந்த நிலையில் அண்மைய நாள்களாக தமிழ் அரசியல் கைதி கள் பலர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவது தெரிய வந்துள்ளது. கடந்த 10 வருடங்களாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த 60 வயதுடைய கனகசபை தேவதாசன் என்ற அரசியல் கைதிக்கு, 29.03.2017 அன்று கொழும்பு விசேட நீதிமன்றினால் 20வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. அதனை அடுத்து அவரைத் தண்டனைக் கைதியாக பதிவு செய்யும் பொருட்டு தற்காலிகமாக வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றியுள்ளனர். அங்கு உதவி அத்தியட்சகர் தர அதிகாரி உட்பட சில சிறைக் காவலர்கள் குறித்த கைதியின் வழக்கு விவரங்களைக் கேட்டுவிட்டு, இனக்குரோத உணர்வில் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் திட்டியுள்ளனர். அத்துடன் கடுமையான வேலைகளைச் செய்விக்குமாறு சிங்களக் கைதிகளையும் தூண்டிவிட்டனர். அதனால் வெலிக்கடைச் சிறையில் இருந்த 10 நாள்களும் அவர் அங்கு பல்வேறு வகையிலான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இருந்தபோதிலும் சிறைச்சாலைச் சூழ்நிலை குறித்து நன்கு அனுபவப்பட்டிருந்ததால் உயர் அதிகாரியிடம் முறையிடாமல் சகிப்புடன் இருந்து மீண்டும் மகசின் சிறைக்கு வந்துள்ளார். அதே போன்று 30 ஆண்டுகள் கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டு, அதனை மேல்முறையீடு செய்துள்ள யாழ்ப்பாணத்தை சேர்ந்த மகேந்திர ஐயர் ரகுபதி சர்மா என்ற அரசியல் கைதி, கால் உபாதை காரணமாக வைத்திய நிபுணரது பரிந்துரைக்கு அமைய மகசின் சிறைச்சாலையில் இருந்து 11.04.2017 அன்று வெலிக்கடை சிறைக் காவலர்களால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.




**இனத்துவேசப் போக்குடன் பணிபுரியும் சிறைக் காவலர்கள்**

அங்குசென்றபின்னர்சிறைக்காவலர்கள் நோயாளியான குறித்த அரசியல் கைதியைச் சுட்டிக்காட்டி இவர்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதான குண்டுத் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தவர் என வைத்தியசாலை ஊழியர்களிடம் கூறியுள்ளனர். அது மட்டுமன்றி கைதியைப் பரிசோதித்த மருத்துவரிடம் அவ்வாறே கூறியுள்ளனர். அதன் பிரதிபலிப்பாக திருப்திகரமான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளாது வேண்டா வெறுப்புடன் மருத்துவர்களும் நடந்துகொண்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் மகசின் சிறை அத்தியட்சகர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறைச்சாலைகள் அமைச்சர் ஆகியோருக்கு எழுத்து மூலம் குறித்த அரசியல் கைதி முறையிட்டுள்ளார். இது போன்ற சம்பவங்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் அடிக்கடி இடம்பெறுவது வழக்கமாகி விட்டுள்ளது. 16 வருடங்களாக சிறையில் இருந்து வரும் யாழ் கரவெட்டியைச் சேர்ந்த 43 வயதான வேலாயுதம் வரதராஜன் என்ற அரசியல் கைதி, அண்மைக்காலமாக இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்கு கடந்த 22.4.2017 அன்று வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டு மகசின் சிறையில் இருந்து மருத்துவரின் கட்டளைக்கு அமைய வெலிக்கடை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இவ்வாறு அனுப்பப்பட்ட நோயாளியான அந்த அரசியற் கைதியை அங்கு கடமையில் இருந்த சிறைக்காவ லர், வைத்திய விடுதியில் அனுமதிக்க முடியாது என்று கூறித் தகாத வார்த்தைகளால் திட்டி யுள்ளார். அதன்போது குறித்த அரசியல் கைதி தனது கையிலிருந்த மருத்துவச் சிட்டையைக் காண்பித்துதன்னைச் சிறைச்செல்லுக்குள் பூட்டாது வைத்திய விடுதிக்குள் வைத்து பராமரிக்கும் படி மருத்துவர் பரிந்துரைத்ததை எடுத்து கூறி யுள்ளார். மருத்துவரின் சிபார்சைக் கருத்தில் கொள்ளாமலும் நோயாளியின் நோய்த்தீவிரத்தைக் கணக்கில் எடுக்காமலும் சிறைக் காவலரால் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு பலவந்தமாக இழுத்துச் சென்று சிறை செல்லுக்குள் தள்ளிப் பூட்டியும் உள்ளனர். இத்தனைக்கும் வரதராஜன் என்ற குறித்த அரசியல் கைதி மீது காட்டப்பட்ட வெறுப்புணர்வுக்கு காரணம், இதற்கு முன்னர் ஒருதடவை வெலிக்கடை மருத்துவமனையில் சிறைக் காவலர்களால் தனக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதி தொடர்பில் குறித்த கைதி மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டிருந்தார். அதற்கமைய அவர்களால் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டி ருந்தன. அதன் விளைவே தற்போதைய அச்சுறுத்தல் சம்பவம். மொத்தத்தில் இது தமிழ் அரசியல் கைதிகளைத் திட்டமிட்டுப் பழிவாங்கும் ஒரு தொடர் செயற்பாடு என்றே கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் தமக்கு இரண்டாவது தடவையாகவும் வெலிக்கடை சிறைக் காவலர்களால் அநீதி இழைக்கப்பட்டமை தொடர்பில் மகசின் சிறை நிர்வாகத்தினரிடமும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் குறித்த அரசியற்கைதி உறவினர்கள் ஊடாக முறையிட்டுள்ளார். இந்தத் தடவையும் சிறைத்துறை யினர் கண்துடைப்பு விசாரணை யொன்றை மேற்கொண்டு தம்மீது தவறில்லை என அறிக்கை சமர்ப்பித்துத் தப்பித்து கொள்வார்கள் என அரசியல் கைதிகள் கவலை தெரிவிக்கின்றனர். தமக்கு ஏற்படுகின்ற நோய்த்தாக்கங்கள் பற்றி சிங்கள மொழி வைத்தியர்களிடம் சரியாகத் தெளிவுபடுத்த முடியாமல் தடுமாறும் தமிழ் அரசியற் கைதிகள், சிகிச்சைகளைப்பெறாமலே இருந்துவிடுவதாகவும், வைத்திய சிகிச்சைபெற வேண்டி என்றாலும், தம்மைத் தமிழ் பிரதேச சிறைச்சாலைகளுக்கு அனுப்பி சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

நீண்ட கால சிறை வைப்பினாலும். பல சுற்று உணவுத்தவிர்ப்பு போராட்டங்களாலும், உடல் உள ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், தசாப்தங்கள் கடந்து விடுதலை என்ற பேச்சுக்கே தகுதியில்லாத சிறை அறைகளில் சுருண்டு கிடக்கும் அரசியல் கைதிகளுக்கு சுகாதார மருத்துவ வசதிகளையேனும் ஒழுங்கு முறையில் செய்து கொடுக்க வேண்டியது சம்மந்தப்பட்டவர்களின் கடமையல்லவா?





## ஆசிரியருக்கான கடிதம்

### எம் முன்னோர்களிடம் இருந்து நாம் கற்க வேண்டியவை ஏராளம் உள்ளன

வீதியொன்றால் போய்க்கொண்டிருந்தபோது ஒரு வீட்டின் முற்றத்தில், பல சேலைகளை (எட்டு முழச் சேலைகள்) சேர்த்துத் தைத்து, பந்தல் போலக் கட்டியிருந்ததைக் கண்டேன். சின்னப் பிள்ளைகள் விளையாட்டுக்கு அவ்வாறு கட்டியுள்ளனரோ என்று ஐயப்பட்ட வேளை, அந்த வீட்டின் கேற்றின் முன்னால் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. அந்த வீட்டிலுள்ள பெண்மணியொருவர் கடதாசிப் பை நிறைய ஏதோ பொருளைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார். அவதானித்தபோது அந்தப் பை நிறைய வேப்பம்பூ இருந்தது. மண் படாது வேப்பம் பூக்களைச் சேகரிக்கவே அந்தச் 'சேலைகளால் பூப்பந்தல்' எனப் புரிந்துகொண்டேன்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பட ஆலய வருடாந்தத் திருவிழாக்கள் இடம்பெறும் வேளைகளில் வேப்பம்பூ வடகத்துக்கு எம்மவர் மத்தியில் கடும் வேண்டுகை இருப்பது வழமை, எம்மில் பலர் அந்தவேளைகளில் விரதம் அனுஷ்டிப்பது வழமையே. அல்லாமலும் வெளிநாட்டிலுள்ள உறவுகளும் வேப்பம்பூ வடகம் போட்டு அனுப்புமாறு கோருவதும் அண்மைக்காலப் போக்கு.

வேப்பமரம் பூத்துப் பூச்சொரியும் கால கட்டத்தில் காற்றோடு காற்றாக வளவுகளில் நிறையும் இத்தகைய வேப்பம் பூக்களைச் சேகரித்து வடகம் தயாரித்து வெளிநாடுகளிலுள்ள எமது புலம் பெயர் உறவுகளுக்கு அனுப்பி உதவும் பழக்கம் இன்று அதிகரித்துள்ளது.

இதே போன்று அவர்களிடமிருந்து சும்மா சும்மா பொதுத்தேவைகளுக்கு நிதி கோரிக் கரைச்சல் கொடுக்காது, அவர்களுக்கு இத்தகைய எமது பாரம்பரிய உணவு வகைகளை வழங்கி அதன் மூலம் நிதி சேகரிக்கலாம். பனை வெல்லத்துக்கும் வெளிநாடுகளில் மிகுந்த வேண்டுகை உள்ளதாக அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு சொட்டுக் கருப்ப நீரையும் அவம் போக விடாது, முறையாகச் சேகரித்து பனை வெல்லம் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, எமது பாரம்பரிய குடிசைக் கைத்தொழில்களை ஊக்குவிக்க எமது சமூகத்துப் புத்திஜீவிகள் தரப்பு ஊக்கமளித்தல் அவசியம்.

பி.அருணாசலம்
கைதடி

# இலங்கை மற்றும் தஜிகிஸ்தான் இடையே உடன்படிக்கைகள் கைச்சாத்து

## சுற்றுலா, ஆடை உற்பத்தி தொடர்பிலும் இணக்கப்பாடு

இலங்கை மற்றும் தஜிகிஸ்தான் இடையேயான அரசியல், சுற்றுலா, விளையாட்டு மற்றும் ஆடை உற்பத்தி போன்ற துறை சார்ந்த உடன்படிக்கைகள் இணக்கப்பாட்டுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இரு நாடுகளுக்குமிடையே மேற்படி நான்கு துறை களுக்குமான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதுடன், சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி தொடர்பிலான தந்திரோபாயங்கள் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்பட்டது. அத்துடன் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை ஒன்றுக்கான சட்டமூலம் இரு நாட்டு தலைவர்களுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.




இதன்போது இலங்கையின் சுற்றுலா, மாணிக்கக்கல் அகழ்வு, ஆடை உற்பத்தி மற்றும் விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பில் கற்றுக்கொள்ள வேண்டிய பல விடயங்கள் காணப்படுவதான கருத்துக்கள் தஜிகிஸ்தான் அரச தலைவர் இமோ மாலி ரமோனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை வலயப் பாதுகாப்பு, போதைப்பொருள் கடத்தலை ஒழித்தல் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு தொடர்பான கருத்துக்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த தஜிகிஸ்தான் அரச தலைவர் இமோ மாலி ரமோன் உள்ளிட்ட பிரதிநிதி களுடனான சந்திப்பின் போதே இந்தவிடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டதான தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

“

சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி தொடர்பிலான தந்திரோபாயங்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. அத்துடன் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை ஒன்றுக்கான சட்டமூலம் இரு நாட்டு தலைவர்களுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.



# சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானம் கிடைக்கிறது

## ஒக்ரோபர் மாதத்தில் 250 மில்லியன் ரூபா இலாபமாகப் பதிவாகியுள்ளது

இலங்கை சுற்றுலாத்துறையானது கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 250 மில்லியன் அமெரிக்க டொலரினை இலாபமாக பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் 2016 ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான பத்து மாத காலப் பகுதியில் வெளிநாடுகளில் இருந்து 14.6 வீதமான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்தனர் எனத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2.75 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை சுற்றுலா சபை அறிவித்துள்ளது.

மேலும் இந்தத் தொகை மதிப்பீடுகளுக்கு மேலதிகமாக கடந்த ஒக்ரோபர் மாதத்தில் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களால் 607.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ளமை நோக்கத்தக்கது. தவிர, வெளிநாட்டு பணியாளர்களால் பத்து மாதத்திற்குள் 5.99 பில்லியன் அமெரிக்க் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்துக்கு தங்க விருது

## *பெருமளவிலான உற்பத்திப் பிரிவில் பெற்றுக்கொண்டது*

தொழிலாளர் திணைக்களத்தால் ஏற்பாடு செய்ப்பட்டிருந்த 2016 ஆம் ஆண்டுக்கான ‘சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புத் தொடர்பிலான நாடளாவிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் பாரியளவிலான உற்பத்திப் பிரிவிலே சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனம் தங்க விருதை பெற்றுக்கொண்டுள்ளது.

அந்தவகையிலே தொழிலாளர்திணைக்களத்தின் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புப் பிரிவின் வகிபாகம் என்பது தொழில்தருநர்கள், முகாமையா ளர்கள், ஊழியர் நிறுவனம், தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நிறுவன மற்றும் திணைக்கள மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. அதேபோன்று அரை அரச அல்லது தனியார் நிறுவனங்களில் எழுகின்ற தொழிற்றுறைப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் தொழிலாளர் சட்டங்கள் மூலமாகவும் இரு தரப்பினருக்கிடையேயான ஒத்துழைப்புச் செயற்பாட்டடனும் தொழிலாளரகளிடையே மனோபாவ ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஓர் சூழலை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தநிலையிலே மேற்குறிப்பிட்ட நோக்கத்தின் முன்னிலைப்படுத்தலாக சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புத் தொடர்பான செய்தியைப் பரப்பும்விதமான நாடளாவிய போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

உள்நாட்டு உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மத்தியில் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பை ஊக்குவித்து, சமூக உரையாடலின் மூலமாக சிறந்த தொழிற்றுறை உறவுமுறையொன்றைத் தோற்றுவிப்பது மேற்படி செயற்பாடுகளின் தூர நோக்காக காணப்படுகிறது.

இதன்படி தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பான தரத்திலான பணிச்சூழலைத் தோற்றுவிப்பதுடன், படைப்பாக்கத்திறன்களை மேம்படுத்துவதன் மூலமாக இவை முன்னெடுக்கப்படுகின்றமை நோக்கத்தக்கது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் குழும பொது முகாமையாளரான (மனித வளங்கள்) சஜித் விக்கிரமாராச்சி,

“நாம் கட்டியெழுப்பியுள்ள பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒற்றுமை தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகளுக்கு கிடைக்கப்பெற்ற மகத்தான ஓர் ஆசீர்வாதமாகவே இவ்விருது அமையப்பெற்றுள்ளது” என்றார்

# டீஸ்றப்ட் ஏசியா 2017 கண்காட்சி மற்றும் மாநாட்டு நிகழ்வுகள் கொழும்பில்

இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பின் ஏற்பாட்டில் டீஸ்றப்ட் ஏசியா 2017 கண்காட்சி மற்றும் மாநாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு சிறந்த முறையில் இடம்பெற்றிருந்ததான மேற்படி நிகழ்வைத் தொடர்ந்து இந்த ஆண்டின் நிகழ்ச்சியினூடாக தொழில்முயற்சியாண்மைக் கட்டமைப்பை வளர்ச்சியடையச் செய்வது, புதுப்பிப்பது மற்றும் மீளமைப்பது போன்ற விடயங்கள் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த மாநாட்டின் போது முன்னணிப் பேச்சாளர்கள், அறிவுரையாளர்கள்; மற்றும் முதலீட்டாளர்கள் போன்றோர் பங்கேற்று புத்தாக்கமான ஆரம்ப நிலை நிறுவனங்களை வெளிப்படுத்தவுள்ளனர்.

மேலும், பங்குபற்றுநர்களை உயர் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொழில்முயற்சியாளர்களுடனும், கட்டமைப்பு பங்காளர்களுடன் வலையமைப்புரீதியில் இணைத்துக்கொண்டு அறிவை பெற்றுத் துறை சார்ந்து நேர்த்தியான தாக்கத்தை உருவாக்கக் கூடியவர்களாக அவர்களை மாற்றியமைத்துக் கொள்ளும் திட்டமிடலாகவும் இந்த நிகழ்வுகள் அமையவுள்ளன.

இது குறித்து கருத்துரைத்துள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பின் தலைமை அதிகாரி சித்ராங்கனி முபாரக்,

“தொழில் முயற்சியாண்மை நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளன.


அவற்றினால் முன்வைக்கப்படும் புத்தாக்கங்கள் மட்டுமின்றி, அவற்றினால் உருவாக்கப்படும் புதிய தொழில் வாய்ப்புகளும் இதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. வியாபாரச் சூழலுக்கு அவை போட்டித் தன்மை வாய்ந்த கட்டமைப்புகளையும் வழங்கக்கூடியன.

இது நடந்தேறுவதற்கு எம்மத்தியில் அடக்கமான, துரித கதியில் இயங்கக்கூடிய ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கக்கூடிய கட்டமைப்பு ஒன்று காணப்பட வேண்டும்.

டீஸ்றப்ட் ஏசியா 2017 நிகழ்வுகள் மூலமாக இதற்கான சிறந்த அடித்தளம் வழங்கப்படுவதுடன் தொழில்நுட்பம்சார் தொழில்முயற்சியாளர்கள், முதலீட்டாளர்கள், அறிவுரையாளர்கள், கொள்கை திட்டமிடலாளர்கள் மற்றும் ஊடகங்கள் என வெவ்வேறு தரப்பினரை ஒன்றிணைக்கும் ஒரே களமாகவும் இது அமைந்துள்ளது. இந்த மாநாட்டை நடத்துவது குறித்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பு மகிழ்ச்சியடைகிறது” என்றார்.



# அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் மீளாய்வு



அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை யைக் குறிப்பது தொடர்பில் மீளாய்வு களை மீண்டும் செய்யவுள்ளதான தகவல் தரலை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி அரிசி தொடர்பிலான பன்னாட்டு மற்றும் தேசிய மட்டத்திலான விசேட மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தவிர, மேற்படி மீளாய்வுச் செயன்முறைகளின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அரிசிக்காக வழங்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் சிந்தக லொகுஹெட்டி சுட்டிக்காட்டியுள்ளார்.


CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

23/5/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -36.94 | 6,689.96 | 6,726.90 |
| S&P SL20 | -7.23 | 3,821.66 | 3,828.89 |
| வியாபாரப்புரள்வு | | 807,743,620 | 335,620,301 |
| உள்நாடு- கொள்வனவு | | 237,675,648 | 225,618,864 |
| விற்பனை | | 765,277,060 | 195,026,192 |
| வெளிநாடு- கொள்வனவு | | 570,067,970 | 109,944,992 |
| விற்பனை | | 42,466,520 | 140,537,664 |





| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 290.00 | 1,604,318 | 44,190,761 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 40.90 | 1,021,380 | 42,077,767 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 168.00 | 239,391 | 40,221,715 |
| சிலோன் டொபாப்கோ | CTC.N | 999.00 | 15,289 | 15,287,296 |
| சுவிஸ் டெக் | PARQ.N | 73.50 | 202,820 | 14,808,565 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 194.10 | 62,332 | 12,120,056 |
| லங்கா வோல் டையில் | LWL.N | 105.00 | 99,106 | 10,406,120 |
| அற்கேன் ஸ்பென்ஸ் | SPEN.N | 69.00 | 122,764 | 8,540,071 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 235.00 | 31,577 | 7,303,139 |
| டேக்கியோ சிமேன் | TKYO.N | 76.00 | 84,775 | 6,439,479 |

அறிவித்தல்கள்
முதலீட்டு உத்திகள் பயிற்சிப்பட்டறை
**June 17 & 18**

பங்குலாபம்
சிலோன ஹோட்டல் - முலதனமாக்கல் ரூபா 1.00
சிலோன் கொஸ்பிற்ரல் ரூபா. 3.60 இறுதி

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 233 |
| விலை உழைப்பு | 11.9 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.5 |



அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இஸ்ரேலுக்குச் சென்றுள்ளதை அடுத்து அவருக்கு எதிராக இஸ்ரேலின் பரம எதிரி நாடான பலஸ்தீனத்தில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ட்ரம்பின் உருவப்படங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்பட்டன. (ம)

# இஸ்ரேலில் டொனால்ட் ட்ரம்ப்; பலஸ்தீனம் பெரும் எதிர்பார்ப்பு

டெல் அவிவ், மே 24

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தனது சுற்றுப் பயணத்தின் முக்கிய பகுதியாக இஸ்ரேலுக்கு நேற்று முன்தினம் சென்றடைந்தார். அங்கு அவரின் வெளிப்படுத்தல்கள் மற்றும் நகர்வுகளில் உலக நாடுகளும் இஸ்ரேலின் பரம வைரி நாடான பலஸ்தீனமும் பெரும் எதிர்பார்ப்பில் உள்ளன.

இஸ்ரேலுக்கும் அதனுடன் எல்லையைப் பகிரும் நாடான பலஸ்தீனத்துக்கும் இடையில் காலாகாலமாகத் தீராப் பகை நிலவி வருகிறது. பலஸ்தீனத்தின் பெரும் பகுதிகள் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனியர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதும் அவை ஆயுதமுனைகளால் நசுக்கப்படுவதும் சர்வசாதாரணமாக நடைபெறும் ஒன்றாகிவிட்டது. இஸ்ரேலுக்கு எதிராக உலக நாடுகள் குரல்கொடுக்கின்ற போதிலும் அமெரிக்காவின் அரவணைப்பு இஸ்ரேலுக்கு மிகையாக உள்ளதால் அந்த நாடு ஐ.நாவின் பிடியில் இருந்து பல முறை தப்பித்துக் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலுக்கு எதிராக கொண்டுவரப்படும் தீர்மானங்களை எல்லாம் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தால் இல்லாமல் செய்துள்ளது. இந்தப் பின்னணி காரணமாக ட்ரம்ப்பின் பயணம் இஸ்ரேலுக்கு மட்டுமே சாதகமானதாக இருக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

எனினும், இரு நாடுகளுக்கும் இடையிலான விடயத்தில் நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். அவர் இஸ்ரேல், பலஸ்தீனம் என இருநாட்டுப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். பல நூற்றாண்டுகளாகநிலவிவரும்பகை ட்ரம்பின் இருநாள் பயணத்தில் முடிவுக்கு வந்துவிடாது. எனினும் ட்ரம்பின் பயணத்திலும் அவரின் நகர்விலும் அதிக எதிர்பார்ப்பு உள்ளது என்பது மட்டும் வெளிப்படை. (ம)



# கட்டப்பாவுக்குப் பிடியாணை!



சென்னை, மே 24

நடிகர் சூர்யா, சத்தியராஜ் உட்பட 8 நடிகர்களுக்கு நீலகிரி குற்றவியல் நீதிமன்றம் பிணையில் வெளிவரமுடியாதபிடியாணையை நேற்றுப் பிறப்பித்தது.

2009ஆம் ஆண்டு செய்தியாளர்களை அவதூறாகப் பேசியதாக நடிகர்கள் சூர்யா, சத்யராஜ், சேரன், சரத்குமார், விவேக், விஜயகுமார், அருண் விஜய், நடிகை சிறிபிரியா ஆகிய 8 பேர் மீது நீலகிரி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் நடிகர்கள் விசாரணைக்கு முன்னிலையாகாததால் அத்தனை பேருக்கும் பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பித்து நீலகிரி மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம)



# ஒரு வருட ஆட்சியில் அ.தி.மு.க. செய்ததென்ன?

## ஸ்டாலின் கேள்வி

சென்னை, மே 24

'கடந்த வருடம் நடைபெற்ற தமிழக சட்மன்றத் தேர்தலில் அ.தி.மு. கழகம் வெற்றிபெற்றது. கடந்த மே மாதம் 22ஆம் திகதியுடன் ஜெயலலிதா தலைமையில் அந்தக் கட்சி ஆட்சிப்பீடம் ஏறி ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது. இந்த ஒரு வருடத்தில் தமிழக மக்களுக்காக அந்தக் கட்சி ஆளுங்கட்சி என்ற வகையில் என்ன செய்துள்ளது' இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவரும் தி.மு. கழகத்தின் செயல்தலைவருமான ஸ்டாலின். தி.மு. கழகத்தின் தொண்டர்களுக்காக எழுதியுள்ள திறந்த மடலிலேயே இந்தக் கேள்வியை அவர் எழுப்பியுள்ளார்.

'லொறிகளில் கடத்தப்பட்ட கறுப்புப் பணத்தின் மூலம் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் அ.தி.மு. கழகம் ஆட்சியைத் தக்கவைத்தது. இந்த ஒருவருட காலத்தில் ஆளும் கட்சி என்ற வகையில் அது என்னென்ன சாதித்தது. மூன்று முதலமைச்சர்கள் மாறியுள்ளனர். ஓர் மாற்றம் இயற்கையாக ஏற்பட்டது என்றாலும் ஏனைய இரு மாற்றங்கள் அதிகார வெறியால் ஏற்பட்டவையே. ஆளும்கட்சி செய்ய மறந்த ஆக்கபூர்வ விடயங்களை தி.மு. கழகம் செய்துவருகிறது. வேதனைகள் மிகுந்த இந்த ஆட்சி ஜனநாயக முறைப்படி வெகு விரைவில் மாறும். ஆறு ஆண்டுகளாக இருள் சூழ்ந்த தமிழகத்தில் சூரியக் கதிர்கள் வெளிச்சத்தை நிச்சயம் பரப்பும்' என அந்த மடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# அந்தாட்டிக்காவில் குடிதண்ணீர் பெறவுள்ளன அரபு நாடுகள்

அபுதாபி, மே 24


அந்தாட்டிக்காவில் இருந்து குடிதண்ணீர்பெறும் திட்டத்தை எதிர்வரும் 2019ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ள அரபு நாடுகள் திட்டமிட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எண்ணெய் வளத்தில் இந்த நாடுகள் செழிப்பு நிறைந்தவையாகக் காணப்படுகின்ற போதிலும் குடிதண்ணீரைப் பொறுத்தவரை பெரும் தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றன. கடல்நீரை குடிதண்ணீராக்கிப் பயன்படுத்தும் திட்டத்தை அரபு நாடுகள் பெரிய அளவில் வேகமாக முன்னெடுத்து வருகின்றன. தற்போது அந்தாட்டிக்காவில் இருந்து குடிதண்ணீரைப் பெற அந்த நாடுகள் திட்டமிட்டுள்ளன.

அந்தாட்டிக்காவில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட மிகப்பெரிய பனிப்பாறைகளைக் கிட்டத்தட்ட 9 ஆயிரத்து 200 கிலோமீற்றர் கடல்மார்க்கப் பயணத்தின் மூலம் கொண்டு சென்று பின்னர் அதைக் குடிதண்ணீராக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகச் சிறப்பு ஆலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. (ம)

# ஏவுகணைச் சோதனைகள் எமது தனிப்பட்ட விடயம்

## ஈரான் அரச தலைவர் ரவுஹானி அமெரிக்காவுக்குக் கடும் காட்டம்





தெஹ்ரான், மே 24

ஈரான் ஏவுகணை சோதனைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில், தமது சோதனைகளுக்கு அமெரிக்காவின் அனுமதி தேவையில்லை என்றும் அது தமது தனிப்பட்ட விடயமென்றும் தெரிவித்தார் ஈரான் அதிபர் ரவுஹானி.

ட்ரம்ப் தனது முதலாவது சுற்றுப்பயணத்தைச் சவூதி அரேபியாவுக்கு மேற்கொண்டார். அங்கு உரையாற்றுகையில் ஈரானுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்தார்.

"ஈரானின் ஏவுகணைச் சோதனைகள் ஏற்றுக்கொள்ளப்படாது. அந்த நாடு தனது சோதனைகளைக் கைவிட வேண்டும். இதற்கு அமெரிக்கா அனுமதிக்காது" என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் ஒருபடி மேலே சென்று "ஈரான், தீவிரவாதத்தை வளர்க்கிறது என்று குற்றஞ்சாட்டினார்" இவர்கள் இருவரின் கருத்துக்கு ஈரான் அதிபர் ரவுஹானி நேற்றுப் பதிலடி கொடுத்தார்.

ஈரானின் சோதனைகளுக்கு அமெரிக்கா அனுமதி வழங்கவேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. "எமது சோதனைகள் எமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே. இது எமது தனிப்பட்ட விடயம்" என்று தெரிவித்தார்.

முன்னதாக முடிவடைந்த ஈரான் அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற தனது ஆட்சியைத் தக்கவைத்தார் ரவுஹானி. ரவுஹானியின் வெற்றி, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் பொருளாதாரத்துக்கும் கிடைத்த வெற்றி என்று ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வடகொரியாவுக்கு ஐ.நா. சபை மற்றுமொரு கண்டனம்

வொஷிங்டன், மே 24
வடகொரியா மற்றுமொரு ஏவுகணைச் சோதனையை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட நிலையில், இந்த சோதனை முயற்சி உலக அமைதிக்கு ஆபத்தானது என்று மற்றுமொரு கண்டனத்தை விடுத்தது ஐக்கிய நாடுகள் சபை. பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது.
தென்கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் எதிராகவே தனது சோதனைகள் நடைபெறுகின்றன என்று அந்த நாடு பகிரங்கமாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து கொரியத் தீபகற்பத்தில் தனது போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது அமெரிக்கா.
எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்துகொண்டேதான் உள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமையும் வடகொரியா ஓர் ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டது. இந்த ஏவுகணை 500 கிலோமீற்றர் தூரம் பாய்ந்தது என்று வடகொரியா தெரிவித்திருந்த நிலையில் இதற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றுமொரு கண்டனம் தெரிவித்தது. (ம)



## மன்செஸ்டர் தாக்குதல் எதிரொலி; அமெரிக்காவில் பாதுகாப்பு அதிகரிப்பு

வொஷிங்டன், மே 24
பிரிட்டனின் மன்செஸ்டர் நகரில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவின் முக்கிய நகர்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தாக்குதல் நடத்தப்பட்ட சில மணிநேரங்களில் நியூயோர்க் நகரில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்ததாக வொஷிங்டன், பென்சில்வேனியா, லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட முக்கிய நகர்களில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
மன்செஸ்டர் நகரிலும் தற்போது கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மட்டுமல்லாது லண்டன் உள்ளிட்ட நகர்களிலும் தனது பாதுகாப்பை அதிகரித்தது பிரிட்டன். ஐரோப்பிய நாடுகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்தத் தாக்கதலுக்கு எதிராக இன்று அல்லது நாளை ஆர்ப்பாட்டங்கள் பெரியளவில் இடம்பெறலாம். அது அகதிகளுக்கு எதிராகத் திருப்பப்படவும் சந்தர்ப்பங்கள் உள்ளன. (ம)





## பிரிட்டனின் மன்செஸ்டரில் குண்டு வெடிப்பு
# 22 பேர் சாவு 50 பேர் காயம்
### உலகத் தலைவர்கள் கொதிப்பு

லண்டன், மே 24
பிரிட்டனின் புகழ்பெற்ற நகரமான மன்செஸ்டர் நகரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 22 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
அமெரிக்காவின் பிரபல பாடகி ஏரியனா கிராண்ட்டின் இசை நிகழ்ச்சி மன்செஸ்டர் நகரில் பெரும் எடுப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிகழ்ச்சி நடைபெற்ற அரங்குக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. 19 பேர் சம்பவ இடத்தில் உயிரிழுந்தனர். 53 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 22 ஆனது.
இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இதை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.
"இசை நிகழ்ச்சியில் நடத்தப்பட்ட தாக்குதலை பொலிஸார் தீவிரவாத தாக்குதலாகவே கருதுகின்றனர். இந்தத் தாக்குதல் குறித்து திவிர விசாரணைகள் நடத்தப்பட்டு வருகிறது" என்று திரேசா மே தெரிவித்தார்.
"மன்செஸ்டர் நகர தாக்குதல் வருத்தமளிக்கிறது. இத்தாக்குதலை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது. தாக்குதலில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்கிறேன்" என இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டார்.
''மன்செஸ்டர் நகரில் நடந்த கொடூரத் தாக்குதலால் கனடா நாட்டு மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு இரங்கல்" என்று கனேடிய தலைமை அமைச்சர் ஜஸ்டின் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டார். (ம)

## நெடுவாசலில் தொடர்கிறது போராட்டம்

சென்னை, மே 24
இயற்கை எரிவாயு பெறும் டெல்லி அரசின் திட்டத்தைக் கண்டித்து தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் 42 ஆவது நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்தது.
புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் உள்ளிட்ட 31 இடங்களில் இயற்கை எரிவாயு பெறுவதற்கு டெல்லி அரசு அனுமதி வழங்கியுள்ளது.
நெடுவாசலில் இயற்கை எரிவாயு பெறும் திட்டம். கொண்டுவரப்பட திட்டமிட்டபோதே மக்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தினர். எனினும் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்படாது என்று தமிழக முதல்வர் எடப்பாடி வழங்கிய வாக்குறுதியை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. டெல்லி அரசு அனுமதி வழங்கியதை அடுத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 42ஆவது நாளாகத் தொடர்ந்தது. (ம)



## தவறுகள் செய்யவில்லை; நீதிமன்றில் கூறினார் பார்க்

சியோல், மே 24
தென்கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை. மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த நாட்டு உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல்கட்ட விசாரணையில், தான் தவறு ஏதும் செய்யவில்லை என்று பார்க் தெரிவித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தென்கொரிய அதிபர் என்ற அந்தஸ்தைப் பயன்படுத்தி அரச நிதியை தவறாகக் கையாண்டார், ஊழல் மோசடியில் ஈடுபட்டார், தனது தோழியான சோய் சூன் சில் என்பவரை அரச விவகாரங்களில் தலையிட அனுமதித்தார் போன்ற குற்றச்சாட்டுக்கள் பார்க் மீது உள்ளன. இதையடுத்து தென்கொரிய நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு பார்க் பதவிநீக்கம் செய்யப்பட்டார். புதிய அதிபராக மூன் ஜெ இன் பொறுப்பேற்றுள்ளார்.
பார்க் மீதான விசாரணைகள் அந்த நாட்டின் உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. அவர் தன் மீது சுமத்தப்பட்ட அத்தனை குற்றச்சாட்டுக்களையும் மறுத்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# தி.வினோதினியின் ‘இராப்பாடிகளின் நாட்குறிப்பு’

## குறிப்பிடத்தக்கதொரு கவிதை நூல்

யோ.புரட்சி

மாறாத காயமான
ஆறாத வடுக்களை
மன்னித்துக் கொள்ளுங்கள்
உங்களால் முடிந்தால்
மறக்கச் சொல்லித்தாருங்கள்

‘மறக்கச் சொல்லித் தாருங்கள்’ எனும் கவிதையில் தன் வேண்டுகையை விடுக்கிறார் கவிதாயினி தி.வினோதினி. காலம் கொடுத்த கொடூரங்கள் பலவற்றை மறக்கவே முடியாத மனமொன்றின் மன்றாட்டம் அது.

**நூல்களின் வருகை தரும் அதீதம்**

ஈழப்பரப்பில் நூல்களின் வருகைகள் தாராளமயமாகி விட்டன. முன்பெல்லாம் மழைக்காலத்தில் அரிதாக காணக்கிடைக்கும். நடசத்திரங்களைப் போல இருந்த நூல் வெளியீடுகள் எல்லாம், இப்போது வெயிற்கால விண்மீன்கள் போல விரிந்துலவுகின்றன. இம்முயற்சி மொழியின் மலர்ச்சி.

அண்மையில் தி.வினோதினி என அறியப்பட்ட சர்மிலா திருநாவுக்கரசு ‘இராப்பாடிகளின் நாட்குறிப்பு’ எனும் கவிநூலை தமிழ் உலகிற்குத் தந்துள்ளார். 105 பக்கங்களின் அமைவினுள் 45 கவிதைகள் கருத்துரைக்கின்றன. பொதுவாக கவிதையின் தலைப்பொன்றை நூற் தலைப்பாய் பலரிடுவர். இங்கே நூற் தலைப்பில் கவித்தலைப்பு ஏதுமில்லை.

புதிய சந்ததிகள்
நாளை
புகலிடம் தந்த நாடுகளே
தாய் நாடென்று
தலை நிமிர்த்திக் கூறுகையில்
கண் கலங்கி என்ன பயன்?
பயனின்றிப் பறி போகும்
பல்வேறு பக்கங்களை
பாதுகாக்க முன்விளைவோம்
வழியறிந்து வகை செய்வோம்.

‘கோடியில் தேடி என்ன பலன்?’ கவிதையின் சில வரிகள் அவை. இப்படி யதார்த்த சிந்தனைகளை, சொல்ல வேண்டிய பக்கங்களை தனக்குரிய மொழியில்தவழவிடுகின்றார்வினோதினி.

‘வினோதினியின் கவிதைகள் போரில் அழிந்த ஈழம் பற்றியும், போரைக் கடந்த பெண் பற்றியதுமாகவே பயணப்படுகின்றன என்கிறார் நூல் பற்றியதான கருத்துரைகளை வரைந்திருக்கும்கவிஞர்தீபச்செல்வன். வினோதினியின் கவிதைகளில் காதல் இல்லாமல் இல்லை. ஆனால் காதல் அதிகமாக இல்லை. இஞ்சித் தேநீரில் இடையிடையே தெரியும் இஞ்சித் துண்டுகளாக காதல் கவிதைகள் சில. மிகுதி எல்லாமே காதலுக்கு அப்பாலான சமூகப் பொறுப்புடைமைக் கவிதைகளாகக் கதை பேசுகின்றன.

‘இலக்கியங்களையும்நூல்களையும் பற்றி அறிந்திராத சிறு வயதில் எனது வீட்டின் நடு அறையில் எப்பொழுதும் பாதுகாப்பாகப் பூட்டப்பட்டிருக்கும் ஒரு அலுமாரியின் மேற்தட்டில் எனது பாட்டனாரின் பழமை நிறைந்த ஓலைச்சுவடிகளும் எழுத்தாணியும் கனமான ஒரு இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கும்’ எனும் விடயத்தினை பதிவு செய்திருக்கும் வினோதினி, தனது மூதாதையர்கள் நூல்கள்மீது கொண்ட பற்றினை வெளிப்படுத்துகின்றார். அப்படியான நூலார்வம் கொண்டோர் வழிவந்த வினோதினியும் பல்பக்க வாசிப்பனுபவம் உள்ளவர் என்பது அவரது பல்பரிமாணக் கருப்பொருளில் அமைந்த கவிதைகளினால் புலனாகிறது.

பருந்துகள் ஒருபோதும்
பிரசங்கம் செய்வதில்லை
பாவச் செயல்களைப் பற்றி

இப்படி முடிகிறது 77ஆம் பக்கத்திலமைந்த ‘பருந்துகள் பிரசங்கம் செய்வதில்லை’எனும்கவிதை. நீதிவழங்கா நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடாக இக்கவிதை உள்ளார்ந்த விதமாக ஈழத்தவர் நிலையினை காட்டியிருக்கிறது.

இந்த நூலின் பின் அட்டைக்குறிப்பினை மன்னார் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் கவிஞர் மன்னார் அமுதன் வரைந்துள்ளார். இக்குறிப்பு நூலாசிரியர் பற்றி அறிந்திட போதுமானதாக உள்ளது. வெளியீட்டுரையினை மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் சிவஸ்ரீ மஹாதர்மகுமாரக் குருக்கள் வரைந்துள்ளார்.

காதல் பற்றி இரண்டு கவிதைகள் கண்சிமிட்டுகின்றன. 46ஆம் பக்கத்திலமைந்த ‘கடைசிக் காதலும் கரையும் நேரம்’ கவிதையில் இப்படி அமைகின்றன வரிகள்.

அங்கங்கள் அத்தனையும்
அடங்கிப்போய் உறங்கிப்போய்
காலாவதியாகிப்போன காயத்தில்
காய்ந்துபோன கண்ணீரோடு
கரைந்து போயிருக்கும்
உன் மீதான என்
கடைசிக்காதலும்

இது வெறுமனே ஒரு காதற்கவி என்பதற்கு அப்பால் இன்னுமொரு பார்வையை விதைக்கும் மொழியர்த்தமாகவே இருக்கின்றது. முற்றுமாய் படிக்கையில் ஒரு அவலமொன்றின் அத்தாட்சியாக அகமிறங்குகின்றது வார்த்தைகளின் அர்த்தக் கூர்மையுடைய ஆணிகள்.

**புவியியலில் சிறப்புப்பட்டம்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட வினோதினி, கிளிநொச்சி மாவட்டம், பூநகரி, வேரவில் பகுதியை பிறப்பிடமாகவும், மன்னார் மாவட்டத்தினை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

கவிதை தவிரவும் கட்டுரையாக்கம், அறிவிப்பு, மேடைப்பேச்சு, சிறுகதை எழுதுதல் எனப் பல்துறை சார்ந்து தன்னை ஈடுபடுத்தி வருபவர். மன்னார் பிரதேச செயலகத்தில் பணியைப் புரிந்து வருமிவர், கிளி.வேரவில் இந்து மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மன். சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கற்றவர்.

‘இராப்பாடிகளின் நாட்குறிப்பு’ கவிநூலில் மொழிசார் விழிப்பு, தத்துவார்த்த சிந்தனைகள், போர் அவலங்கள், இயற்கை, சமூகப்பொறுப்புடைமை, காதல் என பல்வேறு கருப்பொருள்களில் அர்த்தம் கொள்ளும் கவிதைகள் தவழ்கின்றன. ‘மன்னார் தமிழ்ச் சங்கம்’ இந்நூலினை வெளியீடு செய்துள்ளது.

பக்கம் 59இல் அமைந்துள்ள ‘உங்கள் வசைகள் அவள் காதுகளை எட்டப் போவதில்லை’ எனும் கவிதை இக்காலப் பெண்கள் அநேகர் படிக்க வேண்டியது. வசை மொழிகளால் வாடிப் போகும் பெண் மலர்கள் எத்தனை? இப்படி முடிக்கிறார் வினோதினி.

இப்போது விட்டுவிடுங்கள்
இருள் வண்டுகளின்
ரீங்காரத்தை மீறி
உங்கள் வசைகள் அவள்
காதுகளை
எட்டப் போவதில்லை

**தரமான தாளில் அச்சுப்பதிவு**

தரமான தாள்களில் அச்சேறியுள்ள இந்நூலின் அட்டைப்படம் இலையற்ற மரத்தினை குறியீடாக்கிச் செய்தி உரைக்கின்றது. சின்னதான எழுத்துப் பிழைகள் இருப்பினும் பொருளின் சிதைவை அவை பெரிதாக காட்டவில்லை.

புரிதலுக்குரியனவாக தென்படுகின்றன. கவித்தலைப்பும், கவிதையும் செறிவான எழுத்துருவினால் வடிவாக்கம் பெற்றிருக்கின்றன. ஈழத்துப் பெண் படைப்பாளர்கள் பட்டியலில் பெயரிடத்தக்கதான தகுதி தி.வினோதினி அவர்களுக்கு உண்டென்பதற்கு ‘இராப்பாடிகளின் நாட்குறிப்பு’ சாட்சியல்லாமல் வேறேது? இந்த வரிகள் வினோதினியின் ‘புதைந்த கவிதை மடிவதில்லை’ எனும் கவிதையில் இருந்து...

வினோதினியின் கவிதைகளில் காதல் இல்லாமல் இல்லை. ஆனால் காதல் அதிகமாக இல்லை. இஞ்சித் தேநீரில் இடையிடையே தெரியும் இஞ்சித் துண்டுகளாக காதல் கவிதைகள் சில. மீதி எல்லாமே காதலுக்கு அப்பாலான சமூகப் பொறுப்புடைமைக் கவிதைகள்.




காற்று மூங்கிலிடம் புரிவதில்லை
இசைக்கான எந்த
ஒப்பந்தத்தையும்
தறிக்கப்படும் மூங்கில்கள்
அழுவதில்லை
தண்டுகள் பிரிந்த
சோகத்தில்..





# இலங்கைவேந்தனின் முத்தமிழ்த் தித்திப்பு

குணசேகரன் சக்தீனா

கலைகளினூடு பலவற்றை வளர்க்கலாம் என்ற எண்ணம் ஈடேற வழிசமைத்த பயணம் தான் இலங்கை வேந்தன் முன்னெடுத்த இயல் இசை நாடகவிழா. அனைவரையும் பார்க்க வேண்டும் என்று தூண்டிய இந்த அரங்கம் வருடந்தோறும் இலங்கை வேந்தனால் அலங்கரிக்கப்படுவது வழமையாகும். முத்தமிழும் இங்கு ஒன்று சேர்ந்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது என்றால் அது மிகையல்ல. வடக்குக் கிழக்கின் முத்தமிழ் இணைந்திருந்தமை தான் இந்த நிகழ்வுக்குப் பெரும் ஆதரவைக் கொடுத்ததோ நான் அறியேன்.

கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் வரை பலரை மகிழ்வித்தது இலங்கை வேந்தனின் இவ் இயல் இசை நாடக அரங்கு. பல கலைஞர்களின் ஒன்றுகூடலாகவும் இது அமைந்திருந்தது.

முதல் நிகழ்வுகளே பலரையும் ஏனைய நாள்களின் வரவைப் பதிவு செய்ததை அவதானிக்க முடிந்ததும், முதல் நாளிலே எதிர்பார்ப்பு மிகுதியாகியதும் இலங்கை வேந்தனுக்கு கிடைத்த வெற்றி தான். இன்னொன்றும் சிறப்புப் பெற்றிருந்தது அனைவருக்கும் இலகுவான நேரமான மாலைப்பொழுதைத் தெரிவு செய்து இந்த நிகழ்வுகளை நடத்தியதும் அதிகமானவர்களை கண்டு கழிக்க வைத்தது என்றும் கூறலாம்.

கிழக்கில் இருந்து வருகை தந்து இந்த நிகழ்வுக்கு வலுச்சேர்த்தவர்கள் இப்பொழுதும் கலைகளினூடாகப் பிரகாசிக்கின்றார்கள்.

பட்டி மன்றம் வழக்காடு மன்றம் என்று கூறுவார்கள். குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள் என்ற கருப்பொருளில் ஆனது அது. வழக்குத்தொடுப்போர், மறுப்போர், நீதிபதி இவ்வாறு அமைந்திருந்தது அந்த வழக்காடு மன்று. மிகவும் அருமையாக இருந்தது. உண்மைகள் பலவற்றை உரத்துச் சொன்னார்கள் கண்டிப்பாக இன்றைய இளைஞர்களின் பாதுகாவலர்கள் மனதில் பதிந்திருக்கும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக இருந்தன. இலங்கை வேந்தன் இசைக் கல்லூரியினரின் மாமிக்கு வாய்ச்ச மருமகள் நகைச்சுவை நாடகம் மிகச் சிறப்பான மகிழ்வின் உணர்திறனோடு அமைந்திருந்தது.

நாவலர் இன்று இருந்திருந்தால் என்ற வில்லுப்பாட்டு நிகழ்வு நாவலரின் செயற்பாடுகள் பலவற்றைக்கூறிச் சென்றது.

மூன்றாம் நாள் நிகழ்வுகளில் இடம்பெற்ற கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கனின் நெறியாழ்கையில் உருவான `யாரோடு நோகேன்' என்ற நாடக ஆற்றுகையும் நிச்சயமாகப் பார்வையாளர்களை பரவசப்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நான்காவது நாள் நிகழ்வுகள் சவால் என்ற நாடகம் விரிவுரையாளர்கள் ஒன்று சேர்ந்து அரங்கேற்றிய படைப்பாக அமைந்திருந்தது. அனைவரையும் பரவசப்படுத்திய போதும் நாடகம் கூறிய கருத்துக்கள் ஏராளம்.

ஐந்தாவது நாள் நிகழ்வுகளில் இறுதியில் நடைபெற்ற செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் எண்ணித்துணி சிந்து நடைக்கூத்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது என்று தான் கூறலாம். இவ்வாறு நடைபெற்று முடிந்த இலங்கை வேந்தனின் ஆற்றுகைகள் இலங்கை வேந்தனின் உயரிய செயற்பாட்டை எப்பொழுதும் கூறியே நிற்கின்றது.





# அமுத விழாவும் நூல் வெளியீடும்

பேராசிரியர் சி.தில்லைநாதனின் அமுதவிழாவும், பேராசிரியர் பொ. பூலோகசிங்கத்தின் தமிழ் ஆய்வுச் சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 15 ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதி கு. சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வின் போது பீடாதிபதி பேராசிரியர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். நூலின் பதிப்பாசிரியரும் விரிவுரையாளருமான முருகேசு கௌரிகாந்தன் பேராசிரியர் தம்பதிகளிடம் நினைவுச் சின்னத்தை வாங்கினார். நூலின் முதற்பிரதியை பேராசிரியர் பூலோகசிங்கத்தின் உறவினர் பேராசிரியர் தில்லைநாதனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கலாநிதி பா.தனபாலன் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் வ.மகேஸ்வரன் நூல் நயப்புரை வழங்கினார்.



3

# இலக்கியத்தில் விருந்தோம்பல்

எஸ்.மல்லிகா

“பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்” என்கிறார் ஔவையார். இத்தகைய பசிப்பிணியைப் போக்குவது கோடிபுண்ணியம் தரும் என்றும், தானத்தில் சிறந்தது அன்னதானம் என்றும் விருந்தோம்பலின் சிறப்பினை இலக்கியங்கள் அழகுறக் கூறுகின்றன. இதிலிருந்து விருந்தோம்பலின் மகத்துவம் புரிகின்றது.

**இரட்டைக்காப்பியத்தில் விருந்தோம்பல்**

சங்ககாலக் கடைக்கூற்றில் எழுச்சி பெற்ற காப்பியங்களாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன காணப்படுகின்றன. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டிருப்பதால், இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றிலும் தமிழரின் தலையாய பண்பாகிய விருந்தோம்பல் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பலின் சிறப்பை அழகாகக் கூறியிருப்பார் இளங்கோவடிகள். கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் வாழும் போது, தனது தலையாய கடமையான விருந்தோம்பலைக் கண்ணகி மறந்திருந்தாள் என்று அவர் குறிப்பிடுகிறார். இருவரும் அடைக்கலமாகச் சென்ற போதும் விருந்தோம்பலின் சிறப்பை அவர் பாடியுள்ளார். இதனை,

“அறவோர்க் களித்தலும்
அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை
(சிலம்பு,கொலை.காதை:7173)

எனும் பாடல் வரிகளில் காணலாம். இளங்கோவடிகள் விருந்தோம்பலை இல்லற வாழ்வில் இணைத்துள்ளார். வள்ளுவர் பயன்படுத்திய மனையறம் என்ற பதத்தையே அவரும் பயன்படுத்துகிறார்.

“மறட்பருங் கேண்மையோ
டயப்பரி சாரமும்
விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்
கையும்” (சிலம்பு,மனை.காதை:8586)

இவ்வாறு விருந்தோம்பல் பண்பினை இளங்கோவடிகள் பல இடங்களில் சிறப்பித்துக் கூறியிருப்பதைக் காணமுடிகின்றது.

சிலப்பதிகாரத்தைப் போன்றே மணிமேகலையும் விருந்தோம்பலைச் சிறப்பித்துக் கூறுகின்றது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்று கூறுகிறது. இதனை,

“அறம் எனப்படுவது யாது எனக்கேட்பின்
மறவாது இதுகேள் மண் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்”
(மணிமேகலை.25.288291)

என்று மணிமேகலை அழகுறக் கூறுகின்றது.

தர்மங்களுள் உயர்ந்தது தானதர்மம் என்ற கருத்தின் அடிப்படையிலும் தானத்தில் உயர்ந்தது அன்னதானம் பசிப்பிணி தீர்த்தல் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் அமுதசுரபி கொண்டு உயிர்களின் பசிப்பிணி தீர்த்த ஆபுத்திரனின் அருஞ்செயலால் இந்திரனின் பாண்டு கம்பளம் நடுங்கிற்று என்றும், தனது பதவிக்குப் போட்டி உருவாகிவிட்டதை உணர்ந்த இந்திரன் பெரும் மழை பெய்வித்து உலகைச் செழிப்பாக்கிப் பசிப்பிணி என்பதே இல்லாமற் செய்தானென்றும் பௌத்த சமயக் காப்பியமான மணிமேகலை (14:2157) குறிப்பிடுகிறது.

பௌத்தம் விருந்தோம்பல் என்ற வேள்வியை இல்லற தர்மமாக மட்டும் கொள்ளாமல், மடைப்பள்ளியுடன் கூடிய மடாலயங்களின் மூலம் உலகத்தவரின் பசிப்பிணியைத் தீர்க்கும் துறவற தர்மமாகவும் மாற்றியிருப்பதனைக் காணமுடிகிறது.

இத்தர்மத்தை நிறைவேற்றுவதற்கு ஓர் உயர் வர்ணத்து ஆணினைத் தேர்வு செய்யாமல், துறவு மேற்கொள்வதற்குத் தகுதிபடைத்த சுதந்திர வர்ணத்தவரான முதல் மூன்று வர்ணத்தவர் போலன்றி, பொருள் கொடுத்து விலைக்கு வாங்கப்படத்தக்கவள் அதாவது, அடிமைப்பெண் என்று அரசவர்ணத்தவரால் ஏளனம் செய்யப்படும் ஓர் அரங்கக் கூத்தியைத் தேர்வு செய்தது.

அவள், புகார் நகரின் சுடுகாட்டையடுத்திருந்த “உலக அறவி” என்ற அம்பலத்தில்தான் தனது அன்னதானத்தைச் செய்யத்தொடங்கித் தொடர்ந்து செய்துவந்தாள். இந்த அம்பலம், எந்த வேறுபாடுமின்றி அனைவரும் புகுவதற்கு வசதியாகத் திறந்தேயிருக்கும் வாயிலைக் கொண்டது.

புகார் நகரைக் கடல் கொண்டபின்னர் வஞ்சி நகருக்குச் சென்ற மணிமேகலை, காஞ்சியில் கடும் பஞ்சம் நிலவுவதாகக் கேள்விப்பட்டு அமுதசுரபியுடன் காஞ்சிக்குச் செல்கிறாள்.

துணையிளங்கிள்ளி என்ற சோழ அரசன் காஞ்சியில் கட்டுவித்த புத்த சைதன்யத்தைத் தொழுது அவன் உருவாக்கிய “தருமத வனம்” என்ற சோலையை அடைந்து, அந்தச் சோலையில் தனது அன்னதானத்தைத் தொடங்கி அதனை அறச்சாலையாக்குகிறாள். அமுதசுரபியின் துணைக்கொண்டு விருந்தோம்பி மகிழ்கிறாள்.

பௌத்த சமயம் தோற்றுவித்த இம்மரபு, காஞ்சியில் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் பௌத்தம் அழிந்த பின்னரும் சைவ தர்மமாகத் தொடர்ந்தது என்பது, “கிராமக் கோயிலாகிய காமாட்சி கோட்டத்து அறச்சாலை இருக்கையில், சிவனே நீர் ஏன் பிச்சை எடுத்துக்கொண்டு அலைகிறீர்?” என்ற சுந்தரர் தேவாரம் உரையும் வினாமூலம் அறியமுடிகிறது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழாரோ, மணிமேகலையின் துறவுக் கோலத்துடன் இல்லற தர்மமான விருந்தோம்பல் மரபைத் திறம்பட இணைத்து, கணவனுடன் இணைவதற்காகத் தவம்புரியும் தவக்கோலக் காமாட்சியைப் படைத்து அவளையே அறம் வளர்த்த அம்மனாகவும், பெருந்தொண்டை நாட்டு முறைமையைப் பேணியவளாகவும் சித்திரிக்கிறார். மனையறம் பெருக்கும் கருணையினால், காமக் கோட்டத்தில் 32 வகைப்பட்ட அறங்களையும் அன்னை புரந்தருள்கிறாள் என்று குறிப்பிடுவதோடு நில்லாமல்,

வீழவு மலி திருக்காஞ்சி
வரைப்பின் வேளாண்
விழுக் குடிமைப் பெருஞ்செல்வர்
விளங்கும் வேணி
மழவிள வெண்டிங்கள்
புனை கம்பர் செம்பொன்
மலை வில்லிக் களித்த
வளருணவின் மூலம்
தொழவுலகு பெறுமவள்
தானருளப் பெற்றுத்
தொன்னிலத்து மன்னு
பயிர் வேத வாய்மை
உழவு தொழிலாற் பெருக்கி
உயிர்களெல்லாம்
ஓங்க வருந்தரும வினைக் குளரால்

என்றும் அவ்வறங்களை வேளாளர்களோடும், உழவோடும் தொடர்புறுத்தி உறுதிப்படுத்திவிடுகிறார்.

காமாட்சியன்னை வேளாளர்கள் வசம் இரு நாழி நெல் வழங்கிப் பயிர் செய்து உணவளித்து அனைவரையும் வாழ்விக்க வழிகாட்டியதாகப் பிற்காலப் பாடல்களும் குறிப்பிடு கின்றன.

உழவுத் தொழிலால் விளையும் பயிர் வளம், வற்றாத அமுதசுரபி என்ற பௌத்த உருவகத்துடன் இவ்வாறு வெற்றிகரமாக இணைக்கப்பட்டது.

*(தொடரும்)*

# ஏழிசை மாலை நிகழ்வுகள் நாளைமறுதினம்

தென்மராட்சி கல்வி வலய அலுவலக இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்தும் இசைத்துறையினை மேம்படுத்தும் நிகழ்வான ‘ஏழிசை மாலை’ நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி தொடக்கம் மாலை 5.45 மணி வரை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமைகளில் ஏழிசை மாலை நிகழ்வு மாதம் ஒரு பாடசாலை என்ற நோக்கில் பாடசாலைகள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.மூன்று பாடசாலைகளில் நடத்தப்பட்ட பின்னர் நான்காவது நிகழ்வு வலய நிகழ்வாக நடத்தப்படும். அந்த வகையில் கல்வி வலய இசையாசிரியகள் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்தும் ‘ஏழிசை மாலை வலய நிகழ்வாக நடத்தப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ( பொது நிர்வாகம் ) திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தே.பாபுவும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், யாழ். இராமநாதன் நுண்கலைப் பீட இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.மகேந்திரன், தென்மராட்சி கல்வி அபிவிருத்திக் கழக செயலாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் இறைவணக்கம், உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் ஏழிசை மாலை கீதம் இசைத்தல், ஓய்வுநிலை இசையாசிரியர்/சங்கீத பூசணம் பொன் ஸ்ரீ வாமதேவனின் இசைக் கச்சேரி, தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் வயலினிசை, மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவர்களின் குழுப் பாடல் நிகழ்வு, தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்களின் ‘ காற்றினிலே வரும் கீதம் ’ இசை நிகழ்வு, தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் மிருதங்க இசைச் சங்கமம் மற்றும் தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்களின் மெல்லிசை விருந்து என்பன இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வுகளுக்கு அணிசேர் கலைஞர்களாக வயலின் இசையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கே.குகபரனும் மிருதங்க இசையை கொக்குவில் இந்துக் கல்லூரி இசையாசிரியர் எஸ்.துரைராஜாவும் கஞ்சிரா இசையை வங்கி அலுவலர் பி.ஞானவேலும் கீ போட் இசையை எஸ்.நிர்மலனும் வழங்கவுள்ளனர்.

# தென்னருவி வணிக பாட கண்காட்சி 2017

தென்னவன்



இளம் வயதில் தொழில்முயற்சியாளனாக வர விரும்பவதற்குரிய ஆக்கங்களையும் அதனால் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் எடுத்தியம்பிக்க வேண்டியதும் அனைவரதும் கடமையாகும். பாடசாலை மாணவர்கள் அனைவரும் அரச உத்தியோகம் தனைபெறும் நோக்கில் கல்வி கற்றால் மறைந்து போயுள்ள தொழில் முயற்சிகளை எங்ஙனம் மீண்டும் புத்துயிர் பெறச் செய்வது. கல்வியுடன் சேர்ந்த கைத்தொழிலை பயிற்றுவிக்க எல்லோரும் பாடுபட வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கேற்ப தொழிற்றுறைகளை முன்னேற்றல், அது தொடர்பான அறிவை மாணவப் பருவத்தில் வளர்க்க வேண்டிய கடப்பாடு என்பன இன்றைய கால கட்டத்தின் தேவையாகும். அந்த வகையிலே மாணவப் பருவத்தில் வழங்கப்படும் தொழில் அறிவுகளை பாடசாலைகளின் காட்சிப்படுத்தல் மூலமல்லாது அனைவரும் பார்வையிட்டு அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், உற்பத்திப் பொருளின் தற்போதைய தேவை தொடர்பான அறிவையும் மாணவனுக்கு ஊட்டுவதற்கு களம் அமைத்து வழங்குவது போல அமைக்கப்பட்டுள்ள நிகழ்வே வணிக பாட மாணவர்களின் ஆக்கப் பொருட்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வாகும்.

**தென்பகுதியில் மாறுபட்ட நிலை**

தென் பகுதியைப் பொறுத்த வரையில் பெருமளவு பாரிய தொழில் உற்பத்தி நிலையங்கள் உள்ளதால் அவற்றை மாணவர்கள் நேரில் சென்று பார்வையிட்டுத் தமது எதிர்காலம் பற்றிய சிந்தனையை வளர்த்துக் கொள்வர். ஆனால் தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரையில் பிரதேச ரீதியில் கட்டமைவு பெற்றிருந்த பாரிய தொழிற்சாலைகளும் மூடப்பட்டு சிறிய அளவில் இயங்கும் தொழிற்சாலைகளே உள்ளன. இந்த நிலையில், வணிக பாட மாணவர்களை உயர் கல்வி மூலம் தொழில் முயற்சியில் ஈடுபடச் செய்யும் நோக்குடன் தென்மராட்சி கல்வி வலய வணிக பாடப் பிரிவினர் வலயப் கல்விப் பணிப்பாளரின் ஒத்துழைப்புடன் முதல் முயற்சியாக கடந்த 2015 ஆம் ஆண்டு வணிக பாட மாணவர்களின் உயர்கல்வியுடனான தொழில் முயற்சிகளை விளக்கும் ஆக்கப் பொருள்களின் காட்சிப்படுத்தலை நடத்தினர்.

அந்த காட்சிப்படுத்தலில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், உயர் கல்வி அமைப்புகள், வணிக நிலையங்கள் எனப் பலர் கலந்து கொண்டு ஆரம்ப நிகழ்வில் தமது பங்களிப்பை வழங்கி மாணவர்களுக்கு சிறந்ததொரு வழிகாட்டுதலை காண்பித்தனர். யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றுடன் மாவட்டத்தில் இயங்கும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் வணிக பாடம் கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் எந்தத் துறையில் பிரகாசிக்கலாம் என்பதை விளக்கும் வகையிலான செயன்முறைகளையும், அறிவூட்டல்களையும் வழங்கியிருந்தனர். இவர்களுடன் நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவை எதிர்காலத்தில் தொழில் முயற்சியாளராக வரவிரும்பினால் என்ன வழிகளைக் கையாள வேண்டுமென்ற கருத்திலான செயற்றிட்டங்களையும் காட்சிப்படுத்தியதுடன் அது தொடர்பான விளக்கங்களையும் மாணவர்களுக்கு வழங்கினர். வர்த்தகத் துறையில் என்னென்ன யுக்திகளைக்கையாண்டுதொழில்முயற்சியாளராக மிளிர ம்டி யும் என்பதை எடுத்தியம்பும் வணிக நடவடிக்கை தொடர்பான விடயங்களையும் மாணவர்களுக்குப் புகட்டினர்.

இவர்களை விட மாவட்டத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யும் பொருள்களை காட்சிப்படுத்துவதுடன் தமக்குக் கிடைக்கும் சந்தை வாய்ப்புகளையும் மாணவர்களுக்கு எடுத்தியம்பும் வகையில் தமது உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்தியிருந்தனர். தென்மராட்சி கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலை யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளின் மாணவர்களும் பார்வையிட்டு தமக்கு இருந்த சந்தேகங்களுக்கும் உரியர்களிடம் தீர்வைக் கேட்டுப் பெற்றுச் சென்றனர். இரு தினங்கள் நிகழ்வை நடத்தினாலும் முதல் நாள் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டு அவர்கள் இவற்றைப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனை ஆயிரக்கணக்கான மாணவர்கள் பார்வையிட்டு பயன் பெற்றனர் எனலாம்.

**ஏராளமான காட்சிக் கூடங்கள்**

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட மேற்படி கண்காட்சியை வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், இரண்டாவது கண்காட்சியை வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் மூன்றாவது கண்காட்சியை மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த 2015 மற்றும், 2016 ஆம் ஆண்டுகளில் 60இற்க்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்களும் 20இற்க்கு மேற்பட்ட உயர் தொழில் கல்வி நிறுவனங்களும் கலந்து கொண்டன. இவ்வருடம் யாழ்.மாவட்ட உற்பத்தி நிறுவனங்களும், பிரதேச தொழில் முயற்சியாளர்களும் மட்டும் பங்குபற்ற முடியுமென மட்டுப்படுத்தப்பட்டதால் 40 தொழில் நிறுவனங்களும், 25 உயர் கல்வி நிறுவனங்களும், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களும் கலந்து கொண்டன. இவர்களுடன் உள்ளூரில் உடனுக்குடன் உணவுப் பொருள்கள் தயாரித்து வழங்கக்கூடிய தொழில் முயற்சியாளர்களும் கலந்து கொண்டனர்.

ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலைக் காண வருவோரைக் கவரக்கூடிய விழிப்பணர்வு வீதி நாடகங்களும், கல்லூரி மண்டபத்தில் மாணவலர்களால் ஆற்றுகை செய்யப்பட்டன. ஒரு நாளில் இரு நாடகங்கள் ஆற்றுகைப்படுத்தப்பட்டதால் ஒவ்வொரு காட்சியும் மண்டபம் நிறைந்த நிலையில் காண்பிக்கப்பட்டன.

நடந்து முடிந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்களென பலர் அழைக்கப்பட்ட போதிலும் தலைமையுரை கூட இல்லாத நிலையில் தலைமை விருந்தினரின் உரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாவது இந்த நிகழ்வுக்கு கிடைத்த மற்றொரு சான்றிதழாகும் விருந்தினர்களை வரவேற்க அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களும் அணிவகுத்து நிற்கின்ற போதிலும் அவர்கள் நீண்டநேரம் காத்திருக்கக்கூடாது என்பதற்காக குறித்த நேரத்தில் பவனியாக அழைத்து வருதல், மங்கல விளக்கேற்றல், நாடா வெட்டுதல், ஆரம்ப உரை என நிகழ்வைத் தொடங்கி அரை மணி நேரத்தில் அனைத்து நிகழ்வுகளையும் முடித்து என்ன நோக்கத்திற்காக காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டமை கல்வி வலயத்தின் மற்றொரு சாதனையாகும். மாணவர்களுக்காக நடத்தப்படும் நிகழ்வில் விருந்தினர்க ளும் மாணவர்களும் சம காலத்தில் காட்சிக்கூடங்களைப் பார்வையிட்டதைக் காணமுடிந்தது. இதனால் மாணவர்கள் காட்சிக்கூடங்களைப் பார்வையிட்ட பின்னர் தமது பாடசாலைகளுக்குச் சென்று தமது கல்விச் செயற்பாட்டினை மேற் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் பலர் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதில் முழு மனதுடன் அக்கறை செலுத்தியுள்ளனர் என்பதை காட்சிப்படுத்தப்பட்டிருந்த உற்பத்திகளிடை காண முடிந்தது.

உள்ளூரில் உள்ள வாழ்வகங்களில் தங்கியுள்ள பெண்களால் தயாரிக்கப்பட்ட பதனிடல் உணவுகள், தாங்கும் கரங்கள் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம், மாற்றுத் திறனாளிகள் உற்பத்தி நிலையங்கள், தொழில் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்கள், மட்பாண்டப் பொருள்கள் என அனைத்து விதமான உற்பத்திப் பொருள்களை அவர்கள் காட்சிப்படுத்தியிருந்தனர். தற்போதைய காலகட்டத்தில் பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களை நாடும் எமது மக்கள் உள்ளூரில் எம்மைப் போன்ற அமைப்புகளால் தயாரிக்கப்படும் பொருள்களை கொள்வனவு செய்வதில்லை. இதனால் தான் இவ்வாறான காட்சிக்கூடங்களுக்குச் சென்று உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்த வேண்டிய நிலை எமக்கு ஏற்படுகிறது. எமது நிறுவனங்களால் தயரிக்கப்படும் உற்பத்திப் பொருள்களை எமது மக்கள் கொள்வனவு செய்வார்களாயின் தரமான உள்ளூர் உற்பத்திகளை விநியோகித்து நிறுவனங்களில் தங்கியுள்ள பெண்களின் வாழ்வாதாரமும் மேம்படுத்தப்படுமெனவும் நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். எமது பிரதேசத்தில் பல சிறு தொழில் நிறுவனங்கள் உற்பத்திப் பொருள்களை தயாரிக்கின்றபோதிலும் அவற்றை சந்தைப் படுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்குவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

யாழ்.மாவட்ட உற்பத்தி நிறுவனங்களும் பிரதேச தொழில் முயற்சியாளர்களும் மட்டும் பங்குபற்ற முடியுமென மட்டுப் படுத்தப்பட்டதால் 40தொழில் நிறுவனங்களும், 25 உயர் கல்வி நிறுவனங்களும், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களும் கலந்து கொண்டன. இவர்களுடன் உள்ளூரில் உடனுக்குடன் உணவுப் பொருள்கள் தயாரித்து வழங்கக்கூடிய தொழில் முயற்சியாளர்களும் கலந்து கொண்டனர்.

**உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு**

இவ்வாறான காட்சிப்படுத்தல்களை நடத்தும்போது சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் பற்றிய விளக்கங்களை மக்கள் பெறக்கூடியதுடன் உற்பத்தியாளர்களை இனங்கண்டு அதற்கு உரிய சந்தை வாய்ப்பினை மக்களே ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்த விதமாக மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த சந்தை வெளிகளும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன. அவை தவிர்ந்து, மாணவர்கள் கல்வியாளர்களாக வரவேண்டுமென்ற எண்ணம் அனைவருக்கும் இருந்த போதிலும் கல்வியுடன் அடுத்து என்ன தொழில் முயற்சியில் இறங்கலாமென்ற சிந்தனையை உருவாக்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்தல் அமைக்கப்பட்டிருந்தமை பாராட்டத்தக்கது.



# இத்தாலியில் பிறந்த தமிழ் முனிவர்

பளையூர் பா.பாலாஜினி



இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவருடைய இயற்பெயர் கொன்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பதாகும். இவர் இத்தாலி நாட்டில் கி.பி.1680 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ஆம் திகதி பிறந்தார். இத்தாலி நாட்டைச் சேர்ந்தவராக இருந்த போதும் பெஸ்கி இளம்வயதிலேயே இத்தாலிய மொழியுடன் கிரேக்கம், இலத்தீன், போர்த்துக்கீசம் போன்ற மொழிகளையும் கற்றுப் புலவராக விளங்கினார்.

பின்னர் 1710 ஆண்டளவில் தமிழ் நாட்டினுடைய மதுரைக்கு வந்த அவர் தமிழ்மொழி கற்க விரும்பி அங்கு வாழ்ந்த சுப்ரதீய கவிராயரிடம் தமிழ்மொழியைத் தேர்ச்சியுறக் கற்றார். தமிழ்மொழி மீதுகொண்ட தீராத காதலினால் தைரியம் என்ற பொருள் கொண்ட தனது கொன்ஸ் டன்ஸ்போ என்ற இத்தாலியப் பெயரை மாற்றித் தைரியநாத சுவாமி எனத் தனக்குத் தானே பெயரிட்டுக் கொண்டார். உலகில் வழக்கத்தில் இருக்கின்ற எத்தனையோ மொழிகளை எல்லாம் கற்று நன்கு தேர்ச்சியுற்றிருந்த இவர் தமிழ்மொழியில் தனது பெயரை மாற்றிக் கொண்ட தன்மைகளை சிறப்புற்று நோக்க வேண்டும். தமிழராகப் பிறந்த நாம் அனைவருமே இன்றும் கூட எண்ணிப் பெருமைப் பட்டுக் கொள்ள வேண்டிய விடயம்.

**தமிழ் மீதான காதல்**

தைரிய நாதசுவாமி இயேசுநாாதர் பணியில் காட்டிய ஆர்வத்தையும், தமிழ்மொழி மேல் அவருக்கிருந்த பற்றினையும் கண்டு வியந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அவருக்க வீரமாமுனிவர் என்ற பெயரை வழங்கி கௌரவித்தனர். அன்றில் இருந்து எல்லோரும் அவரை வீரமாமுனிவர் என அழைத்தமையால் அந்தப் பெயரே அவருக்கு நிலைத்து விட்டது.

வீரமாமுனிவர் தமது 18 ஆவது வயதில் கத்தோலிக்கத் திருச்சபையில் இணைந்து கொண்டர். அங்கு பன்னிரண்டு வருடங்கள் குருப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். யேசு சபைக் கல்லூரியில் கல்வி போதித்தார். 1709 இல் குருப்பட்டம் அவருக்குக் கிடைத்தது. பின்னர் அவர் 1711 ஆம் ஆண்டு பாண்டிய நாட்டுக்கு வந்து அங்கு தொண்டு புரிந்து கொண்டிருந்த இயேசு சபைக்குருமாருடன் இணைந்து தாமும் தொண்டு புரியத் தொடங்கினார்.

சமய நூல்களினைத் தாமும் ஒரு தமிழனாய் இருந்து தமிழர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்ற பெரு விருப்பைக் கொண்ட அவர் மேலும் தமிழ் மொழியை மிக ஆழமாகக் கற்று அதன் இலக்கிய, இலக்கண நுட்பங்களைத் தெளிவாக விளங்கிக் கொண்டார். அத்தோடு சமஸ்கிருதம், உருது, தெலுங்கு போன்ற மொழிகளையும் கற்றுக் கொண்டார். 30 வயதின் பின் பிறமொழிகளைக் கற்று அதில் அளவற்ற புலமை பெற்று விளங்கிய வீரமாமுனி வரைத் தவிர இன்னொருவரை உலக வரலாற்றில் ஒரு போதும் காணவே முடியாதென வண தனிநாயகர் அடிகளார் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சிறப்பு மிக்க வீரமாமுனிவரது வரலாறு தமிழர்களாகிய எமக்குக் கிடைத்ததில் பங்களிப்புச் செய்தவர் ஓர் ஐரோப்பிய கவிஞராவார். தமிழ்மொழியை வளர்த்து தமிழுக்குத் தொண்டாற்றிய ஐரோப்பியர்களில் சென்னை மாவட்ட ஆட்சியாளராக இருந்த எல்லீஸ் துரை தமிழ் மீது ஆர்வங் கொண்டு நல்ல முறையில் தமிழ் கற்ற சந்தர்ப்பத்தில் தமிழ்ச் சுவடிகள் பலவற்றைத் தேடிச் சேகரித்தார். அத்தகைய தேடலில் கிடைத்தது தான் வீரமாமுனிவரினுடைய தேம்பாவணி எனும் காவியம். அதனை எல்லீஸ் துரை அவூர் எனும் சிற்றூரில் கண்டெடுத்தார். பின்னர் முத்துச்சாமி என்பவரின் உதவி கொண்டு வீரமாமுனிவரது வரலாற்றையும் எழுதினார். எல்லீஸ் துரை இந்தப் பணியை மேற்கொள்ளாது இருந்திருந்தால் இன்று வீரமாமுனி வரைப் பற்றி நாம் அறிந்திருக்க முடியாது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

**வீரமாமுனிவரின் தேம்பாவணி**

வீரமாமுனிவர் யார்த்த பெருங்காப்பியமாக விளங்குவது தேம்பாவணியே. இது கிறிஸ்துவ நீதி நூலாக விளங்குகின்றது. இந்த நூலானது இயற்கையோடு இணைந்திருக்கின்ற இறைவனின் தோற்றம், தொழிற் சிறப்பு, இல்லற துறவற விளக்கம், அறத்தின் அருமை காமத்தின் தீமை எனப் பலதரப்பட்ட விடயங்களைத் தெளிவுற விளக்கி நிற்கின்றது. தேம்பாவணி, முனிவர் போதித்து வந்த அறக்கோட்பாடுகளும், தத்துவங்களும், நீதிகளும் நிறைந்த அரும்பெரும் காப்பியமாகும்.

செய்யுள்களாலான 3காண்டங்களாகவும், 36 படலங்களாகவும், 3615 பாடல்களாகவும் இவை எழுதப்பட்டுள்ளன.

வீரமாமுனிவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் மதுரை, தஞ்சாவூர், அரியலூர், கயத்தாறு, காமநாயக்கன் பட்டி ஆகிய இடங்களில் பணிபுரிந்தார். தமிழ்மொழியைத் திறம்படப்பேசவும்,எழுதவும்பயின்றார். மேலும் ஐம்பெரும் காப்பியம் முதலிய அனைத்து நூல்களையும் விரும்பி வாசித்தார். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைக் கற்று அவ்வாறான நூல்களைத் தாமும் இயற்றும் முயற்சியில் ஈடுபட்டார். தமிழ் இலக்கணத்திலே ஏ,ஓ போன்ற எழுத்துக்களினுடைய வரி வடிவங்களில் மாற்றம் செய்து தமிழ் எழுத்துக்களில் நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். தமிழ் இலக்கண வரிவடிவ அமைப்பினை எல்லோரும் எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய முறையில் மாற்றியமைத்தார். அந்த வகையில் தமிழ் இலக்கணத்தில் வரி வடிவத்தினைத் திருத்திய ஒரே ஒரு வெளிநாட்டவர் என்ற பெருமையை வீரமாமுனிவர் பெற்றுக் கொள்கின்றார்.

# பெண்களின் படைப்பாற்றலில் தாலாட்டு

உடுவிலூர் கலா



புராதன கால சமூக, கலாசார வாழ்க்கை நெறிமுறைகளோடு பின்னிப் பிணைந்திருப்பது தாலாட்டு. தாலாட்டு தனிச் சிறப்புடையது பெண்மைக்கு மெருகேற்றுவது. தாய்மைக்கு உயிரூட்டுவது. அழும் குழந்தையை அள்ளி அரவணைத்து உச்சி முகர்ந்து அழுகையை நிறுத்துவதற்காகவும், தூங்க வைப்பதற்காகவும் தாலாட்டுப் பாடப்படும். அன்றைய பெண்கள் முழுநேரமும் வீடுகளிலேயே இருந்தனர். சமைத்தல், துவைத்தல், பெருக்குதல், பணிவிடை செய்தல், பிள்ளையை பெறுதல், பிள்ளையை பராமரித்தல் என்பன பெண்களின் கட்டாய கடமைகளாயிருந்தன. இவ்வாறு பல கடமைகளோடு பிள்ளையை தூங்கச் செய்யத் தாலாட்டுப் பாடி மகிழ்ந்தனர்.

தாலாட்டு என்றால் குழந்தையை நாவால் ஆட்டி தூங்க வைத்தல் எனப் பொருள்படும். ஆணாதிக்க அடக்கு முறையில், கலாசார மரபில் பெண்ணின் ஆடல் பாடலுக்கு வலுவான தடைகள் இருந்த போதும் தாலாட்டுப் பாடலுக்கு எந்த ஒரு தடையும் இருக்கவில்லை. சமூகத்தில் குழந்தையைத் தூங்க வைத்தல் என்பது கட்டாய தேவையாக இருந்தது. ஓர் உயிரின் குழந்தைப் பருவத்துடன் தொடர்புடைய தாலாட்டு வீட்டிலே மட்டும் பாடப்படுவதில்லை. வயல் வெளிகளில் வேலை செய்யும் பெண்கள் தமது தோளில் சுமந்து கொண்ட குழந்தைகள் தூங்குவதற்காகவும் பாடப்பட்டது. எனவே குழந்தை செல்லும் இடமெல்லாம் பெண்களோடு ஒரு சேரவே தாலாட்டும் சென்றது.

**நாட்டார் இலக்கியமாகத் தாலாட்டு**

தாலாட்டு நாட்டார் இலக்கியமாகக் கொள்ளப்படுதல் மரபு. நாட்டார், இலக்கியம் என்பது சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் இலக்கியமாகக் கொள்ளப்பட்ட போதிலும் எல்லாவர்க்கப் பெண்களும் தாலாட்டுப் பாடியே குழந்தைகளைத் தூங்கவைத்தனர். இதனால் வர்க்க வெறி மேலாட்சி கொண்ட காலத்திலும் மேற்குடி மக்கள், கீழ்க்குடிமக்கள் என்கிற பகுப்பு வாத நிலையைக் கடந்து பெண்களின் வாய்மொழி இலக்கியம் என்னும் சிறப்பிடத்தை தாலாட்டுப் பெற்று கொண்டுள்ளமை சிறப்பம்சம். தாலாட்டு பாசமும், உணர்ச்சிச் செறிவும் கொண்டது. அழும் குழந்தையைத் தோளில் இடும் பெண் "ஆராரோ ஆரிவரோ மாமன் அடித்தானோ மகிழ்ந்தெடுக்கும் கையாலே அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே என உறவுகளை இட்டு அழைத்து பாடும் தன்மைகள் மழலைக்குப் பாசத்தை ஊட்டுவது மட்டுமல்ல கூட்டுக் குடும்ப வாழ்வுக்கும் அத்திபாரம் இடுகிறது. அது மட்டுமல்ல அன்றைய கூட்டுக் குடும்பங்களின் அரசாட்சியைத் தாலாட்டின் வரிகள் எடுத்தியம்புவதைக் காணமுடிகிறது. தாலாட்டுகள் பெரும்பாலும் ஆராரோ ஆரிவரோ என்றே தொடங்குகின்றன. குழந்தையின் பூர்வீகம், அதன் பிறப்பினால் உண்டான சந்தோசம், தனக்கே சொந்தமான ஒன்று கிடைத்து விட்டபெருமிதம், அதனை உடலாலும் உள்ளத்தாலும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்கிற ஆர்வம் என அத்தனையும் ஆராரோ ஆரிவரோ என்கிற வினாக்களில் தொக்கி நிற்கின்றன.

**பெண்ணுக்குள் இன்னொரு உயிர்**

ஒரு பெண் தனக்குள் இன்னொரு உயிரை ஐயிரண்டு மாதங்கள் சுமக்கிறாள். எத்தனையோ கனவுகள், கற்பனைகள், துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள், சஞ்சலங்கள் என யாவற்றையும் அந்த உயிரோடு சுமக்கிறாள். உயிருக்குயிரான அந்த உயிர்ப்பைப் பக்குவமாக ஈன்றெடுப்பது என்பது மகிழ்வான ஒரு அனுபவம். இத்தனித்துவமான அனுபவத்தின் உடனடி வெளிப்பாடாகவே தாலாட்டுப் பெண்ணின் வாயிலிருந்து பிரசவமாகின்றது. சுயமாக கட்டுப்பாடோ, மனத்தடையோ இன்றி பெண்ணின் கற்பனை ராஜ்ஜியத்தில் உருவாகும் தாலாட்டின் இசைப்பாங்கும் பெண்ணின் குரல் வளமும் கேட்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும். பெண்ணின் கற்பனை வளத்தினால் மட்டுமன்றி சொல்லோட்டம், புதுமைசார் உத்திகள், நாவின் அசை வியக்கம் என்பனவும் தாலாட்டின் தரத்தை உயர்த்தி நிற்கின்றன.

தாலாட்டுப் பாடும் நேரத்தில் படைப்பாற்றலையும் இசைத்திறமையையும், குரல் வளத்தையும்,பாசப் பிணைப்பையும், பெண்கள் வெளிக் கொண்டு வரத் தவறுவதில்லை. பெண்களின் படைப்பாற்றல் இலக்கியவளத்தை இயற்கையாகக் கொண்டுள்ள போதும் அவற்றை வெளிக் கொண்டு வர தாமாக களம் அமைத்துக் கொடுப்பதில்லை. தந்தை வழி மரபும் இதற்கு முட்டுக் கட்டையாகவே இருந்துள்ளது. ஆனாலும் தாம் பெற்ற பிள்ளைகளைத் தூங்கச் செய்யும் போது அவர்களை அறியாமலே படைப்புக்கள் தாலாட்டாக வெளிவந்துள்ளமையைக் காணலாம். பெண்கள் இலக்கிய கர்த்தாக்களாக, வாய்வழிப்பாடல் கலையாகத் தந்து விட்ட தாலாட்டு பெண்களின் இலக்கியத் திறமையைப் பறைசாற்றி நின்றமையும் யாராலும் மறுப்பதற்கில்லை.

புலவர் வள்ளுவதாசன்

# தமிழே! நீ வாழ்க!

மதவாதிகளால் மாயை என்ற சொல்லை வைத்துக்கொண்டு பகுத்தறிவாளர்களின் சிந்தனைகளுக்கு இரும்புத்திரை இட்டது போல் மொழி இயலில் "சிதைவில் என்பது முதல்வன் கண்ணே" (தொல். 108) என்று தாங்கள் செய்த, செய்கின்ற பிழைகளுக்கெல்லாம் நியாயம் கற்பித்திருப்பது தமிழர்களே. இந்த செயல் நிலைகள் தமிழ் மொழி பேசுபவர்களை காலவரைய்றையின்றி, அறியாமையில் மூழ்கிக் கிடக்க வைத்திருக்கின்றது என்றால் மிகையற்றது.

**அரிச்சுவடியில் குழறுபடிகள்**

உதாரணத்துக்கு, தமிழ் அரிச்சுவடியில் (நெடுங்கணக்கில்) இருக்கும் எழுத்து வடிவங்கள் பல குளறுபடிகளைக் கொண்டதாக இருப்பதற்கு இவை முதற்காரணமாக இருப்பது தெளிவாகின்றது. அதாவது, தேவையற்ற எழுத்துக்கள், மயக்கம் தருகின்ற எழுத்துக்கள் என வரிசைப்படுத்தலாம். குறிப்பாக, `ஔ' உருபை எடுத்துக்கொண்டால் லிபியாக இருந்த மொழி ஒலி வடிவம் பெற்ற பின் அமைக்கப்பட்டவை

## ஔ

> இலக்கணப்போலியானது எப்படி? ஔவை' என்ற சொல்லுக்காகத் தமிழ் மொழியில் ஒரு தேவையற்ற எழுத்தைப் புகுத்தி, அதற்கு வரைவிலக்கணம் கூறி பிறமொழிக்காரரால் எள்ளப்படுவதற்கு வழிவகுத்தது இலக்கண ஆசிரியரின் தான்தோன்றித்தனமான செயலையே சுட்டி நிற்கிறது.

என்பதில் தவறிருக்காது என நம்புகிறேன். ஒலி வடிவில் உருவாக்கப்பட்ட எழுத்துக்களுள் `ஔ' உருபுதேவைக்கு அதிகமாக அமைக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சில உதாரணங்கள் கூறலாம். அவ்விடம், இவ்விடம், எவ்விடம் என்ற பதங்கள் இலக்கணத்துக்குள் அடங்குமாயின், அவ்வை என்ற சொல் மட்டும் இலக்கணப்போலியானது எப்படி? ஔவை என்ற சொல்லுக்காகத் தமிழ் மொழியில் ஒரு தேவையற்ற எழுத்தைப் புகுத்தி, அதற்கு வரைவிலக்கணம் கூறி பிறமொழிக்காரரால் எள்ளப்படுவதற்கு வழிவகுத்தது இலக்கண ஆசிரியரின் தான்தோன்றித்தனமான செயலையே சுட்டி நிற்கிறது.


அடுத்ததாக `ஊ' என்ற உயிர் நெடில் குற்றெழுத்தை நெடிலாக்குவதற்காக "ர" ஒற்றுப் பயன்படுத்தப்படுகிறது. அடுத்ததாக ஆவுக்கு 5 ஏனைய ஞ,டீ,கீ போன்ற மேலும் பல எழுத்துக்கள் உள்ளன. குறிலை நெடிலாக்க இந்த இரண்டு முறைகளுமே போதுமானவை. அப்படி இருந்தும் கூ, ஈ போன்ற நெடிலுக்குத் தனிப்பட்ட எழுத்துருவம் கொடுத்திருப்பது எத்தகைய செயல் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதே நான் தமிழறிஞர்களிடத்தில் முன்வைப்பதான பணிவான வேண்டுகோள்.


**ஆதி மொழியாகிய தமிழ்**

மேலும் கூறுவதாயின், `ள' ளகரம் என்ற குறியீட்டை `ஔ' வுக்கும் ஊவுக்கும் இடவேண்டிய தேவை என்ன? ஆதிமொழி தமிழ் மொழியென்று கூறிக்கொள்பவர்களைக் கேட்கிறேன் ஔ, ஊவுக்கு பதிலாக வேறு ஒரு குறியீட்டைப் போடுவதற்குப் பஞ்சமாகிவிட்டதா தொல்காப்பியருக்கு? இயல்பான மொழிப் பரிமாற்றம் தேடி நிற்கும் இந்தக் காலகட்டத்தில், இயல்பாக வாசிப்பவர்கள் ஔவையார் என்றே வாசிப்பார்கள். இதற்குக் காரணம் ஒ +வொரு சேர்ந்து நிற்கும் ளகரம் இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என்றெல்லாம் இலக்கணம் வகுத்தவர்கள, ஒவுக்கும் ளவுக்கும் எவ்வித ஒலித் தொடர்பும் இல்லை என்று ஏன் கண்டுகொள்ள முடியாமற் போயவிட்டது?


முருகனால் அகத்தியருக்கு அருளப்பட்ட தமிழ் மொழி என்றெல்லாம் கூறுபவர்களும் எம்மிடையில் இல்லாமல் இல்லை. அவர்களெல்லாம் மொழி ஆய்வாளர்களின் மொழி வரலாற்று நூல்களைப் படிப்பது நல்லது. காலத்துக்குக் காலம் மொழி பல திருத்தங்களுக்கு உட்பட்டிருப்பது புரியும். சங்ககாலம் தொட்டு இன்றுவரை எத்தனையோ முறை தமிழ் மொழி திருத்தப்பட்டிருக்கிறது என்பது புரியும். அதில் தமிழர் அல்லாதவரும் (வீரமாமுனிவர்) அடங்குவர்.

மேலும், தமிழ் மொழியிலுள்ள குறைபாடுகள் தமிழறிஞர்களால் திருத்தப்படாவிடின், வேற்றுமொழிக்காரரால் திருத்தப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம் என்பதை ஆழ்ந்த கவலையோடு குறிப்பிட விரும்புகிறேன். ஆக, "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலர் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவப் பெருந்தகையின் அறிவுரைக்கிணங்க தமிழறிஞர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சியில் சற்றுக் கவனம் செலுத்துவார்களேயானால், தமிழ் மொழி மேலும் தழைத்தோங்கும். அழிவின்றி நீடுவாழும்.





# வாடாத முல்லை அவள்



மேகலையின் மென்னிதழை முத்தமிட்டானவன் மாதுளையின் முத்துக்கள் பளிச்சிட்டன. வாடிக்கிடந்த மலரோ மலர்ந்தது. வாஞ்சையின் கதவுகள் திறந்தன. வற்றா அன்பில் முற்றி விட்ட காதல் கொத்தோடு மலர்ந்த குதூகலத்தில் குதித்து விளையாடியது உள்ளங்கள். அவள் மடியில் அவன் தஞ்சமடைந்திருந்தான். அந்த மாலைப் பொழுதும் மயங்கிக்கிடந்தது. வருகின்ற நாள்களெல்லாம் வசந்தத்தில் மிதக்கப் போகிறது. மங்கையின் மேனியோ வாடிவிடப்போகிறது. அதனால் சுகமடையப் போகின்றவள் அவள்தானே! ஏக்கத்தின் மத்தியில் இதயங்கள் துடிக்கின்ற வேளை தூக்கமும் வருமோ? உண்மையைச் சொல்லி விடுவாய் போலிருக்கிறதே! "சொல்லமாட்டேன், செல்லித் தெரிவதில்லையே மன்மதக்கலை" சொல்வதற்கு என்ன இருக்கிறது?

வாடாத முல்லையில் வண்டாடும் வேளை வர்ணிக்க முடியாத சுவைகள், வார்த்தைகளால் அளக்கமுடியுமா அதை? அவை அத்தகைய வன்முறைசேர்ந்த மென் சுகங்கள். முத்தங்களை, சத்தங்கள் மோகம் அங்கே போர்க்கோலம்.

திட்டங்கள் போடுதற்கு நேரமில்லை, வெட்கத்திற்கும் அங்கு வேளையில்லை அதனால் திட்டங்கள் அங்கு பலிப்பதில்லை. மூடிக்கிடந்த கண்கள் திறக்க வில்லை. அதுமோகத்தின் ஆட்சியின் எல்லை. காலைப் பொழுதோ கசக்கும் கண்டவர் முகங்கள் வெறுக்கும், கொண்டவன்முகந்தோடிக் கொதிக்கும், இது பெண்ணுள்ளம். நாழிகை கடந்து நடு நிசியும் கடக்கிறது. நங்கையவள் முகத்தையே பார்த்திருந்து விட்டதால் நேரத்தைக் கவனிக்க நேரமேது? எத்தனை கல்நெஞ்சக் காரனவன்? அவள் மடியென்ன மரக்கட்டையா? மலர்ப்படுக்கையாக இருந்துவிட்டுப் போகட்டும் கசங்கிவிடுமே! கணப்பொழுது கண்ணயர்ந்துகிடந்தவனின் கன்னத்தில் முத்த மிட்டாளவள் கண்விழித்தானவன் "கண்ணுறங்கவில்லையா நீ" காதல் கரை புரண்டோடியது அவன் வார்த்தையில் நீங்கள் கண்ணுறங்கிவிட்டீர்களே! என்மடியில் காதல் கலந்த பரிவு அன்னையின் அரவணைப்பு. அவள் வார்த்தையில் அன்பு பெருக்கெடுத்தது. அத்தான் என்றாளவள் முத்தங்கள் சொரிந்தானவன் கண்விழித்துக் காத்திருந்த நேரம் கனிந்தது. கட்டுக்கடங்காத காதற் பசி, அப்பப்பா! எத்தனை குறும்புத்தனம்? விடைபெறும்நேரம் நெருங்க நெருங்க நெஞ்சம் கனக்கிறது. கண்களோ கண்ணீரைச் சுரக்கிறது. கலங்காதே கண்ணே நாளை உனக்காகக் காத்திருப்பேன் கன்னத்தை வருடுகிறான். அவள் கைகளைப் பற்றுகிறான். காதற்களமொன்று கை நழுவிப் போகிறது.

மறுநாள் புலர்கிறது மாலைமயங்குகிறநேரம் வண்ணமயில் நடமாடும் சோலையது வெண்பட்டு மணற்திட்டில் மஞ்சமிடக் காத்திருக்கிறாள் அவள். வரவில்லையே அவன்! வாரணம் பொருகும் அவன் மார்பழகு மனத்திரையில் நிழலாட, அவன் வஞ்சமில்லா வார்த்தைகள் நெஞ்சில் இனித்தது. வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த கால்களும் வலுவற்றுப் போனது ஏன்வரவில்லை சங்கொலி கேட்கிறதே சென்றுவிட்டானோ களம் நோக்கி வாடிய முகத்தோடு மீண்டேகினாள் மேகலை.

> வாடாத முல்லையில் வண்டாடும் வேளை வர்ணிக்க முடியாத சுவைகள். வார்த்தைகளால் அளக்கமுடியுமா அதை? அவை அத்தகைய வன்முறை சேர்ந்த மென் சுகங்கள். முத்தங்களை சத்தங்கள் மோகம் அங்கே போர்க்கோலம்.

**வேல்பட்ட தழும்புகள்**

நாள் தோறும் அவனுக்காகக் காத்துக் கிடக்கும் வேலையாகிவிட்டது அவளுக்கு. நாள்கள் பல சென்றன, போர்க்களம் சென்றவன் திரும்பிவிட்டான். வெற்றிப் பெருமிதம் அவன் உள்ளத்தில். வேல்பட்ட தழும்புகளோ அவன் மார்பில். வீரமறவனல்லவா அவன் வேலெடுத்துப் போர் புரிய முடியவில்லை அவனால், வாளெடுத்தான் கையில் வேலெடுத்த வேளையில் அவள் விழிகளல்லவா நினைவுக்கு வருகிறது. அந்த நினைவுகள் தோல்வியைத் தந்துவிடுமோ? என்று அஞ்சியவன் அதனால் வேலெடுக்கவிரும்பவில்லையவன். களம்புகுந்து பகை முடித்துக் காதலியைத் தேடிவருகிறான் காளை.

மனம் நொந்து மார்பிளைத்து வருந்திக் கிடக்கிறாள் மங்கை. வகை தொகையாய்ப் பகை குவிந்தும் வாடாத அவன் உள்ளம் மேகலையின் நிலைகண்டு வாடியது. வாஞ்சைமிகு பெண்ணழகின் வாடிக்கிடந்த முகம் மலர்ந்தது அவன் வரவுகண்டு. அங்கே பேச்சுக்களுக்கேது வேலை?

வாரியணைத்தானவன், வசந்தமுல்லைச் சரமென வாய்மலர்ந்தாளவள். ஆரத்தழுவிக்கொண்டாள் அன்புப் பரிமாற்றங்கள் கொஞ்சிவிளையாடியது. அத்தானென்றாளவள் அன்பே! என்று அள்ளித்தழுவிக்கொண்டான் காளை மாலையிட வேண்டும் என்று அடம்பிடித்தாள் கோதை வேளைவரவேண்டும் என்று விருப்புரைத்தான் காளை நாளை என்று கூறிநாள்கள் கழிகிறதே நயந்துரைத்தாளவள் மாலையிடும் நாள் வரும் வருந்தாதே! தென்புரைத்தானவன். கோழையல்ல என்தலைவன் கொற்றமுண்டு என்றெண்ணி கைவிரலால் கோலமிட்டாள் கன்னத்தில் கோதை கட்டுக்கடங்காத காதலன் கண்ணில் தோன்றியது கட்டியணைத்தாளவள். காதலருகில் கூரிய கனிமொழியோ காளையவன் காதுகளில் மந்திரமாய் ஒலித்தது. காமன் கைக்கருப்புவில் எய்த மலர்ச்சரங்கள் கன்னியவள் மேனியில் சொரிந்தது. கண்மயங்கிக் கிடந்தனர். இரவுபகலறியாது. காலமும் கனிந்தது. கடிமணமும் கண்டனர் வாழ்க்கையினி இல்லறத்தின் வழிநடந்து செல்லுமெனக்கொள்வதோ? வாழ்த்துச் சொல்லுவதோ?

சைவப்புலவர் என்.பி.ஸ்ரீந்திரன்

# ஈழத் தமிழரின் சைவ சித்தாந்த சைவ மாநாடு





யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையினரால் கடந்த வருடம் பங்குனிமாதம் முதலாவது சைவமாநாடு வெகு சிறப்பாக நடத்தப்பட்டிருந்தது. இந்த வருடமும் இரண்டாவது அனைத்துலக சைவமாநாட்டை நன்கு திட்டமிட்டு அனைவரும்போற்றும்வண்ணம்சிறப்புறநடத்தி முடித்துள்ளனர். இதனை ஒரு அசுர சாதனையாக தமிழ்நாட்டின் பேராசிரியர்கள் வியந்து போற்றிப் பாராட்டியுள்ளனர். இது ஈழத்தமிழர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம் ஆகும். குறிப்பாக தற்போதைய இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனின் அயராத முயற்சியாலும், அவர்தம் துறைசார் விரிவுரையாளர்களதும் சமஸ்கிருதத்துறையினரதும் ஒத்துழைப்புடனும், துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்தினது வழிகாட்டலிலும் மாநாடு மேன்மை பெற்றிருந்தது.

### அம்பாளின் திருவருள்

"என் செயலாவது யாதொன்றும் இல்லை
நயினை அம்பாள் திருவருள் அன்றி
என நயினை அம்பாள்

மீது அதீத நம்பிக்கை கொண்டு அம்பாளின் திருவருளின் பயனாக இந்த மாநாடு வெகு சிறப்பாக நடைபெறுகிறது என பேராசிரியர் மா.வேதநாதன் தன் அக மகிழ்தலைக் கூறிவந்துள்ளார். இது அவர் தனது ஆத்மீக பலத்தில் நின்று இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார் என்பதைக் காட்டுவதாக உள்ளது.

இந்த வகையில் தமிழ் கூறும் நல்லுலகாய் எங்கும் வாழும் சைவத்தமிழர்கள் பேராசிரியரது இமாலய சாதனையைப் புகழ்ந்து போற்றித் தலைவணங்க வேண்டும்.

பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெற்றிருந்த இந்த 2ஆவது அனைத்துலக சைவமாநாடு ஏப்ரல் மாதம் 21ஆம், 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தது. வளாகமெங்கும் நந்திக் கொடிகள் காற்றில் அசைந்தாட, வாசல்தோறும் வாழை, மாவிலை தோரணங்கள் சித்தாந்தம் பேசின. மேதைகளின் உருவப்படங்கள் நுழைவாயிலின் இருமருங்கும் அலங்காரம் செய்ய மாக்கோலம் பூக்கோலம் கைலாசபதி கலையரங்க வாயிலை அலங்கரிக்க கம்பீரமாக மாநாட்டு வளவு காட்சியளிக்க 3நாள் மாநாடு முத்தாக நடைபெற்றிருந்தது.

முதல்நாள் வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று விருந்தினர்கள் மங்கல வாத்தியங்கள் முழங்க ஆலயத்திலிருந்து கைலாசபதி கலையரங்கு வரை அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர்கள் வரிசையில் துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.பி.சபாரட்ணம் கலைப்பீடாதிபதி, கலாநிதி க.சுதாகர் திருவாவடுதுறை ஆதீன சைவசிந்தாந்தப் பேராசிரியர் வீ.ஜெயபால், நல்லை ஆதீன குருமுதல்வர், சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள், மேனாள் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், சிவஸ்ரீ கோ.இ.பிரணதாத்தி ஹரக்குருக்கள், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலாநிதி கலைவாணி இராமநாதன், தமிழ் நாட்டு பேரூர் ஆதீன இளைய பட்டம் சீர்வளர் மருதாசல அடிகளார் முதலானோர் அழைத்துவரப்படிருந்தனர்.

### திருமுறை முழக்கம்

விருந்தினர்கள் அரங்கின் கண் மங்கல விளக்கேற்ற பேராசிரியர் க.நாகேஸ்வரனின் திருறை முழக்கத்துடன் முதல் நாள் மாநாடு ஆரம்பமாகி இருந்தது. ஆதார சுருதி உரையை முனைவர் எஸ்.பி.சபாரட்ணம் வழங்கியிருந்தார். இந்த உரையின் மூலம் ஆகமத்திலுள்ள அறிவியல் சிந்தனைகளை அள்ளி வழங்கி சைவத்தின் தொன்மையையும் அவர் எடுத்தியம்பி இருந்தார்.

முதல்நாள் அரங்கினை அதிர வைத்த கலை நிகழ்வாக "பல்லோரும் ஏத்தப் பணிந்து" எனும் நடன அளிக்கை இடம்பெற்றிருந்தது. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார், திருவாசகம் என்னும் தேன்அதை பருகுவோரை பக்தி வலைக்கு உட்படுத்தும் என்ற வாசகங்களைக் காதால் மட்டும் கேட்டவர்களுக்கு இவற்றை அனுபவித்துப் பார்க்கின்ற அற்புதமான வாய்ப்பை இந்த நடன அளிக்கை அரங்கின் கண்ணுள்ள அனைவருக்கும் அள்ளி வழங்கியிருந்தது. புதுவித பக்தி அனுபவத்தை கொடுத்திருந்தது.

அந்த வகையில் இந்த நடன அளிக்கையைத் தயார் செய்த பல்கலைக்கழக நடனத்துறையினரையும் அதில் பங்கு கொண்ட 15இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் பல்லாயிரம் தடவைகள் பாராட்டினும் தகும். இந்த நடனத்தின் அதி விசேட சிறப்பு யாதெனில் இரு இளைஞர்கள் பெண்பிள்ளைகளுடன் ஒன்றிணைந்து தாளம் பிசகாது. பாவம் மாறாது நடனம் புரிந்தமையே ஆகும்.

மாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்வுகள் ஆய்வரங்குகளாக இடம் பெற்றிருந்தன. இலக்கிய கலாநிதி மு.கந்தையா அரங்கு, சைவப்புலவர் கா.அருணாசல தேசிகர் அரங்கு, அச்சுவேலி குமார சுவாமிக் குருக்கள் அரங்கு, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கு என நான்கு அரங்குகளில் 22 அமர்வுகளாக 130 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஒருநாட்டின் மிகப் பெரும் சாதனையாக இவை பார்க்கப்பட்டன. இது தமிழ்நாட்டு அறிஞர்களால் போற்றிப் புகழப்பட்டிருந்தது. இந்தக் கட்டுரைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக மிகப் பெரிய மாநாட்டு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தின் இந்துநாகரித் துறையினரது வரலாற்றுச் சாதனையாக இந்த முயற்சி அனைவரது பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டுள்ளது.

அரங்கின் கண்ணிருந்த அனைத்து உள்ளங்களையும் கலைக்கயிற்றால் கட்டிப் போட்டிருந்த கலை நிகழ்வுகளாக "பண் சுமந்த பாடல்" இசை நிகழ்வு, "சிவயோக அசைவுகள்", "குருவருள் நல்கிய திருவருள் " முதலான நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன.

ஆய்வரங்கின் சிறப்புக்களில் ஒன்றாக இம் முறை மாணவர் ஆய்வரங்கு இடம்பெற்றிருந்தமை அனைவராலும் பாராட்டப்பட்டிருந்தது. வளர்ந்து வரும் இளம் ஆய்வாளர்களை உற்சாகப்படுத்தும் முகமாக இவ் அரங்கு ஏற் படுத்தப்பட்டிருந்தமை வரவேற்கத்தக்கது.

இத்தகைய ஆய்வரங்கின் கருப்பொருளாகவும் மாநாட்டின் கருப் பொருளாகவும் "சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும்" எனும் தொனிப்பொருள் அமைந்திருந்தது. இந்த மண்ணின் வாசனையினையும் அடுத்த சந்ததி அதன்படி வாழ வேண்டும் என்ற சைவ சான்றோரின் எதிர்பார்ப்பினையும் எடுத்துக் காட்டுவதாக மேற்போந்த பொருளுரு சிறப்பிற்றிருந்தது.

மாநாட்டின் 3ஆம் நாள் நிறைவு விழா இடம்பெற்றிருந்தது. இந்த மாநாடு தொடர்ந்தும் இந்த மண்ணில் ஆண்டு தோறும் நிகழ வேண்டும் என்ற ஆவலையும், பண்பாட்டு, பற்றுதலையும் அனைவரிடத்திலும் ஏற்படுத்தி இருந்தது. நிறைவு விழாவில் நல்லைக் குருமணியும், பிரமச்சரிய யாக்கிரத சைதன்ய சுவாமிகளும் கலந்து கொண்டு அருமையான ஆசிரியுரைகளை வழங்கியிருந்தனர். விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்த வேந்தர், துணை வேந்தர், பேராசிரியர்கள் அனைவருடைய கருத்தும் மாநாட்டு முயற்சிகளை ஏற்றிப் போற்றுவதாகவும், சைவசித்தாந்தம் தமிழர் தம் முதுசெம் இந்த மண்ணின் வாழ்வியல்நெறி என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்திருந்தன. மேற்படி கருத்துக்கள் மாநாட்டின் வெற்றியை பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

### மண்ணின் சைவ வாழ்வு

அந்த வகையில் இந்த மண்ணில் சைவவாழ்வு வாழ்ந்து சைவசித்தாந்தத்துக்கு அரும் பணி ஆற்றிவரும் பல அறிஞர் பெரு மக்களின் கௌரவிப்பு விழா இடம்பெற்றிருந்தமை மாநாட்டுக் கருப்பொருளுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்திருந்தது.

இந்த வகையில் சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள், மோகன்தாஸ் சுவாமிகள், ஆ.சபாரட்ணம், பண்டிதை பொன் பாக்கியம், சிவத்திரு செ. வினாசித்தம்பி, பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், சித்தாந்த ரத்தினம் சிவஸ்ரீசி. குமாரராஜகுருக்கள், வித்துவான் திருமதி வசந்தா வைத்திய நாதன், சைவப்புலவர் சு.செல்லத்துரை, வ.பேரின்பநாயகம், கலாபூசணம் இரா. திருஞானசம்பந்தன், சித்தாந்த ரத்தினம் ந.சிவபாலகணேசன், சிவமகாலிங்கம் ஆகியோர் கௌரவம் பெற்றிருந்தனர்.

அரங்கின் கண்ணிருந்த அனைத்து உள்ளங்களையும் கலைக்கயிற்றால் கட்டிப் போட்டிருந்த கலை நிகழ்வுகளாக "பண் சுமந்த பாடல்" இசை நிகழ்வு, "சிவயோக அசைவுகள்", "குருவருள் நல்கிய திருவருள்" முதலான நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன.

மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனின் ஏற்புரையுடனும் விரிவுரையாளர் சி.ரமணராஜாவின் நன்றியுரையுடனும்நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றிருந்தது.

இத்தகையதோர் பொருளுரையும் மாநாட்டு நிகழ்வு மீண்டும் எப்போது காட்சியுறும் என்ற தீராத ஆவலை மாநாட்டின் ஏற்பாட்டு முறைமையும், அதன் ஒழுங்கமைவும், நிகழ்வுகளின் தத்ரூபா வெளியும் அரங்கின் கண்ணிருந்தோர் மத்தியில் ஏற்படுத்தி இருந்தது என்பதில் ஐயமில்லை.





கட்டுரையாளர்: ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

# 2017 வைகாசி மாத பலன்

## மீனம்

பலவேளைகளில் சாதுவாக இருக்கும் நீங்கள் சண்டையென்று வந்து விட்டால் சட்டம் பேசுவீர்கள். உங்கள் தனபாக்யாதிபதியான செவ்வாய் பகவான் சாதகமாக இருப்பதால் எதிர்பார்த்த பணம் வரும். தைரியமாக புது முயற்சிகளில் இறங்குவீர்கள்.

அதிக கடன் வாங்கி தொழிலை விரிவுப்படுத்தவும் வாய்ப்பிருக்கிறது. குறைந்த வட்டியில் வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும். சகோதரங்கள் பக்கபலமாக இருப்பார்கள். சகோதரியின் திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள். புகழடைவீர்கள். புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த பகைமை நீங்கும். மாமா, அத்தை வகைகளில் உதவிகள் கிடைக்கும். மனைவிக்கு வேலைக் கிடைக்கும். மனைவி வழி உறவினர்களும் உதவுவார்கள். சுக்கிரன் சாதகமாக இருப்பதால் விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். தங்கம் சேரும். புது வடிவங்களில் நகை வாங்குவீர்கள். நவீன மின் சாதனங்கள் வாங்குவீர்கள். சமையலறையை நவீனப்படுத்துவீர்கள். உங்கள் ராசிநாதன் குருபகவானும் சாதகமாக இருப்பதால் தொட்ட காரியங்கள் துலங்கும். அரசால் ஆதாயம் உண்டு. குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலையும் அமையும். கோயில் பணிகளை முன்னின்று நடத்துவீர்கள். சிலர் குலதெய்வக் கோயிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்துவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் வீட்டு விசேடங்களையும் முன்னின்று நடத்துவீர்கள்.

கன்னிப் பெண்களே! உயர்கல்வியில் வெற்றி உண்டு. நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று சிலர் புது வேலையில் அமர்வீர்கள். பெற்றோருடனான மனத்தாங்கல் விலகும். திருமணம் கூடி வரும். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். புதுக் கிளைகள் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் செல்வாக்குக் கூடும். அதிகாரிகள் ஒத்தாசையாக இருப்பார்கள். சக ஊழி யர்களும் உங்களுக்கு சாதகமாக நடந்துக் கொள்வார்கள்.

கலைத்துறையினரே! யதார்த்தமான சிந்தனைகளாலும், படைப்புகளாலும் புகழடைவீர்கள். பணவரவு அதிகரிக்கும். நீண்ட நாள் கனவுகள் நனவாகும் மாதமிது.

## வரலாற்றில் இன்றைய தினம்

1487-அயர்லாந்து டப்ளினில் கிறிஸ்தவ தேவாலயத்தில் 10 வயது லம்பேட் சிம்னல், ஆறாம் எட்வட் அரசராக முடிசூடப்பட்டார்.

1832 -லண்டன் மாநாட்டில் முதலாவது கிரேக்க இராஜ்ஜியம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1844-முதலாவது தந்தி வழிப்பாதையை தொடங்கும் முகமாக, சாமுவல் மோஸால் வட்ஹத் கோட்றோட் எனும் விவிலிய வாசகம் அமெரிக்க தலைநகரிலிருந்த அவரது உதவியாளர் மேரிலான்ட் பால்ரி மோரிலுள்ள அல்பிரட் வெய்ல்க்கு அனுப்பப்பட்டது.

1883 -நியூயோர்க் நகரில் 14 ஆண்டுகளாகக் கட்டப்பட்ட புரூக்லின் பாலம் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்பட்டது.

1895-நைற் பட்டம் பெற்ற முதலாவது அரங்கச் செயற்பாட்டாளர் ஆனாத்ஹென்றி இர்சிங்

1915-முதலாவது உலக மகாபோர் ஒஸ்ரியா ஹங்கேரியாமீது போர்ப் பிரகடனம் செய்தது.

1961-ஐரோப்பிய கவுன்சிலில் சைப்பிரஸ் இணைந்தது

1962 -மேர் கூரி திட்டம் அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்கொட் காப்பென்ரர் அரோரா விண் ஓடத்தில் புவியை மூன்று தடவை சுற்றி வந்தார்.

1967 -இஸ்ரேலின் செங்கடல் பகுதியை எகிப்து முற்றுகையிட்டு தடைசெய்தது

1982-ஈரான் ஈராக்கிய போரின்போது ஈரானியர்களால் கொறம்ஷார் துறைமுகநகர் ஈராக்கிடமிருந்து மீளக் கைப்பற்றப்பட்டது.

1991 -எதியோப்பிய யூதர்களை இஸ்ரேலுக்குக் கிளம்பச்செய்யும் சொலொமன் நடவடிக்கை (ஒப்பரேஷன் சொலன்) இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்டது.

1992-ஜனநாயகத்துக்கான ஆர்ப்பாட்டத்தை அடுத்து தாய்லாந்தின் கடைசி சர்வாதிகாரி ஜெனரல் சுசிந்தா க்ரப்ரயூன பதவியை விட்டு விலகினார்

1992-சேர்பிய இராணுவம் மற்றும் பொலிஸ்படைகள் நகரில் உள்நுழைந்ததையடுத்து கொஸாரக், பொஸ்னியா மற்றம் ஹெர்ஷெகோவினர் ஆகிய இடங்களில் இனச் சுத்திகரிப்பு தொடங்கியது.

1993-எதியோப்பியாவிடமிருந்து எரித்திரியா சுதந்திரம் பெற்றது.

1994-1993இல் நியுயோர்க் உலக வர்த்தக மையத்திடம் பெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு பேருக்கு 240 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1999-வவுனியா நகரில் பெரும் தேடுதல் நடவடிக்கையில் சகலரும் பொது மைதானத்துக்கு அழைக்கப்பட்டுத் தீவிர சோதனை

2000 -வடக்கு லெபனானிலிருந்து 22 ஆண்டுகள் நிலைகொண்ட இஸ்ரேலிய துடுப்புக்கள் மீளப் பெறப்பட்டன.

2002 -மொஸ்கோ ஒப்பந்தத்தில் ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஒப்பமிட்டன.

### நாளை

**வைகாசி-11**
வியாழக்கிழமை -25.05.2017
திதி: அமாவாசை பி.இ.02.09
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ.01.00
சுபநேரம்:07.22-08.52 வரை
ராகுகாலம்:01.22-02.52 வரை
அமாவாசை விரதம், கார்த்திகை விரதம்





## பர்வதா கீர்த்தனாலயத்தின் 35ஆவது ஆண்டு விழா

நாவலப்பிட்டி கலாசூரி திருமதி சிவாந்தி இராமமூர்த்தியின் பர்வதா கீர்த்தனா லயத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் முதலாம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகப் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக முதுநிலை விரிவுரையாளர் திருமதி சோபனாதேவி இராஜேந்திரனும் கலந்து கொண்டனர்.

இதன்போது முதன்மை விருந்தினருக்கு நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், புரவலர் காந்தாவும் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவித்தனர்.

## சற்சொரூபவதி என்னும் ஒலிபரப்பு ஆளுமை




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நீண்டகாலம் (45 வருடங்கள்) பணிபுரிந்த மூத்த ஒலிபரப்பாளர் சற்சொரூபவதி நாதன் கடந்த 4 ஆம் திகதி வியாழனன்று காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ந்து போகாத நேயர்கள் இல்லை என்றே சொல்லலாம்.

இலங்கை வானொலி, செய்திகள் வாசிப்பது சற்சொரூபவதி நாதன்" என்று ஒலித்த மணிக் குரலை எவருமே மறந்திருக்க முடியாது.

தரம் ஒன்று செய்திவாசிப்பாளரான அவர் சென்னையில் படித்து விஞ்ஞானப் பட்டதாரியானவர் கல்வியில் ஜவர்கர்லால் நேரு விருதை நேருவிடமிருந்தே பெற்ற அதிர்ஷ்டசாலி இலங்கைக்குத் திரும்பிய சற்சொரூபவதி வானொலி நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். "சானா" என்ற சண்முகநாதனின் "லண்டன் கந்தையா" என்ற பிரபலமான தொடர் நர்டகத்தில் நடித்தார். அருளம்மா என்ற பாத்திரத்தில் நடித்தார் லண்டன் கந்தையா ஒலிபரப்பாகிய காலத்தில் நேயர்களை வானொலிப் பெட்டியோடு காணமுடியும். தொடர்நாடகத்தில் சானாவின் நகைச்சுவையை எவருமே மறந்திருக்கமாட்டார்கள்.

1965 இல் இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராக இணைந்த அவர் பின்னர் முழுநேர அறிவிப்பாளரானார். ஞானவாசல், சமய நெறி, கலைக்கோலம் போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்தார்.

நான் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் விஞ்ஞானக்குழுவில் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களுக்கான விஞ்ஞான பாட ஒலிபரப்பையும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பவேண்டியிருந்தது. அப்போது கல்விச் சேவையின் தயாரிப்பாளராக சற்சொரூபதியை நான் சந்தித்தேன்.




பின்னர் எமது குழுவுக்கும் கல்விச் சேவைக் குழுவுக்குமிடையில் பலகலந்துரையாடல் நடைபெற்று, ஒலிப்பதிவுத் தினங்கள் தீர்மானிக்கப்பட்டன.

அவர் ஒலிப்பதிவு நாளில் குறிப்பிட்ட நேரத்தில் கலையகத்தை ஒழுங்கு செய்து வைத்திருப்பார். நாம் சென்றவுடன், ஒலிவாங்கியின் இரு பக்கங்களிலும் உட்கார்ந்து கொண்டு, எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டுமென்பதைப் பேசிப்பார்த்துத் தீர்மானித்துக் கொள்வோம். பின்னர் அரைமணிநேர ஒலிப்பதிவு நடக்கும். சற்சொரூபவதியின் மறைவு ஒலிபரப்புத் துறைக்கும் அவரோடு பழகியவர்களுக்கும், உலகம் முழுவதும் பரவியிருக்கும் அவரது நேயர்களுக்கும் பேரிழிப்பாகும். அவரோடு பழகிய நாள்களை பழகிய விதங்களை ஒரு முறை மீட்டுப் பார்க்க வைத்த இழப்பாகும். சற்சொரூபவதியின் நாமம் அவரோடு பழகியவர்களின் மனத்திலும் அவரது நேயர்களின் மனத்திலும் என்றும் நிலைத்து நீடு வாழும்!.

இர.சந்திரசேகர சர்மா

## முஸ்லிம்களுக்கு...

கொள்ளுமாறு. முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு கோரியுள்ளது. இரு வாரங்களாக முஸ்லிம்களுக்கு எதிராகப் பலதரப்பட்ட தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. இதுவரை 21சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. பள்ளிவாசல் மீதும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு நாளை வியாழக்கிழமை அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், நிர்வாகங் கள் மற்றும் வர்த்தகர்கள் தமது கடமையில் இருந்து விலகி முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-5)

## சிறுபான்மையினர்...

எதிராக அரசு உரிய சட்ட நடவடிக்கையைத் துரிதமாக எடுக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சிகள் வலியுறுத்தின.

சிறுபான்மையினருக்கு எதிராக தலைதூக்கியுள்ள அடக்குமுறைச் செயற்பாடுகள் தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோர் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

சம்பந்தன்

"இனம் எதுவாக இருந்தாலும், மதம் எதுவாக இருந்தாலும் அமைதியாக வாழவே மக்கள் விரும்புகின்றனர். இந்தநிலையில், சிறுபான்மை இனங்களை அச்சுறுத்தும் வகையில் குழுவொன்று செயற்பட்டு வருகின்றது. இவ்விதமான நிலமைகள் தொடர்வதற்கு இடமளிக்கமுடியாது. தனியார் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன. தகாத வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த நாட்டில் அமைதியாக வாழமுடியுமா? என்ற அச்சம் உருவாக்கப்பட்டுள்ளது. இதை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். கடந்த கால கசப்பான சம்பவங்கள் மீண்டும் தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது. எனவே, அனைவரும் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்.

ஹக்கீம்

"முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த சில நாள் களில் பெரியளவிலான அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இது பற்றிச் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை. அத்துடன், அரச தலைவரின் மாவட்டத்திலேயே முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரும் அசமந்தமாகவே செயற்பட்டனர். எனவே, உரிய வகையில் இந்தக் குழுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

"வடக்கிலும், தெற்கிலும் இனவாதிகள் இருக்கின்றனர். இவர்கள் எல்லாமே மச்சான்மார்கள். எனவே, விளையாட வேண்டாமென இனவாதிகளுக்குக் கூறிக்கொள்கின்றேன். அரச பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளது. எனவே, இனவாதிகளுக்கு இடமளிக்கமுடியாது. இது விடயம் தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சர் துரித நடவடிக்கைகளை எடுப்பார் என உறுதியாக நம்புகின்றேன். இது பற்றி அமைச் சரவையிலும் பேசப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கச் செய்வதற்கான சூழ்ச்சியாகவே இப்படியான செயல்கள் நடக்கின்றன." என்று அமைச்சர் மனோ கணேசன் கூறினார்.

(வ-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின். உப அதிபரும், ஆரம்பப்பிரிவு ஆசிரியையும் எனது நண்பியுமாகிய திருமதி கணேசன் விமலாதேவி அவர்களின் அன்புக் கணவராகிய சித்தன்கேணியைச் சேர்ந்த மைந்தர்

**உயர்திரு.வேலுப்பிள்ளை கணேசன்**
**(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

அவர்கள் 18.05.2017 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை அனைத்துப் பிரதேச மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன் சேவை சிறக்க மனநிறைவுடன் எல்லாம் வல்ல இறைபரம் பொருளின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**

ஓய்வுநிலை அதிபர் - செல்வி ஜெயராணி நாகலிங்கம்,
திரு.திருமதி தனேஸ்வரலிங்கம் குடும்பம்,
செல்வி விஜயராணி நாகலிங்கம்.

# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

**தவிசாளர் பெறுகைக் குழுமாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்கஅதிபர் / மாவட்டச் செயலரால் மருதங்கேணி பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம், சுற்றுமதில், நீர்த்தாங்கி, பொது மலசலகூட நிர்மாண வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. பொது நிதிச்சுற்றறிக்கை: 4/2016 இற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது வடமாகாணத்துக்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடப்படாததுமான் கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 25.05.2017 தொடக்கம் காலை 9.00மணியிலிருந்து பிற்பகல் 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் **நிர்வாகக்கிளை, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 222 2233, 021 222 2234 நீடிப்பு : 111)** எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை **நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 25.05.2017 முதல் 14.06.2017 வரைகாலை 9.00மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையாக கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
6. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 15.06.2017 திகதியன்று பி.ப2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல்வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர்.மற்றும் கேள்வி இலக்கத்தைத் தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள்அல்லதுபிரதிநிதிகளின் முன்னிலையில் 15.06.2017ந்திகதிபி.ப 3.00மணிக்குதிறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதிதனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விகளைஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும்பெறுகைச்சபையின் இறுதித்தீர்மானத்திற்கு அமைவானதாகும்
8. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவிலைக்கூறல் பிணையானதுகேள்விப்பத்திரம்திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும்கேள்விப்பிணைபொறுப்பு120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்
9. Prebid Meeting06.06.2017 காலை 10.00மணிக்கு நடைபெறும்

| கேள்வி இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/DCA/ E.C.C/ MA/01/01 /2017 | மருதங்கேணி பிரதேசசெயலக கலாசாரமத்திய நிலைய நிர்மாணம் | 19.0 | 06 | C6 | 190,000.00 | 3500/- |
| JF/DCA/ E.C.C/ MA/01/02 /2017 | மருதங்கேணிபிரதேச செயலக கலாசாரமத்திய நிலைய சுற்று மதில், குழாய்க் கிணறு, நீர்த்தாங்கி பொதுமலசல கூடநிர்மாணம் | 5.57 | 03 | C7 | 56,000.00 | 2500/- |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(c/29895)(11)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
15
01
1932



ஆண்டவன் அடியில்
04
06
2016

## திருமதி. திலகவதி விநாயகமூர்த்தி

**திதி. 24.05.2017**

**எங்கள் அன்பு அம்மாவே!**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் எத்தனை துன்பங்கள் வந்த போதும் தளராது எம்மைப் பேணி பாதுகாத்து வளர்த்து நல்வழிகாட்டி இப்புவியில் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை நல்வழிப்படுத்திய எங்கள் அன்புத் தெய்வமே!

அம்மா எனும் வார்த்தைக்கு இலக்கணமாக வாழ்ந்தவளே! இன்னும் சிலகாலம் நீங்கள் எங்களுடன் வாழ்ந்திருக்கலாம் அம்மா. நீங்கள் இறைபதம் அடைந்து ஓராண்டு சென்றுவிட்டதம்மா. ஆனாலும் நீங்கள் எங்களைவிட்டு எங்கும் செல்லவில்லையம்மா. எங்கள் இதயங்களில் ஒவ்வொரு கணமும் வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கின்றீர்கள் அம்மா! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகளை சுமந்து வாழ்வோமம்மா.

உங்களது ஆத்மா இறைபதம் அடைந்திட நாங்கள் தினமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள்:- கமலன், வசந்தன், பரா, பாபூ**
**மருமக்கள்:- சுதாகர், கௌரி, சுகுணா மற்றும் பேரப்பிள்ளைகள்**

"திலகஸ்தான்" துன்னாலை கிழக்கு, கரவெட்டி.

## மரண அறிவித்தல்



பிறப்பு 21 . 12 . 1921 — இறப்பு 22 . 05 . 2017

### திருமதி பொற்கொடி செல்லத்துரை

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மலேசியா, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொற்கொடி செல்லத்துரை 22.05.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து செல்லத்துரையின் பாசமிகு மனைவியும், சிவானந்தன் (கனடா), பரஞ்சோதி (கனடா), சேதுபதி, குருபாதம் (கனடா), ஜெயசோதி (கொழும்பு), செல்வசோதி (கனடா), கமலாசனி (அராலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜகுலேந்திரன் (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர் - அராலி தெற்கு), காலஞ்சென்ற திருமதி கோசலா (கனடா) மற்றும் மகாராணி (கனடா), ஜெயதேவி (கனடா), சந்திராதேவி (கனடா), முகுந்தாதேவி (கொழும்பு), சுதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜீவகன், ரட்சகன் (ஜேர்மனி), காலஞ்சென்ற வாசுகன் மற்றும் சுபாஷகன் (பின்லாந்து), சங்கீதா (வவுனியா), கபிலன் (வவுனியா), சோபனா (கனடா), கோகுலன் (கனடா), அகிலன் (கனடா), விமலன் (கனடா), ராகுலன் (கனடா), ஆதித்தன் (லண்டன்), அபிஜித்தன் (சிங்கப்பூர்), கவிதா (வடலியடைப்பு), மைதிலி (ஜேர்மனி), சஞ்சய் (கனடா), இஷானி (கனடா), எலிசபெத் (கனடா), தப்பாசியா (கனடா), மோனிக்கா ஷரைல் (சிங்கப்பூர்), குஜா ஆதித்தன் (லண்டன்), துளசி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வித்தியாலக்சுமி (கனடா), வருண் (கனடா), மாதுளா (வடலியடைப்பு), மஞ்சரி (வடலியடைப்பு), தேஜாசிறீ (வவுனியா), அங்கஜன் (வவுனியா), அனஞ்ஜயன் (வவுனியா), விதுரன் (ஜேர்மனி), ஆதிரை (ஜேர்மனி), சித்தாரா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிப் பிரார்த்தனைகள் அவரின் அராலி தெற்கு, வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்திலும் தகனக்கிரியைகள் கனடாவிலும் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி.இராஜகுலேந்திரன் (மருமகன்)
இ.கமலாசனி (மகள்)

அராலி தெற்கு.

**021 205 1429, 077 616 4191**

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேச சபை உபஅலுவலகம், ஏழாலை வட்டாரம் -03 புளியங்கிணத்தடி புன்னாலைக்கட்டுவன் வீதி

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட ஏழாலை தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியில் வட்டாரம் - 03, புளியங்கிணத்தடி புன்னாலைக்கட்டுவன் வீதியில் உள்ள ஆதனமானது எமது வரிப் பதிவேட்டில் முன்பு பதியப்படவில்லை.

ஏழாலை தெற்கு J/203 கிராமசேவகர் பிரிவு, ஏழாலை இறை "உயிலடிக்கலட்டி" நிலப்பரப்பு 04 குழி 7.9 உம் கடைக்கட்டடமும் தெற்கெல்லையிலுள்ள கிணற்றிலரைவாசியும் கொண்ட 1862 ஆம் இலக்க 10.07.2016 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ஜெ.ஜெயரூபன் எழுதிய அறுதி உறுதி மூலம் தவராசா ஹிமாலுக்கு வந்தடைந்த ஆதனத்தினை தவராசா ஹிமால் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பித்துள்ளார்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராசா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1218 ஆம் இலக்க வரைபடத்தில் ஏழாலை இறை. உயிலடிக் கலட்டி நில.பர.04, குளி 07.9 உம் கடைக்கட்டடமும் அதற்குரியவைகளும் தெற்கெல்லையில் லொட் - 02 எனச் சுட்டப்பட்ட அரைவாசிக்கிணறும் அதற்குரியவைகளும் எனும் ஆதனமானது 2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு. கதிர்காமநாதன் எழுதிய 9017 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் எமலியானுஸ்பிள்ளை அன்ரனி ஜெயரத்தினம் என்பவரினால் இவ் ஆதனமானது கொள்வனவு செய்யப்பட்டது என்றும் அது பற்றி ஆவணம் மூலம் எழுதிக் கொண்டும் கூட ஏற்பட்ட நாட்டு நிலைமைகள் காரணமாக அது தற்போது சிதைந்து போயுள்ளது என்றும் ஆயினும் ஒழுங்கைப் பக்கத்தில் ஒரு பலசரக்குக் கடையினை ஸ்தாபித்து தொழில் நடாத்தி பின்னர் அதனைத் தொலைத் தொடர்பு நிலையமாக மாற்றி வாடகைக்கு கொடுத்துள்ளேன் என்றும் தெற்கெல்லையிலுள்ள அரைவாசிக்கிணறு மூலம் பயிர் வகைகளைப் பேணி பயன்பெற்று வருகின்றேன் எனவும் இற்றை நாள் வரையான எனது ஆட்சியில் எதுவித கேள்வி தடை குறுக்கீடு எதுவும் இல்லையென்றும் நிலையான பிரசித்தமான ஆட்சி எனது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் எழுதிய 9018 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் எமலியானுஸ்பிள்ளை அன்ரனி ஜெயரத்தினம் என்பவரினால் யோகநாதன் கைம்பெண் அழகேஸ்வரி என்பவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் ரகுபதி எழுதிய 47 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் யோகநாதன் கைம்பெண் அழகேஸ்வரி என்பவரால் கஜேந்திரன் பெண் விஜிதா என்பவரிற்கு சீதனமாக வழங்கப்பட்டு அதன் பின்னர் கஜேந்திரன் பெண் விஜிதா என்பவரால் தவராசா ஹிமாஸ் என்பவரிற்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த ஆதனத்தை தற்போதைய உரிமையாளர் தவராசா ஹிமால் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தவராசா ஹிமால் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

24.05.2017
திகதி

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் வணிகத்துறை
சிரேஷ்ட ஆசிரியர்
**சி.சிவராஜா**
அவர்களின் அன்புத் தாயார்
**சிவக்கொழுந்து சிவப்பர்**
அவர்களின் மறைவையொட்டி
அன்னாரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## மரண அறிவித்தல்



பிறப்பு 19 . 09 . 1920 — இறப்பு 21 . 05 . 2017

### சின்னத்தம்பி குமாரசாமி

(உரிமையாளர் - சிவசுப்பிரமணியம் பேக்கரி)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமாரசாமி (உரிமையாளர்- சிவசுப்பிரமணியம் பேக்கரி) 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2017) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மனோன் இல்லம்"
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

தகவல்
மகன் - கு.குணறட்ணம்
(பிள்ளைகள்)

## முதலாம் ஆண்டு நினைவு



அமரர் சிவபாலன்
மகிந்தன்

அன்னைமடியில்
12.08.1999

ஆண்டவன் அடியில்
04.06.2016

திதி: சதுர்த்தசி (24.05.2017)

எம் உயிரின் பாதி உன்னுடன் உதிர்ந்தது
ஓர் ஆண்டுகள் அகன்றாலும் ஆருயிர் தம்பியே....
நீர் தந்த அன்பின் நிழலில் வாழும் உன்......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(Cs/4163(13)

சங்கானை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவு



அமரர்
**கனகரத்தினம் செல்வராசா**
(முன்னாள் பிரபல வர்த்தகர், மாத்தறை)

மலர்வு 25.05.1931 — உதிர்வு 26.05.2014

திதி: தேய்பிறை திரயோதசி (24.05.2017)

எம்மை விட்டுப் பிரிந்து மூன்றாண்டு
கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
என்றும் எம் மனதில் அணையாத ஒளிவிளக்காக
வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 7 பிள்ளைகளின்...

காத்திருந்த 7 பிள்ளைகளின் தாய்க்கு அவரது மகனின் புத்தம் புதிய மோட்டார் சைக்கிளே எமனாக மாறிய சம்பவம் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்குக்கு அண்மையில் நேற்று இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் ரம்பை (வயது 51) என்ற 7 பிள்ளைகளின் தாயாரே விபத்தில் உயிரிழந்தவராவர்.

"யாழ்ப்பாணத்தில் உறவினர் ஒருவரின் இறப்பு வீட்டுக்குச் செல்வதற்காக குடும்பப் பெண் காலை 8 மணியளவில் பேருந்துக்காக புங்குடுதீவு அம்பலவாணர் அரங்குக்கு அண்மையில் இருந்த சிமெந்துக் கட்டு மேல் உட்கார்ந்துள்ளார். அந்தவேளை அந்தப் பெண் இருந்த கட்டுக்கு நேர் எதிராக இருந்த ஒழுங்கையின் ஊடாக அவரின் மகன் மோட்டார் சைக்கிளில் முதன்மை வீதியில் வந்து ஏறியுள்ளார். முதன்மை வீதியால் பயணித்த முச்சக்கர வண்டியும் அவரின் மோட்டார் சைக்கிளும்மோதுண்டுவிபத்துக்குள்ளாகின. விபத்தால் நிலைகுலைந்த முச்சக்கரவண்டி மதிலில் உட்காருந்திருந்த பெண்ணின் மீது மோதுண்டது.

விபத்தில் படுகாயமடைந்த குடும்பப் பெண் உடனடியாக புங்குடுதீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது, அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ சோதனையில் உறுதிப்படுத்தப்பபட்டது" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார், உயிரிழந்த பெண்ணின் மகனையும், முச்சக்கர வண்டிச் சாரதியையும் கைது செய்தனர்.

"விபத்தில் சிக்கிய மோட்டர் சைக்கிள் புதியது. அதற்கான இலக்கத்தகடுகூட வழங்கப்படவில்லை. மோட்டர் சைக்கிளைச் செலுத்தியவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-8)

## அலைபேசியில்...

கொண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே அவர் தொடருந்துடன் மோதுண்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று மதியம் 1.30 மணியளவில் பயணித்த தொடருந்து கச்சார் வெளியூடாகப் பயணித்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த மேற்படி நபர் தொடருந்துப் பாதையைக் கடக்க முற்பட்டபோது, தொடருந்துடன் மோதுண்டார். அவர் அலைபேசியில் உரையாடிக் கொண்டு வந்தார். அதனால் தொடருந்து வருவதை அவர் அவதானிக்கத் தவறிவிட்டார்" என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த கணபதிப்பிள்ளை முரளிதரன் (வயது28) என்பவர் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (வ-த-ய-86)

**தேவை**
கொழும்பில் தங்கி பணிபுரிவதற்கு
அலுவலக உதவியாளர்.
வீட்டுப் பணிப்பெண் தேவை.
070 222 2080

**வாடகை/ விற்பனை**
30 மீற்றர் தூரம் கந்தசாமி கோயில் வீதியில் அமைந்துள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும். கடையின் நீளம் 70அடி அகலம் 16 அடி இதை விட இரண்டு கடைகள் விற்பனைக்கும் உண்டு.
நீளம் 70 அடி அகலம் 16 அடி
077 434 0246

## தமிழ், முஸ்லிம்...

நிறுவனங்கள் நேற்று அதிகாலை தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன.

சிறுபான்மையினருக்கு எதிரான 11 தாக்குதல் சம்பவங்கள் கடந்த 10 தினங்களுக்குள் பதிவாகியுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 1 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 4 மாடிகளைக் கொண்ட ஹாட்வெயர் கடையும், தமிழ் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான சில்லறை வர்த்தக நிலையமுமே தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறுபான்மையினரை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவருகின்றன. சிங்கள பௌத்த அமைப்பான பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர், சிறுபான்மையினருக்கு எதிராகக் கருத்துக்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றார். அதி உச்சபட்சமாக, மனோ கணேசனின் அமைச்சுக்குள் புகுந்து, இது சிங்கள பௌத்த நாடு என்று தெரிவித்திருந்தார். அத்துடன் இனக் குரோதத்தை ஏற்படுத்தும் கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்துச் செல்கின்றன.

இதுவரை பதிவாகியுள்ள சம்பவங்கள் வருமாறு, கொட்டாபிட்டியாவில், முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான கடை மீது ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி பெற்றோல் குண்டு வீசப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் மாயக்கல்லி மலையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணியை அடாவடியாகப் பிடித்து, அதனுள் பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் பிரவேசித்திருந்தார். இந்தச் சம்பவம் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

பொலநறுவை மாவட்டத்தின் ஒநேகம பிரதேசத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களின் வசிப்பிடங்களுக்கு, ஞானசார தேரர் தலைமையிலான பிக்குகள் அத்துமீறிப் பிரவேசித்து அந்த மக்களின் சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் கடந்த 14 ஆம் திகதி பதிவாகியுள்ளது.

திருகோணமலை செல்வநகரில் கடந்த 15 ஆம் திகதி முஸ்லிம் மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். 6 ஏக்கரில் அங்கு விகாரை அமைந்திருந்தது. அந்த விகாரை 49 ஏக்கரில் அமைந்திருந்ததாகக் கூறி, முஸ்லிம் மக்களின் காணிகளைப் பறிக்க முற்பட்டனர்.

அதே தினத்தில் பாணந்துறையில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கொக்கிலவத்த இப்பராஹிம் ஜும்மா பள்ளிவாசல் மீது இனந்தெரியாத நபர்கள் இதே தினத்தில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கொக்கிலவத்த பள்ளிவாசல் மீது மீண்டும் கடந்த 16 ஆம் திகதி குழு ஒன்றினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான இரண்டு வர்த்தக நிலையங்கள் மீது பாணந்துறையில் கடந்த 17 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வென்னப்புவவில் முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான மின்சாரப் பாவனைப் பொருள்கள் வர்த்தக நிலையம் பெற்றோல் குண்டு வீசி 18 ஆம் திகதி தாக்கப்பட்டுள்ளது.

குருநாகல் பள்ளி வாசல் மீது 21 ஆம் திகதி அதிகாலையில் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதே தினத்தில் எல்பிட்டியவில் முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான அழகுசாதன பொருள் விற்பனை நிலையம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

மகரகம, விஜயராம சந்தியில் அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான தோல் விற்பனை நிலையம் தீயினால் நேற்று முன்தினம் திங்கள்கிழமை எரிந்து சாம்பராகியுள்ளது. (த-5)

## கேரளக்...

இராணுவம் முகாம் ஒன்றில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் தனது சொந்த ஊரான மதவாச்சி நோக்கி நேற்றுமுன்தினம் பேருந்தில் பயணித்துள்ளார். இவரிடம் இருந்து 50கிராம் 200 மில்லிகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் மேலும் கூறினர். (த-10)

## குரோத...

இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனா மக்குலே, இது தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறியுள்ளதாவது,

குரோத உணர்வைத் தூண்டும் வகையில் செயற் படுவோர், வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த வாரம் பன்னாட்டு வெசாக் தினம் இலங்கையில் கொண்டாடப்பட்டது. இந்த வாரம் புத்தரின் கொள்கைகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன. குரோதத்தை விதைப்போருக்கு எதிராக அரசும் நாட்டு மக்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (த-5)

## முழு அதிகாரப்...

தொடர்பாக இடைக்கால அறிக்கையில் உள்ள விடயங்கள் வரிக்கு வரி இன்றைய தினம் ஆராயப்பட்டு இறுதி செய்யப்படவுள்ளன.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது நிலைப்பாட்டை அறிவித்தது. முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு இணங்குவதாக அந்தக் கட்சி தெரிவித்தது. ஏற்கனவே இணங்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால வரைவுடன் தாம் ஒத்துப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும் முழுமையான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியுள்ளன. அத்துடன் புதிய அரசமைப்பு உருவாக்க விடயம் இந்த ஆண்டு இறுதிக்குள் முற்றுப் பெறவேண்டும் என்றும் அந்தக் கட்சிகள் இறுக்கமாகத் தெரிவித்துள்ளன. இதேவேளை, நேற்றைய கூட்டத்தின்போது, ஜாதிக ஹெல உறுமய தமது நிலைப்பாட்டை எழுத்தில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (த-5)


### மூன்றாவது சர்வதேச யோகா தினம்

மூன்றாவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யோகாசனப் பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவப் பிரிவில் இன்று (24.05.2017) புதன்கிழமை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது. இந்திய கலாசார நிலையம் - கொழும்பு, அஸ்டாங்கயோக மந்திர- கொழும்பு , சித்தமருத்துவப் பிரிவு, கைதடி, வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், மனிதவள மேம்பாட்டு நிறுவனம் - கொழும்பு என்பனை இணைந்து நடத்தும் இந்நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளுவதுடன் துறைசார் வளவாளர்கள் பலர் கருத்துரை வழங்கவும் உள்ளனர். ஆர்வலர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறமுடியும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(AJA/IN/2177)(11)

### காணி விற்பனைக்குண்டு

பலாலி வீதி, கந்தர்மடத்தில்
6 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
(நீளம் 120 அடி, அகலம் 120 அடி) வியாபார கட்டடங்களிற்கு மிக உகந்தது.
தொடர்பு - 077 3611 282

### வேலையாள்கள் தேவை

கொழும்பு நகரில் தங்கிநின்று
வேலைசெய்வதற்கு பெயின்ரர்கள்,
உதவியாளர்கள் தேவை.
தொடர்பு - 077 470 7511

### நினைவஞ்சலிகள்

15 ஆம் ஆண்டு



தோற்றம் 31.09.1923
மறைவு 13.05.2002

அமரர் தம்பையா கணபதிப்பிள்ளை
எரிபொருள் நிலைய முகாமையாளர்
புலோலி ப.நோ.கூ.சங்கம்

9 ஆம் ஆண்டு



தோற்றம் 05.04.1924
மறைவு 23.05.2008

அமரர் பொன்னம்மா கணபதிப்பிள்ளை

அன்புக்கு இலக்கணமாய் எங்கள் அப்பா ! ஆறுதலின் சிகரமாய் எங்கள் அம்மா !!
பண்பின் இருப்பிடமாய் இருவரும் வாழ்ந்தீர் !!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
புற்றளை விநாயகனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மாவில் வீதி,
புற்றளை - புலோலி.

குடும்பத்தினர்.
077 500 2162

### தேவை

3 கீயுப் டிப்பர் வாகனம்
விலைக்குத் தேவை.
075 656 3907

### Sb Travels & Tours pvt Ltd.

**இங்கு சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**

இந்தியாவிற்கான விமான பயணசீட்டுக்களை சென்னை Srilankan Airlines 27,999/= Air India 29,000/= இற்கும் மதுரை Srilankan Airlines 30,500/= திருச்சி Srilankan Airlines 31,800/= (30th June before) அத்துடன் வீசா விண்ணப்பப்படிவமும் நிரப்பித்தரப்படும். மற்றும் மலேசியா, பாங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களையும் செய்து தரப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்குமான வீசா ஆலோசனைகளும் விசேட விலைக்கழிவுகளும் வழங்கப்படுகின்றன. (பிரயாணக் காப்புறுதி, திகதி மாற்றம், சுற்றுலா ஒழுங்கமைப்புக்கள், ஹோட்டல் முன்னேற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்)

BUDJECT AIRLINES SPICEJET, AIR ASIA, FLY DUBAI, AIR ARABIA ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணங்களில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்.

Sb Travels and Tours No. 212, Kasthuriyar Road, Jaffna.
021 222 9555, 222 8555/ 076 6911080/83
Branch No. 166, Temple Road, Nallur, Jaffna. 021 222 7666, 076 691 1081/82 அத்துடன் இங்கு AIR TICKETTING ACADEMY வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு. 021 222 7111, 222 7666
Sb Travels and Tours,
No. 216, Kasthuriyar Road, Jaffna.

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### Manipay Hindu College (National School) MK Singham Scholarship

Mr. M. Kumarasingham was an old boy of Manipay Hindu College. His five sons, namely: Dr. K. Jeyasingham

Mr. K. Gunasingham
Dr. K. Balasingham
Mr. K. Dharmasingham and
Mr. K. Pathmasingham

Who are also old boys of Manipay Hindu College have jointly set up a scholarship, in memory of their late father, Mr. Kumarasinghm who was popularly known as MKSingham. All five sons received their foundation education at Manipay Hindu College before going onto achieve higher goals and are offering this scholarship in appreciation of the services provided by Manipay Hindu College.

The scholarship is offered to the best performing science student at Manipay Hindu College who achieves the highest grade in Advanced Level examinations conducted by the Department of Education, Sri Lanka and gains entry to an university in Sri Lanka. The scholarship amount is SLR 100,000 (Hundred Thousand Rupees) and it will be one in each calendar year. The student should have completed the whole of the 2 years advanced level education at Manipay Hindu College. The successful candidate will be selected by the Principal and science teachers rsponsible for the student.

This year MK Singham Scholarship will be awarded to Mr. Amirthalingam Nithursan who studied at Manipay Hindu College G.C.E ( A/L) -2015 batch and got 3As and entered the faculty of engineering, University of Moratuwa.

\- Principal -

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | | 4 | | | 3 | |
| | | | | | 2 | 5 | 1 | 4 |
| | | 3 | 5 | | | | 8 | |
| | | | | | 5 | 8 | | 9 |
| | 5 | | | | | | 4 | |
| 9 | | 8 | 1 | | | | | |
| | | | | | 7 | 6 | | |
| 1 | 3 | 2 | 8 | | | | | |
| | 6 | | | 2 | | | | 8 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியவிவி சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 2 | 8 | 9 | 5 | 3 | 1 |
| 5 | 3 | 2 | 7 | 1 | 6 | 8 | 4 | 9 |
| 8 | 1 | 9 | 5 | 3 | 4 | 7 | 2 | 6 |
| 1 | 7 | 4 | 6 | 9 | 2 | 3 | 5 | 8 |
| 6 | 9 | 3 | 8 | 7 | 5 | 4 | 1 | 2 |
| 2 | 5 | 8 | 1 | 4 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 6 | 9 | 5 | 8 | 1 | 7 | 4 |
| 7 | 8 | 5 | 4 | 2 | 1 | 9 | 6 | 3 |
| 9 | 4 | 1 | 3 | 6 | 7 | 2 | 8 | 5 |



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**இடபம்:** உங்களின் எதார்த்தப் பேச்சு பிறரைச் சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுகளுக்குத் திண்டாட நேரிடலாம்.

**மிதுனம்:** குடும்பத்தினரிடம் விவாதம் செய்ய வேண்டாம். திட்டமிட்ட பணிகளைத் தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**சிங்கம்:** நல்லவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** வீண் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். விஷப் பிராணிகளிடம் விலகுவது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். உறவினர்களுக்கு உதவிகள் செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி அளிக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**தனுசு:** குடும்பச் சிரமத்தைப் பிறரிடம் சொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் வரு மானம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**மகரம்:** மனச்சாட்சிக்கு முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணி ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** காலத்தின் அருமை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். நிலுவைப் பணம் விடாமுயற்சியால் வசூலாகும். உடல்நலனில் அக்கறை தேவை.


**மீனம்:** மனதில் இருந்த தயக்கம் விலகும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.



# சமந்தாவுக்கு விரைவில் திருமணம்

நடிகை சமந்தா தமிழ் தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் நடிகையாக வலம் வருகிறார். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவுடன் அவருக்கு நிச்சயதார்த்தம் முடிந்தது. திருமணத் திகதி வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டு பேருக்குமே சில படங்கள் கையில் இருந்ததால் உடனே அறிவிக்க முடியவில்லையாம். தற்போது இவர்களின் திருமணம் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என்று நாக அர்ஜுனா தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. திருமணத்துக்கான ஏற்பாடுகள் தொடங்கிவிட்டதாகத் தெலுங்கு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இனி எப்படி இந்த ரான்சம்வர் வைரஸ் தாக்குதுன்னு பாத்துருவோம்




ஆண்கள் நல்ல தோழர்களை இழப்பது மனைவிக்குப் பயந்துதான்...



மனைவி தன் அழகிய தோழிகளை தவிர்ப்பதும் கணவனுக்குப் பயந்துதான்...

பர்ஸ்சில இருக்கிற பணத்தை எல்லாம் புடுங்கிக்கிட்டு...




புதுசா இன்னொரு காலி பர்ஸ்ச பரிசாக் குடுத்து வெறுப்பேத்துறான் "நகைக்கடைக்காரன்"

WhatsApp

ஓர் எழுத்தில் கவிதை சொல்லவா?
............நீ,
ஈரெழுத்தில் கவிதை சொல்லவா?
............நாம்,
மூவெழுத்தில் கவிதை சொல்லவா?
..........காதல்,
நான்கெழுத்தில் கவிதை சொல்லவா?
.......முத்தம்,
ஐந்தெழுத்தில் கவிதை சொல்லவா?
.........திருமணம்,
ஆறு எழுத்தில் கவிதை சொல்லவா?
.........விவாகரத்து...



kawsika @Bubbly_
ஒரு பெண்ணின்
அமைதிக்குப் பின்னால்
அழிக்க முடியாத காயங்கள்
உணர முடியாத வலிகள்
இருக்கும்

கணவன்: ஏண்டி எப்போ பார்த்தாலும் கோபமா எரிஞ்சு விழுற?



மனைவி: நீங்க தானே சொன்னீங்க! கோபப்படுறப்ப நான் ரொம்ப அழகா இருக்கேன்னு...!

## மூன்று...

இதனை அடுத்து மிக விரைவில் வழக்கு விசாரணைகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்குச் சென்றவேளை கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்பு படுகொலை செய்யப்பட்டார். மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் அரச சாட்சியாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் உறுதியுரை செய்தார். மேலும் இருவர் வழக்கோடு தொடர்புபட்டவர்கள் அல்லர் என்ற அடிப்படையில் அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய 9 சந்தேகநபர்களும் கடந்த இரண்டு வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன. வழக்கில் 23 பேர் சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

9 சந்தேகநபர்களுக்கும் எதிரான குற்றப்பத்திரிகை கடந்த 12ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது தற்போது மேல் நீதிமன்றப் பதிவாளரின் பாதுகாப்பில் இருப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை தீர்ப்பாய முறையில் நடத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களம் கோரியிருந்தது. அதன்படி பெரும்பான்மை இன மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் கொழும்பில் அதனை நடத்துவதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டது. எனினும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மற்றும் யாழ்ப்பாணம் தீவக மக்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளையடுத்து வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தமிழ்பேசும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இடம்பெறும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை யாழ்ப்பாணத்தில் நடத்த வலியுறுத்தி அடையாள உணவு ஒறுப்பு உள்ளிட்ட கவனவீர்ப்புப் போராட்டங்கள் புங்குடுதீவு மக்களாலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாலும் நடத்தப்பட்டிருந்தன.

இதேவேளை, புங்குடுதீவு மாணவி படுகொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 12ஆம் திகதிவரை நீடித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடிப்பது தொடர்பான விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. சந்தேநபர்கள் 10 பேரும் அநுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க அரச சட்டவாதி மன்றில் ஆட்சேபனை தெரிவித்தார்.

"சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த 12ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது. குற்றப்பத்திரிகை தற்போது மேல் நீதிமன்றில் இருப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்த வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடத்தவே சட்டமா அதிபர் திணைக்களம் விரும்புகின்றது. கடந்த 15ஆம் திகதி சட்டமா அதிபர் மற்றும் பிரதி மன்றாடியார் அதிபதி ஆகியோர் தலைமை நீதியரசரை நேரில் சந்தித்து இது தொடர்பில் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

எனவே சந்தேகநபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கோருகிறேன்" என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அரச சட்டவாதியின் விண்ணப்பத்தைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், சந்தேகநபர்களை எதிர்வரும் 12 திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு இட்டார்.

அத்துடன், அதற்கு முன்னர் ட்ரயல் அட் பார் தீர்ப்பாயம் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டால் நீதிபதிகள் கூறும் திகதியில் அவர்கள் கூறும் நீதிமன்றில் சந்தேகநபர்களை முற்படுத்த வேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மன்று உத்தரவிட்டது. (வ-37)

## ஞானசார தேரர்...

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநாகலில் முஸ்லிம் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கிறோம். இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பானவர் யார் எனத் தெரிந்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. முஸ்லிம் மக்களைக் குறிவைத்து நான்காவது தடவை தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற காலங்களில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் இடம்பெற்றபோதிலும் அவை பெரியளவில் பேசப்படவில்லை. ஏனெனில் அப்போதைய அரசு தமிழ் மக்களைப் பிரித்தாள்வதற்காக முஸ்லிம் மீதான எதிர்ப்பு நிலையை கட்டுப்படுத்தியது.

முஸ்லிம்கள் இப்போது அரசுக்குச் சவாலாக இருப்பதால் அவர்களை குறிவைத்து நன்கு திட்டமிட்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிங்கள தேசியவாதம் தமிழ் மக்களை அழித்துக் கொண்டிருந்தபோது முஸ்லிம் அரசியல் தலைமைகளோ அல்லது முஸ்லிம் மக்களோ தமிழர்களின் போராட்டத்தைப் பலப்படுத்தும் நோக்கில் சிந்திக்கவில்லை. மாறாகச் சிங்கள அரசுடன் சேர்ந்து நின்றார்கள் அல்லது ஒதுங்கி நின்றார்கள் எனத் தமிழ் மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

அப்படியான சமூகத்துக்கு எதிராக தற்போது இனவாதச் செயற்பாடு நடைபெறுகின்றது என்றால் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். தமிழர்கள் 80 களில் பொருளாதார ரீதியில் எவ்வாறு முன்னிலையில் இருந்தார்களோ அதேபோல தற்போது முஸ்லிம் சமூகம் பொருளாதாரத்தில் முன்னிலையில் இருப்பதால் அந்த இருப்பு தமக்கு ஆபத்து என நினைத்து சிங்களப் பேரினவாதம் தாக்குதல்களை தொடங்கியுள்ளது. முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டிக்க தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (த-8)

## யூத...

தெரிவித்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலு வலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் மக்களுக்குப் பொய் வாக்குறுதி களைக் கொடுத்து அதிகாரத்துக்கு வந்தவர்களுக்கு முள்ளிவாய்க்கால் நிகழ்வில் மக்கள் தக்க பாடம் கற்பித்துள்ளனர். துரதிர்ஷ்டவசமாக அந்த நிகழ்வை நடத்தியவர்கள் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல் எடுபிடிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருந்தவேளை அந்த எடுபிடிகளை மக்கள் சிலர் இனம் கண்டு அம்பலப்படுத்தியிருந்தார்கள்.

அத்துடன் அந்த நிகழ்வில் சம்பந்தனிடம் ஊடகவியலாளர் ஒருவர் மிகப் பொருத்தமான கேள்வியைக் கேட்டுள்ளார்.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது, போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த ராஜபக்சவுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என உரை நிகழ்த்தினார்.

அதுமட்டுமன்றி மாகாண சபைத் தேர்தல் நிறைவடைந்த தருணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் விடுதலைப்புலிகள் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளித்த விதத்தை அனைவரும் அறிவர். அந்த ஊடகச் சந்திப்பில் சம்பந்தன், தமிழீழ விடுதலைப்புலிகள் ஈவிரக்கம் இல்லாத பயங்கரவாத அமைப்பு. புலிகள் மகிந்த ராஜபக்சவைக் குறிவைப்பதற்கு முன்னர் என்னைக் குறி வைத்தனர். அதிலிருந்து அவர்கள் எவ்வளவு பயங்கரவாத அமைப்பு என விளங்கும் என்று கூறியிருந்தார்.

வடக்கில் வேலை தேடும் பட்டதாரிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், காணி உரிமையாளர்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்து நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். இந்த நிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை மக்களின் போராட்ட இடங்களுக்குக் கூட்டிச் செல்லாமல் தனது வீட்டுக்குக் கூட்டிச்சென்று அங்கு நுங்கு குடிக்கக் கொடுத்துச் சொந்தம் கொண்டாடியுள்ளார் சுமந்திரன். இதனை நான் வன்மையாகக் கண்டிகின்றேன் - என்றார்.

நீங்கள் பொன்னம்பலத்தின் சைக்கிளையே ஓடுகின்றீர்கள் என சம்பந்தன் கூறியமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன என ஊடகவியலாளர்கள் கஜேந்திரகுமாரிடம் வினவியபோது,

கூட்டமைப்பினரின் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு நாம் எதனையும் பாவிப்போம். அது இன்று சைக்கிளாக இருக்கலாம். காலப் போக்கில் அது காராகக் கூடக் இருக்கலாம். சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் வீட்டில் ஆதிக்கம் செலுத்தும்போது எல்லோருக்கும் சைக்கிளை வாங்கிக் கொடுத்து ஒரு வளமான எதிர்காலத்தை அமைப்போம்-என்றார். (த-8)

## சு.க.வும்...

கலந்து கொண்டிருந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தின் ஆரம்பத்தில் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தது. அரசமைப்புத் தொடர்பில் நேற்று (நேற்றுமுன்தினம்) தமது கட்சி ஆராய்ந்ததாகவும், இது தொடர்பில் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பதில் தமக்கு உடன்பாடில்லை என்று அந்தக் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இதன் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலில், அரச தலைவர் முறைமையை மாற்றியமைப்பது தொடர்பில் ஆலோசிக்கலாம் என்று கூறியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியோ (ஜே.வி.பி) நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. இந்த நிலைப்பாட்டிலிருந்து விலக முடியாது என்று குறிப்பிட்டுள்ளது. இதன் பின்னரான பேச்சுக்களில், அரச தலைவருக்குச் சில அதிகாரங்கள் இருக்கலாம் என்ற அளவுக்கு அந்தக் கட்சி விட்டுக் கொடுத்தது.

இதேவேளை மகிந்த அணி, அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்படுவதாக இருந்தால் நிறைவேற்று அரச தலைவர் முறைமை தொடர வேண்டும் என்று கூறியுள்ளது. இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நீங்கள் (தினேஸ் குணவர்த்தனவைப் பார்த்து) நிறைவேற்று அரசதலைவர் முறைமை கொண்டுவரப்பட்டபோது அதனை நீக்க வேண்டும் என்று கூறியிருந்தீர்கள். இப்போது ஏன் இப்படிப் பேசுகின்றீர்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு தினேஸ் குணவர்த்தன, அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுத்தோம் என்று பதிலளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், 2005 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புச் சார்பாக மகிந்த ராஜபக்ச போட்டியிட்டபோது நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்போம் என்றுதானே வாக்குறுதி கொடுத்தீர்கள். பின்பு 18ஆவது திருத்தச் சட்டத்தையும் கொண்டு அதற்கு ஆதரவாக வாக்கும் அளித்தீர்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு தினேஸ் குணவர்த்தன, ஏன் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாகவும் வாக்களித்துள்ளோம் தானே. அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்கின்றோம் என்று கூறியுள்ளார்.

புதிய அரசமைப்பு நாட்டுக்குத் தேவையில்லை என்றும், இது நாட்டைப் பிளவுபடுத்தும் என்று சாரப்பட மகிந்த அணியினர் வழிநடத்தல் குழுவில் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன்போது மக்கள் விடுதலை முன்னணி, நாட்டு மக்கள் ஆணை வழங்கியதே புதிய அரசமைப்புக்குத்தான். அதற்கு அமைவாக நாங்கள் செயற்பட வேண்டும் என்று பதிலடி கொடுத்துள்ளனர்.

வழிநடத்தல் குழு இன்றைய தினம் மதியம் 12.30 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடவுள்ளது. (த-5)

## நாட்டின்...

கொடுக்கப்பட்டுள்ள துடன், இது தொடர்பில் இன்றைய அமர்வில் இறுதி செய்யப்படும் என்றும் தெரிய வருகின்றது.

வழிநடத்தல் குழுவின் மரதன் அமர்வு நேற்று ஆரம்பமாகியது. இந்த அமர்வு இன்றும் தொடரவுள்ளது. இன்றைய அமர்வில் நாட்டின் சுபாவம் தன்மை தொடர்பில் பேசப்படவுள்ளது.

தற்போதைய இடைக்கால அறிக்கையின் வரைவில், ஐக்கிய ராஜ்ஜிய/ஒருமித்த நாடு என்று மூன்று மொழிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மூன்று வகையிலான வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஆட்சி முறைமையைக் குறிக்காமல், நாட்டின் தன்மை தொடர்பிலேயே இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இன்றைய அமர்வில் ஆராயப்பட்டு இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## பிக்குவுக்கு...

நிகழ்வை ஏற்பாடு செய்த முல்லைத்தீவு மாவட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எழில்றஜன் பொலிஸுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார். சட்டம் மதகுருமாருக்கும் இரு வேறு கோணத்திலேயே செயற்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டியுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி ஒதுக்கீட்டிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதம் தலைதூக்கியுள்ளது. அன்று தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறை இன்று முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. முஸ்லிம் வர்த்தக நிலையங்களும் வணக்கத் தலங்களும் தாக்கப்பட்டு வருகின்றன. இது கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

நினைவேந்தல் தினத்தன்று தெற்கில் இருந்து வந்த சிலர், கிளிநொச்சியில் சிங்கக் கொடியைப் பறக்கவிட்டுச் சென்றுவிட்டனர். சிங்கக் கொடி என்று சொல்வதற்கு மன்னிப்புக் கேட்கின்றேன். அதில் தமிழ், முஸ்லிம் இனங்களைக் குறிக்கின்ற நிறங்க்ள் அகற்றப்பட்டு சிங்கள மக்களைக் குறிக்கும் நிறம் மாத்திரமே காணப்பட்டது. அவர்கள் அந்தக் கொடியைக் கட்டுவதைப் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. இதில் என்ன நியாயம் இருக்கின்றது?

தேசியக் கொடியில் தமிழ், முஸ்லிம் மக்களை அடையாளப்படுத்தும் நிறங்களை அகற்றிவிட்டு தனிச் சிங்களக் கொடியை, தமிழர் பிரதேசத்தில் பறக்கவிட அனுமதிக்க முடியுமென்றால், தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரின்றிப் புலிக்கொடிகளை நாங்கள் ஏன் பயன்படுத்த முடியாது? - என்றார். (த-5)

## ஞானசார...

கைது செய்ய வேண்டும். ஞானசார தேரர் கைது செய்யப்பட்டால் நாட்டில் என்ன நடக்கும் என்பது தெரியாது.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துப் பொதுபல சேனா அமைப்பினர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக வெள்ளைத் துணியால் வாயைக் கட்டியவாறு நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தேரர்கள் கூறியதாவது:

ஞானசார தேரர் இனவாதமோ மதவாதமோ பேசவில்லை. அவர் தமது இனத்துக்கு எதிரான வேற்று இனத்தவரால் மேற்கொள்ளப்படும் இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராகவே குரல் கொடுத்தார். ஞானசார தேரரை விட இன, மதவாதம் பேசிய தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஈழம் சார்பான தனிப்பட்ட அரசியலை மேற்கொள்கின்றார். அசாத் சாலி ஞானசார தேரரை அடித்துக் கொல்லவேண்டும் என்கிறார். கிழக்கில் உள்ள இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும் என்று ஹிஸ்புல்லா கூறுகின்றார். காட்டையழித்து முஸ்லிம் குடியேற்றங்களை ரிசாத் பதியுதீன் ஏற்படுத்தி வருகின்றார்.

சிங்களவர்களாகிய நாங்கள் எதனையாவது கூறினால் இனவாதம் பேசுகின்றோம் என்கிறார்கள். இதற்குப் பின்னர் நாங்கள் எதனையும் கூற மாட்டோம். அதற்காகவே வாயில் வெள்ளைத் துணியை கட்டியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம்.

தமிழ் முஸ்லிம் இனவாதிகளுக்கு ஒரு நீதியும் ஞானசார தேரருக்கு ஒரு நீதியையும் நடைமுறைப்படுத்தவேண்டாம்.

நீதியை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமல் ஞானசார தேரருக்கு எதிராக செயற்பட்டால் என்ன நடக்கும் என கூறமுடியாது என்றனர். (த-5)



## ஞானமுருகன் மகுடம்

யாழ்ப்பாணம், மே 24

உடுவில் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனானது ஞானமுருகன் விளையாட்டுக் கழகம். கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது.

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் இளைஞர் அணியை எதிர்கொண்டு மயிலங்காடு ஞானமுருகன் இளைஞர் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. சாகீசன் அந்தக் கோலைப் பதிவசெய்தார். (ம-108)

## ஆவரங்கால் மத்தி. புத்தூர் கலைமதி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 24

திக்கம் சனசமூக நிலைய வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றன.

நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர் அணி. இரண்டாவது செற்றை 30:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது கலைமதி.

மூன்றாவது செற்றையும் 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கலைமதி தனதாக்கியது. நான்காவது செற் 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞரின் வசமானது. முதல் நான்கு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகளைப் பெற்றிருந்தன. இறுதி செற்றில் வெற்றிபெறும் அணியே இறுதிக்குச் செல்லும் என்ற நிலையில் அந்த செற்றை 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் த்குதிபெற்றது கலைமதி.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இளவாலை மத்தி கைப்பற்றியது. சரிவில் இருந்து மீண்ட ஆவரங்கால் மத்திய அணி அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:20, 25:14, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. (ம-108)

## தாய்லாந்துக்குச் செல்கிறார் யாழ். வீராங்கனை அனித்தா



யாழ்ப்பாணம், மே 24

தாய்லாந்து திறந்த தடகளத் தொடரில் கலந்துகொள்வதற்காகத் தாய்லாந்துக்குச் செல்லவுள்ளார் யாழ்ப்பாண மாவட்டக் கோலூன்றிப்பாய்தல் வீராங்கனை ஜெ.அனித்தா.

அடுத்த மாதம் 12ஆம் திகதியில் இருந்து 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து 8 பேரைக்கொண்ட குழு தாய்லாந்துக்குச்செல்லவுள்ளது. இந்தக் குழாமில் அனித்தாவும் இடம்பிடித்துள்ளார்.

அனித்தாவின் பயிற்சியாளரான சுபாஸ்கரன் இந்தக் குழாமின் பயிற்சியாளராகவும் செயற்படவுள்ளார்.

இந்த வருடம் நடைபெற்ற கோலூன்றிப் பாய்தல் போட்டியொன்றில் அனித்தா 3.45 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தேசியச் சாதனையாளராக வலம்வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)






## வேலணைக்கு தங்கப் பதக்கம்

கரணவாய், மே 24

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் வேலணைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ.மேரி அரோமினி தங்கப்பதக்கம் வென்றார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி இடம்பெற்றது. அரோமினி 31.6 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப்பதக்கம் வென்றார். உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.தர்மிகா 32.1 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப்பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. சகானா 33.3 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-108)

## அராலி சரஸ்வதி வித்தி. வலைப்பந்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 24

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் சம்பியனானது அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி வித்தியால அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 14:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது சரஸ்வதி அணி.

அந்த அணி தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து முடிவில் 32:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாம் இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி த்னதாக்கியது. (ம-422-23)

## நண்பர்கள், நசரேத் அணிகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 24

கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மற்றும் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் என்பன இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் சுதர்சன், 24ஆவது நிமிடத்தில் கீர்த்திகன் இருவரும் கோல்களைப் பதிவுசெய்ய முதல்பாதியின் முடிவில் நண்பர்கள் அணி 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியில் நண்பர்களின் கோல் கணக்கை மூன்றாக உயர்த்தினார் கிசோக் குமார்.

இறுதி நிமிடத்தில் இளைஞர் அணியின் கோலைப் பதிவுசெய்தார் ரசிலன். முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் நண்பர்கள் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் நசரேத் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)



மாகாண மட்ட வலைப்பந்தாட்டம்

## 16 வயதுப் பிரிவிலும் அராலி சரஸ்வதி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 24

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பிரிவில் சம்பியனானது அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 9:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வலுவான ஆதிக்கம் செலுத்தியது சரஸ்வதி வித்தியாலய அணி.

இரண்டாம் பாதியிலும் ஆதிக்கத்தைத் தொடர்ந்த அந்த அணி முடிவில் 17:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-422-23)

# உடுவில் வென்றது தங்கம்

கரணவாய், மே 24
யாழ்ப்பாண பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் உடுவில் பிரதேச செயலகத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றன.
ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். சிறிதனுசன் 25.2 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். காரைநகர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.கோகுலன் 25.6 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி.அருள்ராஜ் 25.7 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)






# மெதடிஸ்த பெண்கள் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 24
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி கிண்ணம் வென்றது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 12:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது மெதடிஸ்த பெண்கள் அணி. இரண்டாம் பாதியும் மிகவும் போராட்ட கரமாக அமைந்தது.
முடிவில் 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது மெதடிஸ்த பெண்கள் அணி. (ம-422-23)

# சண்டிலிப்பாய்க்கு தங்கப்பதக்கம்

கரணவாய், மே 24
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே.கிருசாந்தி 2 நிமிடங்கள் 27 செக்கன்களில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றன. சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஐ.பவித்திரா 2 நிமிடங்கள் 55 செக்கன்கள் 3 விநாடிகளில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சோபிதா 3 நிமிடங்கள் 6 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 24
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# சர்ரேயில் இருந்தும் சங்கா ஓய்வு



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கா முதல்தர ஆட்டங்களில் இருந்தும் தனது ஓய்வு முடிவை அறிவித்தார்.
கடந்த 2015ஆம் ஆண்டு பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார் சங்கா. அதன் பின்னர் அவரை இங்கிலாந்தின் கழகமான சர்ரே ஒப்பந்தம் செய்தது. அன்றில் இருந்து இன்று வரை சர்ரேக்காக சங்கா மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்த நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் சர்ரே அணியில் இருந்தும் ஓய்வுபெறும் முடிவை சங்கா நேற்று அறிவித்தார்.
"எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள இங்கிலாந்து பிராந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் பின்னர், முதல்தர ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற எண்ணியுள்ளேன்.
இன்னும் சில மாதங்களில் எனக்கு 40 வயதாகின்றது. விளையாட்டு வீரர்களுக்கு, ஓய்வுக்கான நாளொன்றுள்ளது. அதுவரும்போது விலகிச் செல்லவேண்டும்" என்று சங்கா தெரிவித்தார். (ம)




## பங்களாதேஷின் துருப்புச்சீட்டு ரகுமான்

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் பங்களாதேஷ் கலந்து கொள்கிறது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் மேற்கிந்தியத் தீவுகளைப் பின்தள்ளி அதை வெளியேற்றிவிட்டு அந்த இடத்தைப் பிரதியீடு செய்துள்ளது பங்களாதேஷ். இதனால் அந்த அணி மீது அதிகளவில் எதிர்பார்ப்பு இருக்கவே செய்கிறது.
பங்களாதேஷைப் பொறுத்தவரை அதன் துருப்புச்சீட்டாக வேகப் பந்துவீச்சாளர் ரகுமான் இருப்பார். இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதும் திரும்பல் தன்மையுடையதாகவும் இருக்கும். இத்தகைய ஆடுகளங்களில் வீசுவதில் ரகுமான் வல்லவர் என்பதால் இவரின் துணையுடன் ஏதேனும் ஓர் பெரிய அணிக்கு நிச்சயம் பங்களாதேஷ் அதிர்ச்சியளிக்கும்.
இலங்கைக்கு எதிரான டெஸ்ட் ஆட்டம், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டம் என்பவற்றில் வெற்றிபெற்று தன்னை கத்துக்குட்டி அணியென்ற நிலையில் இருந்து உயர்த்தியுள்ள பங்களாதேஷ் அதற்கேற்ற ஆட்டத்தை நிச்சயம் வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.
பங்களாதேஷ் அணி விவரம் – மோர்ரசா (தலைவர்), மகமதுல்லா, மொஸ்டாக் கொசைன், ரகுமான், சபிர் ரகுமான், சகிப் அல் ஹசன், இஸ்லாம், தஸ்கின் அகமட், கைய்ஸ், மெகடி ஹசன், ரகிம் (இலக்குக் காப்பாளர்), ரூபல் கொசைன், இஸ்லாம், சர்க்கர், இக்பால் (ம)



# அகவை நாற்பத்தொன்பதில் காலடிபதிக்கும் சைவமணி ஐயாவின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி



'தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதிலாருக்குதோன்றலில் தோன்றாமைநன்று'

என்ற வாக்கிற்கு ஏற்ப உதட்டளவில் மட்டும் சைவம்,- தமிழ் மொழிவளர்ச்சிபற்றி மேடை போட்டுபேசி வரும் காலகட்டத்தில் அவற்றின் உன்னத வளர்ச்சிக்கு பாடு படும் ஒரு சில பேரின் இவர் முதன்மையானவர். நல்ல நகர் நாவலர் எவ்வாறு சைவசமயத்தின் சிவசின்னங் களைத் தாங்கி மான சீகமாக சைவசமய. மற்றும் தமிழ்மொழி வளர்ச்சியில் பங்கெடுத்தாரோ அதேபாணி யில் சிவசின்னம் அணிந்திருந்து நாவலர்பெருமான் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சற்சங்க சபை போன்று ஏன் அதை மிஞ்சும் அளவில் யாழ். காரைதிரு. திருமதி சண் முகம் மனோன்மணி ஞாபகர்த்த சற்சங்கசபையை நிறுவி மூல காரணமாக இருந்தவர்தான் சைவமணிதிரு. செல்வ சண்முகரத்தினம் (சண்முகம்) இச்சபை மூலம் குறுகிய காலப் பகுதியில் 'சற்சங்க சபை'ஆற்றிய அறப்பணிகள் பற்பல இவற்றிற்கு உந்து சக்தியாக மூல காரணகர்த்தாவாக இருப்பவர் சைவமணி ஐயா அவர்கள் தான். இவர் ஆற்றியபணிகளில்

O. மாணவர் சார் கல்வி நலன்புரித்திட்டம்
O. விஷேட தேவைக்குட்பட்டோர் நலன் புரித்திட்டம்
O. வசதியற்றோர் வாழ்வாதாரத்திட்டம்
O. சைவஅறநெறிக் கல்விவளர்ச்சித்திட்டம்

HAPPY Birthday!

இன்றும் பற்பல இவரின் சேவைகளைப் பாராட்டி ஐம்பதிற்கும் மேற்பட்ட கௌரவப்பட்டங்களை பல்வேறு சமயசார் நிறுவனங்கள். தமிழ்மொழிசார் அமைப்புக்கள் போன்றனவழங்கியுள்ளன. அவற்றுள் **சைவமணி. சோதிட மணி. சற்பிரசங்கவாரிதி. சமூகசேவகமாமணி. அறப்பணிச் செல்வேள். சிவ-நெறிக்காவலர்** முக்கியமானவை. இவர் உலக சைவத் திருச் சபையின் இலங்கைக்கான தலைவரா-கவும். சைவ அறப்பணிமன்ற இலங்கைக்கான தலைவராகவும் யாழ். காரைதிரு. திருமதி. சண்முகம் மனோன்மணி ஞாபகர்த்த சற்சங்கசபையின் அமைப்பாளராகவும் திகழ்கின்றார். இவரை பல் லாண்டுகாலம் சீரும் சிறப்புமாகவாழ உள்ளம் நெகிழ வாழ்த்துகின்றோம்.

**திரு. கு. சரவணபவானந்தன்**
முன்னாள் வேலணை
கோட்டக் கல்வி அதிகாரி.
சைவ. அறப்பணி
மன்றசெயலாளர்

**திரு. சி. உமாசிவம்**
சமூகசேவகமாமணி
சற்சங்கசபை

**திருமதி ம. தனலட்சுமி**
நிர்வாக உறுப்பினர்
சற்சங்கசபை

**திரு. மார்க்கண்டு சிவஞானம்** கலாபூசணம்
தலைவர் சற்சங்கசபை

**திரு. ச. சிவஞானம்**
ஸ்தாபகர் சற்சங்கசபை

**திரு. ஆ. நந்தகுமார்**
பிரதம இணைப்பாளர்
சற்சங்கசபை

**திரு. தனபாலசிங்கம்**
(கவிஞர்)

**திரு. திருமதி. விவேகானந்தன் ஜாமினி**
வாழும்கலை அமைப்பு-வவுனியா.







# சம்பியன்ஸ் கிண்ணத்தில் கலக்குவார் பும்ரா

"இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள மினி உலகக்கிண்ணத் தொடரில் பும்ரா இந்திய அணிக்கு மிகவும் பலமாக இருப்பார்" இவ்வாறு தெரிவித்தார் நியூசிலாந்து அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பொன்ட். "ஆட்டத்தின் இறுதிக்கட்டப் பந்துப்பரிமாற்றங்களில் மிகச் சிறந்த முறையில் பும்ரா பந்துவீசுகிறார். திரும்பல் தன்மையுடையவையாக இங்கிலாந்து ஆடுகளங்கள் உள்ளன. இவற்றில் பும்ராவின் பந்துவீச்சு மிகச் சிறந்த முறையில் எடுபடும். இதனால் இந்திய அணியின் பெரும் பலமாக அவர் இருப்பார். அவரை எந்தெந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதை கோக்லி சரியாகப் புரிந்து வைத்திருந்தல் அவசியம்" என பொன்ட் மேலும் தெரிவித்தார். நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணம் வெல்ல பும்ரா முக்கிய காரணமாக இருந்தார். மும்பை அணிக்கு பொன்ட் பந்துவீச்சுப் ப்யிற்சியாளராகச் செயற்பட்டார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பொன்ட் இவ்வாறு குறிப்பிட்டார். சகல் துறை வீரர் பாண்டியா மீதும் பொன்ட் நம்பிக்கை தெரிவித்தார். (ம)







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.